

கல்கி
குடும்பத்துடன் களிக்க...
KALKI
2.4.2006 ரூ.8.00
80 பக்கங்கள்
ஜோ மீது
பொறாமை!
ஆயிரம் சீட்கூட போதாது!
தலை தப்புமா?

பட்டியல்

தமிழ் சினிமா ஹீரோக்களின் பரம்பரைத் தொழிலான ரௌடியிஸம்தான் ஆர்யா, பரத் ரெண்டு பேருக்குமே தெரிஞ்ச கைத்தொழில். இடது கையால காசு வாங்கி, வலது கையால காரியத்தைக் கச்சிதமா முடிச்சிடுவாங்க. பிழைப்பு கொடுத்த வன்முறை, கடைசியில எப்படி அவங்களுக்கு எதிரா திரும்புதுங்கிறது தான் கதை.

படத்தோட தொழில்நுட்பக் குழு மிரட்டியிருக்கு. மேக்கிங்ல புது ஸ்டைல். ஆக்ஷன் காட்சிகளால திகிலூட்டும் தியாகராஜனும், அதுக்குத் தோதா கோணங்கள் அமைச்ச ஒளிப்பதிவாளர் நிரவ்ஷாவும் படத்தோட பெரிய பலம். ரௌடிகள் புழங்குற இடங்களை கலை இயக்குநர் அச்சு அசலா திரையில கொண்டு வந்திருக்காரு. யுவன்சங்கர் ராஜாவின் பெயர் திரையில் தெரிந்தவுடனே பிகிலு பறக்குது. பாடல்கள் நிறைவு.

தன்னை துரத்தித் துரத்தி காதலிக்கிற பத்மபிரியாகிட்ட ஆர்யா நடத்துற செல்லமான அழிச்சாட்டியங்கள் நல்ல கலகலப்பு. ஊமைக் கதாபாத்திரம்ங்கிறதால முகபாவங்கள்ல ஸ்கோர் பண்ணியிருக்காரு பரத். முதன்முதலா துப்பாக்கியை கையில ஏந்திக்கிட்டு ரெண்டு பேரும் பயிற்சியெடுக்கிற டுமீல் காட்சிகள் அசத்தல். எந்தப் பின்புலமும், ஆள்பலமும் இல்லாம, குடிசைத் தொழில்போல ரௌடியிஸத்தை ஆர்யாவும் பரத்தும் செய்யறது கேள்வி எழுப்புது. டஜன் கொலைகள் நடந்தும் ஒரு காட்சியில்கூட காக்கி யூனிஃபார்ம் தென்படலை. படத்தின் முதல் பாதி வரைக்கும் யார் பிரதான வில்லன், யார் யார் உபரி வில்லன்கள்னு புரியறதுக்குள்ள மண்டை காய்ஞ்சுடுது.

பத்மபிரியா, பூஜாவை ஆடல் பாடல்களுக்காக மட்டும் பயன்படுத்தாதது நிம்மதி. பூஜாவுக்காக பரத் திருந்தி வாழ நினைக்கறது, பத்மபிரியாவை பாலியல் பலாத்காரம் செய்றவனை துவம்சம் செய்யப்போய் சிக்கலில் மாட்டும் ஆர்யான்னு திருப்பங்கள் நாயகிகளாலதான் ஏற்படுது.

கத்தியைத் தொட்டவன் அதே கத்தியால செத்தாலும்கூட சமூகத்துல விஷச் செடிகளுக்கு யாராவது ஒருத்தர் தண்ணி ஊத்தி, போஷாக்கா வளர்த்துக்கிட்டுத்தான் இருப்பாங்கங்கிற நிதர்சனம், இறுதிக் காட்சிகள்ல மறக்காம பதிவு செய்யப்படுது. தமிழ் சினிமாவை புதுப்பாதையில அழைச்சுட்டுப் போயிருக்கிறார் இயக்குநர் விஷ்ணுவர்தன். சபாஷ்!

- லஜ்ஜாவதி





ஆரம்பமே ஜோர்!

காலைச் சுத்தின பாம்பு கடிக்காமல் விடாது என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டியது பயங்கரவாதம் பற்றின கார்ட்டூன்.
கொத்தாம்பாடி, ராமசேஷன்

ஐஸ்வர்யா ரவியின் பேச்சில் நல்ல முதிர்ச்சியும் கைதேர்ந்த அனுபவமும் தெரிந்தது.
கத்திருப்பம், க.மோ.சிவா

கொழுந்து விட்டெரியும் காஷ்மீர் பிரச்னைக்குத் தேவை நிரந்தரத் தீர்வு. பயங்கரவாதத்தை வழிக்குக் கொண்டு வர, உருட்டல் மிரட்டலைவிட, காந்தியின் அன்பு வழியே அவசியம்.
திருச்சி, இ.முகம்மது உசேன்

அமெரிக்க அதிபர் வந்ததால்தான் இங்கு குண்டுவெடிப்பு நடந்தது என்று கூறுவது நகைப்புக்கிடமானது. இஸ்லாம் Vs அல்லாதவர் என்ற பிரச்னை அமெரிக்கர்களால் ஏற்படுத்தப்பட்டு வருகிறது என்பது ஏற்க முடியாதது. இன்றுள்ள அரசியல் நிலையில் அன்பு மார்க்கத்தை நிலைநாட்டிவிட முடியும் என்பது எதிர்பார்க்கக்கூடியதல்ல. தீவிரவாதங்களை ஒடுக்கத் தீரம்தான் தேவை. அன்பு, அஹிம்சையல்ல.
உள்ளிக்கடை, ஜி.ராமதாஸ்

சிவாஜி படம் பற்றின தகவல்கள் ரசிகர்களுக்கு விருந்து.
சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்

கதையை கதையாய் எழுதுவதில் உள்ள கஷ்டத்தை கல்கி அவர்கள் விவரித்திருந்த விதம் ஆஹா!
பொன்மலை, ஆர்.பிரகாஷ்



ஸ்வீட் போஸ்ட்!

'விடை பெறுகிறார் தகவல் தாத்தா' படித்ததும் மனம் என்னவோ செய்தது. கடின உழைப்புக்குப் பரிசாக எதையும் செய்ய மனதில்லாத சினிமாக்காரர்கள் மீது கோபம் வந்தது.
தூத்துக்குடி, அ.அப்துல்காதர்

வைகோ பேட்டி, கராத்தே தடாலடி, கல்கியில் படித்திட வீட்டில் அடிதடி!
உசிலம்பட்டி, கருணையானந்தம்

மிஷ்கினைப் பற்றிப் படித்தபோது கோடம்பாக்கத்தில் மீண்டும் ஒரு சேரன் தோன்றியுள்ளது உறுதியானது!

நெய்வாசல், *வி.எஸ்.விஜயமாறன்*

'**உ**லகை உலுக்கிய குற்றங்கள்' தொடர் மனிதனின் இருண்ட பக்கம் பற்றின கேள்விகளை எழுப்பியுள்ளது.

சென்னை, *கே.வி.ராமன்*

'**சு**பம்' கணேசனின் சக்ஸஸ் ஸ்டோரி அவர்



தயாரிக்கும் பதார்த்தங்களைப் போலவே சுவையாக இருந்தது.

சென்னை, *சி.பரத்*

நிகழப்போகும் அறிவியல் அற்புதங்களை வெளிச்சமிட்டுக் காட்டவுள்ள சுஜாதாவின் தொடர் ஆரம்பமே ஜோர்.

ஈரோடு, *ரேவதிப்ரியன்*

மாணவச் செல்வங்களுக்கு, பரமாச்சாரியார் அருளிய அறிவுரை நல்முத்து.

சென்னை, *பா.கண்ணன்*



தையல் மிஷின் தந்து வோட்டுப் பெறும் முயற்சி பற்றின கார்ட்டூன் சூப்பரோ சூப்பர். ஆனால் - அவமானமாக இருக்கிறது.

செங்காடு, *செ.ஆ.கிருஷ்ணமூர்த்தி*

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
ஆர்.சி. ஜெயந்தன்
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

"எங்களுக்கு சீட்கூ



'**நீ**ச்' பதில்களுக்குச் சொந்தக்காரரான மத்திய ஜவுளித்துறை இணை அமைச்சர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன். சமீப காலமாக அமைதி காத்து வருகிறார். தொகுதிக்கும், டெல்லிக்கும் மாறி மாறிப் பறந்து கொண்டிருந்தவரை சென்னையில் மடக்கினோம். அவருடனான விறுவிறு சந்திப்பிலிருந்து...

வைகோ உங்கள் கூட்டணியை விட்டு விலகியதால் உங்கள் அணி பலவீனமாகிவிட்டதா?

"வைகோ போனதால் எங்கள் அணிக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், அவரது தாவலுக்குப் பிறகு எங்கள் அணித் தோழர்கள் முன்னிலும் உத்வேகமாகவும், எழுச்சியுடனும் செயலாற்றத் துவங்கிவிட்டனர்."

'கலைஞர் குடும்ப நலனை மனத்தில் வைத்துத்தான் செயல்படுகிறார்' என்ற அடிப்படையில் வைகோ பிரசாரம் செய்யப்போகிறாராமே!

"பலர் இதுபோன்ற விமர்சனங்களை கலைஞர் மீது ஏற்கெனவே வைத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் தாண்டித்தான் இத்தனை ஆண்டு காலம் மூத்த தலைவர் கலைஞர் அரசியல் நடத்தி வந்திருக்கிறார். எனவே வைகோ சொல்லப்போவது ஒன்றும் புதிதாக இருக்காது. அவர் இப்போது எதற்குச் சொல்கிறார் என்றால், அப்படிச் சொல்வதன் மூலம் ஜெயலலிதா அம்மையாரின் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் பெற முடியுமே!"

வைகோவும் விடுதலைச் சிறுத்தையும் சேர்ந்த பிறகு அ.தி.மு.க. அணி பலமாகிவிட்டதா?

"உதிரிக் கட்சிகள் சேர்ந்ததால் கூடுதல் பலம் அ.தி.மு.க. அணிக்கு வரவில்லை. மாறாக மேலும் பலவீனமடைந்து வருகிறது. ஜெயலலிதா மக்களோடு கூட்டணி என்றார். இப்போது அவரால் ஏற்கெனவே 'மக்கள் விரோத சக்திகள்' என்று சொல்லப்பட்டவர்களோடு கூட்டு சேர்ந்திருக்கிறார். இந்த சந்தர்ப்பவாதம் மக்களிடையே சரிவைச் சந்திக்கும்."

சலுகைகள் ஜெ.வுக்குச் சாதகமாக வேலை செய்யாதா?

"இந்த ஏமாற்று முயற்சிகளை மக்கள் நன்கு புரிந்து வைத்திருக்கிறார்கள். ஜெயலலிதாவின் முகமும், குணமும் தமிழக மக்களுக்கு நன்றாகவே தெரியும்."

உங்கள் அணி பிரசாரம் எப்படி அமையும்?

"கடந்த பதினெட்டு மாதங்களில் மத்திய அரசு, தமிழகத்துக்குச் செய்துள்ள பல்வேறு நன்மைகளைப் பட்டியலிட்டு பிரசாரம் செய்வோம். அதேசமயம், ஜெயலலிதாவின் தலைமையில் தமிழகம் எவ்வளவு பின்னோக்கிச் சென்

ிருக்கிறது என்பதையும் விளக்குவோம்."

ஸ்டாலின்தான் னக்குப் போட்டி ன்பது போன்ற ஒரு தோற்றத்தை உரு வாக்கி ஜெயலலிதா பிரசாரம் செய்யக் கூடும் என்கிறார் களே?

"அதுபோன்ற பிர சாரம் எல்லாம் திசை திருப்பும் விவகாரம் என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள்."



தமிழகத்தில் வரும் தேர்தலுக்குப் பிறகு கூட்டணி ஆட்சி தானா?

"கூட்டணி ஆட்சி பற்றியெல்லாம் இப் போது பேச வேண்டி யது இல்லை. தேர் தலுக்குப் பிறகு பார்க் கலாம். டாக்டர் கலை ஞர் தலைமையிலான எங்கள் கூட்டணி மாபெரும் வெற்றி பெறும். முதலமைச்சர் யார் என்பதை அவர் முடிவு செய்வார்."

"இருந்தபோதும் கட்சிக்குப் பயனில்லை... இப்போதும் இழப்புமில்லை!"



ஆயிரம் போதாது!"

காங்கிரசுக்கு 48 சீட்டுகள் திருப்தி தானா?

"போதுமா, இல்லையா என்ற விவகாரத்தில் நான் இறங்க விரும்பவில்லை. 48 சீட்டுகள் என்று சொல்லப்பட்டு, அதை நாங்களும் ஏற்றுக்கொண்ட பிறகு, இனி அணியின் வெற்றியைப் பற்றித்தான் சிந்திக்க வேண்டுமே தவிர வேறெந்த சிந்தனையும் கூடாது."

பல்வேறு கோஷ்டிகளை இந்த 48 சீட்டுகளின் மூலம் திருப்திப் படுத்த முடியுமா?

"ஆயிரம் சீட்டுகள் கொடுத்தாலும் கூட எங்களுக்குப் போதாது. அது வேறு விஷயம். கிடைத்திருக்கும் இந்த 48ஐ வைத்து எல்லா தரப்பினரையும் திருப்தி படுத்த முடியும் என்று நம்புகிறேன்."

ஆட்சியில் பங்கு என்று முன்பு பேசினீர்களே!

"கடந்த காலத்திய நிகழ்வுகளைப் பற்றி பேச விரும்பவில்லை."

கலைஞரிடம் நீங்கள் மன்னிப்புக் கேட்டதாக நெல்லை கண்ணன் சொல்கிறாரே!

"நெல்லை கண்ணன் இப்போது காங்கிரஸில் இல்லை. பொய்யான விஷயங்களைச் சொல்கிறார். போயஸ் தோட்டத்தில் சேவகம் செய்யப் போய் விட்டவரிடமிருந்து வேறென்ன எதிர்பார்க்க முடியும்?"

'தேர்தல்வரைதான் கிருஷ்ணசாமி தலைவர். அதன் பிறகு மாற்றி விடுவார்கள்' என்று சில காங்கிரஸ்காரர்கள் சொல்கிறார்களே!

"எல்லோரையும் அனுசரித்துச் செல்கிறார் கிருஷ்ணசாமி. அவருக்கும் முழு ஒத்துழைப்பு கிடைக்கிறது. தேர்தலுக்குப் பிறகும் அவர் தொடர்ந்து நீடிப்பார்."

திண்டிவனம் ராமமூர்த்தி பிரிந்து சென்றதால் காங்கிரஸ் வோட்டு வங்கி பாதிக்கப்பட்டிருக்கிறதா?

"அவர் இருந்தபோதும் கட்சிக்கு எந்தப் பயனும் கிடையாது. இப்போதும் எந்த இழப்பும் இல்லை."

- ப்ரியன்

படங்கள் : ஸ்ரீஹரி



"ஒரு பொருளுக்கு விளம்பரம் தேவையா? தேவை என்றால் அது எப்படி இருக்க வேண்டும்? ஒரு விளம்பரம் எதைச் சொல்லுகிறது என்பது முக்கியமா? எப்படிச் சொல்லுகிறது என்பது முக்கியமா? இப்படி விளம்பரங்கள் குறித்து பற்பல விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் ஒரு விளம்பரம் எப்படி இருக்க வேண்டும்? உண்மையைச் சொல்ல வேண்டும். சுவாரஸ்யமாய்ச் சொல்ல வேண்டும். வித்தியாசமாய்ச் சொல்ல வேண்டும். கொஞ்சம் நகைச் சுவை கலந்து இருத்தல் உத்தமம். விளம்பரத்தில் கண்டிப்பாக இருக்கக் கூடாதது ஒன்று - அதுதான் பொய்!" என்று ஒரு நல்ல விளம்பரத்துக்குண்டான லட்சணத்தை விளக்கினார் கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளையின் அறங்காவலர்களுள் ஒருவரான ராம்நாராயண். கல்கி சதாசிவம் நினைவு விருது வழங்கும் விழா வரவேற்புரை ஆற்றிக் கொண்டிருந்தார் அவர்.

* பாரதி பாஸ்கர்



கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளை ஆண்டுதோறும் தமிழ்ப் பத்திரிகைகளில் இடம்பெறும் மிகச் சிறந்த விளம்பரம் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து, அதனை உருவாக்கிய விளம்பர நிறுவனத்துக்கு பத்தாயிரம் ரூபாயும் பாராட்டுப் பத்திரமும் வழங்கி வருகிறது.

இவ்வாண்டு விருதுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விளம்பரம் தொண்ணூறு வருஷங்களாய் சேவை செய்துவரும் கரூர்



தனிப்பெரும் தலைவன்!



• அமைச்சருக்கு கௌரவம் செய்கிறார் கல்கி நிறுவன இயக்குனர் வி.முரளி

• விருது பெறும் சீனிவாசன் சுவாமி





• உதவித் தொகை பெற்ற மாணவிகள்...



• நடராஜனுக்கு நினைவுப் பரிசு...



• விருது பெறும் விளம்பரம்

வைஸ்யா வங்கிக்காக, ஆர்.கே. ஸ்வாமி பி.பி.டி.ஓ. நிறுவனம் உருவாக்கியது. பச்சைப் பசேல் என்ற சூழ்நிலையில் குழந்தைகள் சிலர் துள்ளிக் குதித்து ஆடுவதாக உள்ள அந்த விளம்பரத்தில் இடம் பெற்ற வாசகம் 'இந்தப் பசுமை எப்போதும் உங்களிடம் தழைத்தோங்கி வளரட்டும்.'

"நாட்டின் செழுமை என்பது கிராமங்களில் மட்டும் இல்லை; கான்கிரீட் காடுகளாகிவிட்ட நகரங்களுக்கும் பசுமை பரவ வேண்டும் என்பதுடன், உங்களுக்கு வாழ்க்கையில் பசுமையும், செழுமையும் தரவல்லது கரூர் வைஸ்யா வங்கி என்று கூறுகிறது இவ்விளம்பரம். சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தையும் வலியுறுத்துகிறது" என்று விருதுப் பத்திரத்தில் குறிப்பிட்டிருந்ததை வாசித்தார் கல்கி பத்திரிகையின் பதிப்பாளரான லக்ஷ்மி நடராஜன்.

விழாவுக்குத் தலைமையேற்று விருது

களை வழங்கினார் மத்திய திட்ட அமலாக்கத் துறை அமைச்சரான ஜி.கே.வாசன். "இதனை எங்கள் குடும்ப விழா என்றே கூற வேண்டும். காரணம், எனது தந்தையார் காலத்திலிருந்தே கல்கி, சதாசிவம் குடும்பங்களுடன் எங்கள் குடும்பம் நெருக்கமானது. அமரர் கல்கி நூற்றாண்டு விழாவைச் சீரும் சிறப்புமாக நடத்திய விழாக்குழுவின் தலைவராக எனது தந்தையார்தான் பொறுப்பேற்றிருந்தார்" என்று பழைய நினைவுகளை மலரவிட்டார் வாசன். "'குறையொன்றுமில்லை' என்ற தலைப்பில் கல்கி, சதாசிவம் பற்றிய அரிய பல புகைப்படங்களுடன் கூடிய கட்டுரைகளை கல்கி நிறுவனம் பதிப்பித்துள்ளது. அதன் இரண்டு பிரதிகளை என் தந்தையார் பொக்கிஷமாய்ப் பாதுகாத்ததை நான் அறிவேன். அந்தப் புத்தகத்தை கல்கி நிறுவனம் மீண்டும் மறுபதிப்பு செய்ய வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார். அதனை நிறைவேற்ற ஆவன செய்வதாய் அறிவித்தார் கல்கி ராஜேந்திரன்.



• சிந்திக்க வைத்த வரவேற்புரை : வி.ராம்நாராயண்

பரிசுக்குரிய பத்தாயிரம் ரூபாய் காசோலையைப் பெற்றுக்கொண்ட சீனிவாசன் ஸ்வாமி, பரிசுத் தொகையை கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளைக்கே நன்கொடையாக அளிப்பதாக அறிவித்தார்!

விழாவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தார் தொழிலதிபர் எம்.ஏ.எம். ராமசாமி. கூடவே அறக்கட்டளைக்கு நன்கொடையாக ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலையையும் இணைத்திருந்தார்!

விருதுபெற்ற விளம்பரத்துக்குரிய கரூர் வைஸ்யா வங்கி சார்பில் வந்திருந்த அதன் துணைப் பொது மேலாளர் நடராஜனுக்கு நினைவுப் பரிசு தரப்பட்டது. வங்கியின் மக்கள் தொடர்பு அதிகாரியும், ஆன்மிகச் சொற்பொழிவாளருமான நாகை முகுந்தன், நாற்பது நிமிடங்களில் பேச வேண்டிய விஷயத்தை நாலே நிமிடங்களில் நறுக்கென்று பேசி கைத்தட்டல் பெற்றார். 1996-ல் திருமதி எம்.எஸ். குத்துவிளக்கு ஏற்றி துவக்கிவைத்த கரூர் வைஸ்யா வங்கியின் சென்னை தி.நகர் கிளை, இன்று அபார வளர்ச்சி கண்டிருப்பதை நன்றியுடன் குறிப்பிட்டார்.

அடுத்து, அறக்கட்டளையின் சார்பில், படிப்பில் சிறந்த, ஆனால் பொருளாதாரத்தில் பின்தங்கிய இரு மாணவிகளுக்கு உதவித் தொகையாக தலா ஐயாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது (எத்திராஜ் மகளிர் கல்லூரியின் வனிதா, தமிழ்நாடு திரைப்படக் கல்லூரியின் மாணவி மதி இலக்கியா).

விழாவின் கிளைமாக்ஸ் பாரதி பாஸ்கர் நிகழ்த்திய சதாசிவம் நினைவுச் சொற்பொழிவு. பெற்றோர் இவரைத் தொட்டிலில் இட்டு, பாரதி என்று நெல்லில் பெயர் எழுதியதாலோ என்னவோ, பாரதி பாஸ்கருக்கு எட்டயபுரத்து முண்டாசுக் கவிஞர் மீது அப்படி ஒரு ஈடுபாடு.

தினமும் பாரதியின் எழுத்துக்களைப் படிக்காமல் இவர் உறங்கப்போவது இல்லை. எனவே, பாரதி பாஸ்கர் உரையாற்ற அளிக்கப்பட்ட தலைப்பு, **பாரதி : நேற்று, இன்று, நாளை.** கம்பீரமான குரலில் உணர்ச்சி பொங்க அவர் ஆற்றிய சொற்பொழிவை பாரதியார் கேட்டிருந்தால், "பலே! பாண்டியா!" என்று பாராட்டியிருப்பார். அதன் சில முக்கிய பகுதிகள்:

"'சுதந்திரம் என்பது யாரும் கொடுத்துப் பெறுவது இல்லை. முயன்று வாங்குவது. இது பெண்களுக்கு மட்டுமில்லை. நாட்டுக்கும் பொருந்தும்.' இப்படி 22 வயதில் தமது சக்ரவர்த்தினி என்ற பத்திரிகையில் உணர்ச்சி பொங்க எழுதியவர் பாரதி. இந்தியப் பத்திரிகை உலகுக்கு கார்ட்டூன் என்கிற அம்சத்தை அறிமுகப்படுத்தியவரும் அவரே.

அடுத்த தேர்தலைப் பற்றிக் கவலைப்படுபவர் அரசியல்வாதி. அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திக்கிறவன்தான் தலைவன். அப்படிப் பார்த்தால், பாரதி தமிழினத்தின் தலைவன்.

பத்தொன்பது வயது பாரதிக்கு. மனைவி செல்லம்மாவுக்கு வயது பன்னிரண்டு. ஊரிலிருக்கும் மனைவி, பிரிட்டி

ஷாரை எதிர்த்துக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் கணவர் குறித்து கவலைப்பட்டுக் கடிதம் எழுதுகிறார். கடிதத்தில் கொஞ்சம் தவறுகள்.

கடிதத்தைப் படித்துவிட்டு, பாரதி பதில் போடுகிறார். எப்படி? 'நீ என்னைப் பற்றிக் கவலைப்படுகிற நேரத்தில் தமிழைப் படித்தால் நான் சந்தோஷப்படுவேன்' என்று!

ஏழு மொழிகள் பேச, படிக்க, எழுதத் தெரிந்த பாரதி, 'தமிழ்நாட்டில் தமிழ்க் கல்வி மலிக!' என்றார். இன்றும் அப்படி ஒரு நிலை இல்லையே! தனக்குரிய வேலையைச் சரியாகச் செய்பவரே மேல் குலம் என்று துணிச்சலாய்ச் சொன்னவர் அவர்.

தான் எழுதிய பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையில், இனி வரும் வரகவிகளுக்கு இதை 'அர்ப்பணிக்கிறேன்' என்று எழுதினார். ஆனால் இந்த 'அர்ப்பணிப்பு' என்ற மரியாதைக்குரிய சொல், இன்று பண்பலை ரேடியோக்களில், பதினோராம் வகுப்புப் பெண், தான் காதலிக்கும் பன்னிரண்டாம் வகுப்புப் பையனுக்கு 'டெடிகேட் பண்றேன்' என்று சொல்லி கேவலப்படுத்தப்படுகிறது. அடுத்த வினாடி பாடல் அலறுகிறது. 'அப்படிப் போடு... போடு... போடு..' என்று!



* சிறந்த விளம்பரத்தைத் தேர்வு செய்ய உதவிய நடுவர்கள் - உஷா சுப்ரமண்யம் ...



* ...ஜெயந்த்

மனிதனுக்குப் பயம் என்பதே கூடாது என்று நினைத்தவன் பாரதி. எமனையே காலால் எட்டி உதைப்பேன் என்றான். 'அறம் செய விரும்பு' என்பதற்குப் பதிலாக 'அச்சம் தவிர்!' என்று புதிய ஆத்திச்சூடி எழுதினான்.

மடாதிபதிகளைப் பார்த்து 'உங்களிடம் நிறைய சொத்து உள்ளது. அதை வைத்து நிறைய அன்னதானம் செய்கிறீர்கள். அதற்குப் பதிலாக வ.உ.சி.யின் சுதேசி கப்பல் கம்பெனியின் ஷேர்களை வாங்குங்கள். உங்களுக்கு அதிக புண்ணியம் கிடைக்கும்' என்று தைரியமாய் அவனால் சொல்ல முடிந்தது.

இன்று இளைஞர்களுக்கு வழிகாட்ட சமுதாயத்தில் ரோல் மாடல்கள் இல்லை. இளைய சமுதாயம் திக்குத் தெரியாமல் தடுமாறுகிறது. பாரதி வெறும் கவிஞன் இல்லை. தத்துவஞானி, வேதாந்தி. இளைய தலைமுறையினருக்கு அன்றும் இன்றும் என்றும் ஒரு தனிப்பெரும் தலைவன்!

நம் குழந்தைகளை, பூஜை அறைக்கு அழைத்துப் போய் 'இதுதான் நம்ம சாமி, கும்பிட்டுக்கோ!' என்று பயபக்தியோடு காட்டித் தருகிறோம் இல்லையா... அந்த மாதிரி பாரதியையும் நம் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவோம். அவர் சிந்தனைகளை நம் வாழ்வில் கலக்கச் செய்வோம். இன்றைக்காக அன்றே சிந்தித்தவன் பாரதி. என்றும் நிலைக்கும் வலிமை அந்தச் சிந்தனைத் தெறிப்புகளுக்கு உண்டு."

மனம் நிறைய பாரதி சிந்தனைகளையும், கையில் அறக்கட்டளை அன்பளிப்பாக வழங்கிய பாரதி பற்றி அமரர் கல்கி எழுதிய நூல்களையும் அள்ளிச் சென்றது கூட்டம்.

தொகுப்பு : **எஸ்.சந்திரமௌலி**

படங்கள் : **ஸ்ரீஹரி**

யாரும் உச்சரிக்காத பெயர்!



"இதுவரை இரண்டு உலகப் போர்கள் நடந்துள்ளன. கிறிஸ்தவ, இஸ்லாமிய ஆதிக்கத்தினால் மூன்றாவது உலகப் போரும் வந்துவிடுமோ என்கிற அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் இந்து அமைப்புகள் அனைத்தும் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும். அப்போதுதான் கிறிஸ்தவ - இஸ்லாமிய ஆதிக்கத்திலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள முடியும்!" - ஆர்.எஸ்.எஸ்.ஸின் அகில பாரதத் தலைவரான சுதர்ஸனின் இந்தப் பேச்சுதான் மார்ச் 19ஆம் தேதி நடைபெற்ற ஹிந்து சமுதாய பாதுகாப்பு மாநில மாநாடு மற்றும் கிராமக் கோயில் பூசாரிகள் பேரவையின் ஐந்தாவது மாநில மாநாட்டின் ஹைலைட். இடம் ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி மைதானம்.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்து கிராமக் கோயில் பூசாரிகளும், விஸ்வ ஹிந்து பரிஷத் மற்றும் ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளிலிருந்து பல்லாயிரக்கணக்கானோரும் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

முன்னதாக 18ம் தேதி பஜன் மேளா நடைபெற்றது. இருநூறுக்கும் மேற்பட்ட பஜனைக் குழுவினர் இதில் பங்கேற்றனர்.

முதல் நாள் பக்திமயமாய் இருந்த மாநாடு, மறுநாள் அரசியல் மேடையாக அவதாரம் எடுத்தது. நுழைவு வாயிலில் இருபது இடங்களில் மெட்டல் டிடெக்டர் வைத்துப் பரிசோதனைகளுக்குப் பின்னரே ஒவ்வொருவரும் அனுமதிக்கப்பட்டனர். மாநாட்டுப் பாதுகாப்புக்கு மட்டும் இரண்டாயிரம் போலீஸார் பயன்படுத்தப்பட்டனர். மாநாட்டில் சுதர்ஸன், வி.எச்.பி. அகில உலகத் தலைவர் அசோக் சிங்கால், வி.எச்.பி. பொதுச்செயலாளர் பிரவீண் தொகாடியா, வி.எச்.பி. மாநில இளைஞரணி அமைப்பாளர் ஆர்.ஆர். கோபால்ஜி, அகில இந்திய ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி, தமிழக ஜனதா கட்சித் தலைவர் சந்திரலேகா, வி.எச்.பி. தேசிய துணைத் தலைவர் வேதாந்தம் முதலானோரும் இந்து மதத் துறவிகள் சிலரும் பேசினர்.

"நாட்டில் உள்ள சர்ச்சுகள் வாயிலாக மதமாற்றம் நடைபெறுகிறது. கிராமங்களில் உள்ள எந்த ஒரு இந்தும் இனிமேல் மதம் மாறக் கூடாது. மதம் மாற மாட்டான். அதற்கு நாங்கள் பொறுப்பு என்கிற உறுதிமொழியை இங்கு வந்திருக்கும் ஒவ்வொருவரும் எடுத்துக் கொண்டு மதமாற்ற முயற்சிகளை முறியடிக்க வேண்டும்!" என்றார் அசோக் சிங்கால்.

மாநாட்டில் பலரின் அதிகபட்ச அர்ச்சனைக்கு ஆளானவர் தி.மு.க. தலைவர் கருணாநிதி. ஜெயேந்திரர் கைது மற்றும் மதமாற்றத் தடைச் சட்டம் வாபஸ் ஆகிய இரு விஷயங்கள் குறித்தும் மிதமான கண்டனமே வெளிப்பட்ட போதும்கூட யாரும் ஜெயலலிதாவின் பெயரை உச்சரிக்கவில்லை.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

பின்னி செய்த விஷப் பரீட்சை!



• நட்சத்திரங்களைத் தொட....

'சந்திரமுகி' தமிழ்ப் படத்தில் ஒரு தெலுங்குப் பாடலைப் பாடிப் பிரபலமான கேரளப் பாடகி பின்னி கிருஷ்ணகுமார். பின்னியின் பலம் அவரது அசாத்தியமான குரல். மேல் ஸ்தாயியில் சவாரி செய்து நட்சத்திரங்களைக் கூடத் தொடுவார்! சுத்தமான கர்நாடக இசையில் நல்ல தேர்ச்சி பெற்ற பின்னி கிருஷ்ணகுமாரின் கச்சேரியை தமிழ்நாடு இயல், இசைக் கல்லூரி வளாகத்தில் கேட்க நேர்ந்தது. அது என்னவோ தெரியவில்லை; தமிழிசை என்றதும் களேபரமாகப் பக்க வாத்தியங்களில் கூட்டணி அமைத்து விடுகின்றனர். அன்று பின்னிக்குப் பின்னணி வயலின், மிருதங்கம், கடம், கஞ்சிரா, மோர்சிங்; கொன்னக்கோல்தான் இல்லை. இவை எல்லாம் சேர்ந்து பின்னியின் பாடலை உயர்த்துவதற்குப் பதில் சின்னாபின்னமாக்கின. ஆனால், காதைத் தீட்டிக்கொண்டு கேட்டவர்கள் பின்னியின் சன்னமான பிரயோகங்களையும், சத்தான ஸ்வரங்களையும், தோடி, ரீதி கௌளை, ஹம்சத்வனியில் கண்டு 'பிடித்திருப்பர்'. இதில் போதாததற்கு பின்னி ஒரு (விஷப்) பரீட்சையும் செய்தார். அபூர்வமான மேளகர்த்தா ராகமான ஸ்வர்ணாங்கியில் 'ஸாய ஸௌவீர' என்ற தீக்ஷிதர் கிருதியை ஆலாபனையோடு அவிழ்த்து விட்டாரே பார்க்கலாம்!

சங்கீத கலாநிதி ஆர்.வேதவல்லி ஒரு பிடிவாதம் மிக்க பாடகர். லட்சியமும், லட்சணமும் இருந்தால்தான் சங்கீதம் என்பது, அவரது அசைக்க முடியாத நம்பிக்கை. அதனால், அவரது பாட்டில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

'காம்போஜி ராகம்' என்ற அவருடைய 'ஸரிகம' குறுந்தகடு இதற்கு இன்னுமொரு உதாரணம். மூன்றே உருப்படிகள்: ராமசாமி சிவனின் 'பங்கஜாக்ஷியை' வர்ணம் 'கைலாச நாதனே' தீக்ஷிதர் க்ருதி: விரிவான ஆலாபனை, நிரவல் ஸ்வரங்களுடன் தியாகராஜரின் 'ஓ ரங்கசாயி' வேதவல்லியின் பாட்டில் ஆரவாரமற்ற அழுத்தமும், ஆழமும் இருக்கும்; காம்போதி ராகத்தின் பெரும்பகுதிகள் மேல் ஸ்தாயி சஞ்சாரத்தில்தான் பளிச்சிடும். வயதினால் குரல் முழுமையாக ஒத்துழைக்காமல் போனாலும் அப்பழுக்கற்ற ஞானமும், தேர்ச்சியும் காம்போதியின் முதிர்ந்த சங்கதிகளையும், அழகையும் வெளிப்படுத்துகிறது. வேதவல்லியின் சங்கீதத்தை ரசிக்கவும் ஓரளவு முதிர்ச்சி தேவை; அத்தகைய முதிர்ச்சி படைத்தவர்களுக்கு இந்த ஆல்பம் மகிழ்ச்சி தரும்.



• அசைக்க முடியாத நம்பிக்கை!

- ஜோதிஸ்வரூபிணி



கல்கி



2006 ஏப்ரல் 2
பார்த்திப பங்குனி 19
மலர் : 64
இதழ் : 35

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா
- பாரதியார்


பிளந்தது பா.ஜ.க!


பா.ஜ.கவிலிருந்து வெளியேற்றப்பட்டு உமாபாரதியுடன் புதுக்கட்சி ஆரம்பிக்கவிருக்கிறார் மதன்லால் குரானா. பா.ஜ.கவுடனான முறிவுக்கு அவர் பல காரணங்கள் கூறினாலும் 'கடந்த சில ஆண்டுகளாக அக்கட்சியில் எனக்கு மூச்சுத் திணறலே ஏற்பட்டுவிட்டது' என்று அவர் சொல்லியிருப்பது பா.ஜ.கவின் சமீபத்திய ஜனநாயக விரோத போக்கையே அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

புதுடெல்லியின் முன்னாள் முதல்வர் இணைந்திருப்பது மத்திய பிரதேச முன்னாள் முதல்வருடன்! மாநில முதல்வர் பதவி வரையில் எட்டிய இவ்விரு தலைவர்களும் அதிருப்தியுற்று கட்சியையே பிளக்கத் துணிந்துள்ளனர் என்பது பா.ஜ.கவின் வரலாற்றில் ஒரு கரும்புள்ளி.

உமாபாரதி, குரானா இருவருமே கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டு மீண்டும் அதில் சேர்த்துக் கொள்ளப் பட்டவர்கள். மீண்டும் பிரச்னை எழ, மீண்டும் வெளியேற்றப் பட்டுள்ளனர். அதிலும் உமாபாரதி கட்சியிலிருந்து நீக்கப்படு வதும் மீண்டும் சேர்க்கப்படுவதும் விளையாட்டு போல் சிலமுறை நிகழ்ந்துவிட்டது. பா.ஜ.க தலைமையிடம் இதுபோன்ற ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்த தெளிவும் உறுதியும் இல்லாததையே இது காட்டுகிறது.

உமாபாரதி ஒரு சராசரி அரசியல்வாதி என்று சொல்லிவிட முடியாது. தடாலடி அணுகுமுறையும் தீப்பறக்கும் பேச்சாற்றலும் கொண்டவர். தேர்தல்களை வென்று தரும் அவரது ஆளுமைக்காக, பா.ஜ.க அவருக்கு மிதமிஞ்சிய இடத்தைக்





கொடுக்கத் தயாராயிருந்தது. ஆனால், பதவிக்கு வந்த பிறகு, தலைமையைக் கேள்விக்கு உட்படுத்திய அல்லது தலைமையுடன் முரண்பட்டு நின்ற அவரது தனித்துவத்தை ஏற்கத் தயாராயில்லை!

பா.ஜ.கவில் ஏற்பட்டுள்ள பிளவு குறித்து மூத்த தலைவர்களான அத்வானி, வாஜ்பாய் போன்றோர் இன்னும் எதுவும் கூறவில்லை. புதிய தலைவர் ராஜ்நாத் சிங், உமாபாரதிக்கு பக்கபலமாக இருக்கத் துணிந்த சிலரை, கட்சியிலிருந்து வெளியேற்றியுள்ளார். அவரும் பிளவு பற்றி விமர்சிக்கவில்லை - இதுவரை.

இந்தப் பிளவு பா.ஜ.கவுக்கு நிச்சயமாகப் பெரிய அடி. செல்வாக்கும் மக்கள் ஆதரவும் பெற்ற இரு பெரிய தலைவர்களுடன் வேறு பலரும் வெளியேறி, புதுக்கட்சிக்குச் செல்லத் தயாராகிவிட்டனர்.

இந்தப் பிளவு காரணமாக, பா.ஜ.க என்ற கட்சிக்கு ஏற்பட்டதைக் காட்டிலும் அதிக பாதிப்பு நாட்டுக்குத்தான் ஏற்படும். காங்கிரசுக்கு, தேசிய அளவில் ஒரு மாற்றுக் கட்சியாக விளங்கி, ஆட்சிப் பொறுப்பையும் வகித்த ஒரு வலிமை வாய்ந்த கட்சி. இப்போது அவ்வலிமையை இழந்து பலவீனப்பட்டுப் போயிருக்கிறது. ஆட்சியைப் பிடிப்பதற்கு மட்டுமின்றி, எதிர்கட்சி பொறுப்பைச் சிறப்பாக நிறைவேற்றவும் பா.ஜ.கவின் உள்கட்டமைப்பு ஜனநாயகம் சுவாசித்து வலிமை பெற வேண்டும்.

பிளவு ஏற்படுத்தி பிரிந்துபோன உமாபாரதியும் ஹிந்துத்துவாதான் பேசுகிறார். எனவே, பிளவு கொள்கை அடிப்படையில் விளைந்தது அல்ல; தலைவர்களுக்கிடையே உருவாகியுள்ள விரோத பாவம்தான் அதற்குக் காரணம் என்பது தெளிவு.

ஒரு சில தலைவர்களின் ஆதிக்கம், பரிவார் அமைப்புகளின் கிடுக்கிப்பிடி ஆகியவற்றுக்குக் கட்சியை பலியிட்டு விடாமல், அதன் பழைய பலத்துக்கு அதை எடுத்துச் செல்ல வேண்டும்.

அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. உட்கட்சி ஜனநாயகமும் அதையொட்டிய மரபுகளும் அடி மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரை நன்கு செயல்படுவதுதான் எந்த ஒரு கட்சியையும் உடையாமலும் உளுத்துப் போகாமலும் காக்கும். ○

வேலை பெறுவதற்காக கல்வி பெற வேண்டும் எனும் மனப்பாங்குள்ள சமூகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதனால் கல்வி என்பது இங்கே லாபம் தரும் தொழிலாகிவிட்டது. ஆனால் கற்றுத் தேர்ந்த கல்விக்கு ஏற்ற வேலை இங்கே கிடைப்பதில்லை. வேலைக்காகக் காத்திருப்பதைவிட பலருக்கு நாமே வேலை கொடுத்தால் என்ன என்ற சிந்தனையோடு இளைஞர்கள் சுயதொழிலைத் தேர்ந்தெடுக்க வேண்டும். உலகமயமாக்கலின் விளைவாக பன்னாட்டு நிறுவனங்களின் வருகையும், அந்நிய

"கூட்டுக் குடும்பமே எங்கள் பலம்!"

முதலீடும் அதிகரித்துள்ள இன்றைய சூழலில் சிறுதொழில் துறையில் எண்ணற்ற வாய்ப்புகளுக்கான கதவுகள் திறந்திருக்கின்றன. சுயதொழில் தொடங்க நினைக்கும் இளைஞர்களின் முதல் தேவை முதலீடு அல்ல! துணிவும் உழைப்பும்தான்"

- இப்படி வழிகாட்டுகிற சுப்பையா என்கிற அசோகன் சிறுதொழில் துறையில் ஒரு சுறுசுறுப்பான தொழிலதிபர். இருபத்தைந்து வருடங்களில் எழுபத்தைந்து படங்களை இயக்கிச் சாதனை படைத்திருக்கும் நவரச இயக்குநர் எஸ்.பி.முத்துராமனின் மகன்.

"சென்னையிலேயே பிறந்து வளர்ந்திருந்தாலும் சினிமா ஸ்டுடியோவுக்கு நான் ஒருமுறைகூட போனதில்லை. ஷூட்டிங் பார்த்தில்லை. ஆறாம் வகுப்பு படிக்கிறபோது அப்பா ஒரு சினிமா இயக்குநர் என்று தெரிந்து கொண்டேன். ஆனால் சினிமா மீது கொஞ்சமும் ஆர்வம் ஏற்படவில்லை. அதற்குக் காரணம் அப்பாதான். வீடு, தொழில் இரண்டையும் குழப்பிக் கொள்ளாமல், அப்பாவின் நிர்வாகம் தெளிவாக இருந்தது.


பள்ளி நாட்களில் அவரை நாங்கள் அபூர்வமாகச் சந்திப்போம். அப்பாவின் திறமைக்கும் தொழிலுக்கும் இடைஞ்சல் வந்துவிடக்கூடாது என்பதில் அம்மா மிகுந்த கவனமாக இருந்தார். இதனால் எல்லாப் பொறுப்புகளையும் அம்மா எடுத்துக்கொண்டார். நாங்கள் அம்மாவிடம் வளர்ந்தோம். வேலைப்பளுவினால் நாங்கள் என்ன படிக்கிறோம் என்பதுகூட அப்பாவுக்கு மறந்துவிடும். அப்படி ஒரு அசுர உழைப்பாளி அவர்.

ஒருமுறை வீட்டுக்கு வந்திருந்த உறவினர் 'பையன் என்ன வகுப்பு படிக்கிறான்?' என்று அப்பாவைப் பார்த்துக் கேட்க, அப்பாவோ என்னைப் பார்த்து 'தம்பி என்ன படிக்கிறாய்' என்று என்னிடம் கேட்க வேண்டிய நிலை.

'என்றைக்காவது ஒருநாள் முத்துராமன் சார் இரவு எட்டு மணிக்கெல்லாம் வீட்டுக்குப் போய் கதவைத் தட்டப் போகிறார். அவரது துணைவியார், நமது கணவர் இந்நேரம் ஏ.வி.எம். ஸ்டூடியோவில் இருப்பார் என்று நினைத்து கதவைத் திறக்காமலேயே இருந்துவிடப் போகிறார்'- சூப்பர் ஸ்டார் ரஜினி, சினிமா விழா ஒன்றில் அப்பாவைப் பற்றி இப்படிப் பேசியதை ஒரு செய்தித்தாளில் படித்திருக்கிறேன்.

ரஜினி சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை. குடும்பத்தோடு அன்று அதிக நேரம் செலவிட முடியாமல் தவித்த அப்பா, அதற்கு பிரதி உபகாரமாக, இப் போது ஓர் அற்புதமான காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார்.

அப்பாவுக்கு நான்கு தம்பிகள். எனது தாத்தா, பாட்டி ராமசுப்பையா - விசாலாட்சி தம்பதியின் வாரிசுகளாகப் பிறந்து



இன்று கொள்ளுப் பேரன், கொள்ளுப் பேத்தி என ஐம்பது பேருக்கு மேலாக கிளைத்துப் பரவி இருக்கிறது எங்கள் குடும்பம். அப்பா செய்த ஏற்பாட்டின் படி, ஒவ்வொரு மாதமும் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை குடும்பத்தில் ஒருவர் மீதமில்லாமல் எல்லோரும் ஒன்றாகக் கூடுகிறோம். இந்த மாதம் எங்கள் வீட்டில் ஒன்றுகூடல் என்றால், அடுத்த மாதம் ஒரு சித்தப்பா வீட்டில். அதற்கு அடுத்த மாதம் மற்றொரு சித்தப்பா வீட்டில் கூடுவோம். இந்தக் கூடல் வெறுமனே விருந்து சாப்பிட்டு, நலம் விசாரித்து கலைந்து விடுவதற்கு அல்ல.

தலைமுறைகள்-11



* மனைவி, அப்பாவுடன் சுப்பையா...

சுப்பையா முத்துராமன்

எங்கள் குடும்பங்களில் நன்றாகப் படித்து அதிக ரேங்க் வாங்கியிருக்கும் சிறார்கள், அரசுத் தேர்வு, பல்கலைக்கழக தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்றிருக்கும் பிள்ளைகளுக்கு பெரியவர்கள் பாராட்டுச் செய்வார்கள். ஒவ்வொருவரிடமும் என்ன தனித் திறமை இருக்கிறது என்று அறிந்து, முதலில் குடும்ப உறுப்பினர்கள் முன்னிலையில் அதை வெளிப்படுத்த வாய்ப்பும் ஊக்கமும் தருகிறார்கள். ஒவ்வொரு குடும்பத்தின் வளர்ச்சியைத் தெரிந்து கொள்ளவும், குடும்பத்தில் மனிதநேயமும், ஒற்றுமையும் ஓங்கவும் பரஸ்பரம் உதவி செய்துகொள்ளவும் முயற்சியைத் தீவிரமாக அப்பா

முன்னெடுத்துச் செல்கிறார். இதற்கு 'குடும்பம் ஒன்றுகூடல்' என்று பெயர் வைத்திருக்கிறார்... என்னைக் கேட்டால், இம்முறை எல்லாக் குடும்பங்களிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். இது எல்லாக் குடும்பங்களுக்கும் பரவ வேண்டும்'' என்று ஆசைப்படும் அசோகன், "கூட்டுக்குடும்ப முறைதான் எங்கள் பலம்'' என்கிறார்.

"லயோலா கல்லூரியில் எம்.காம் படிப்பில் சேர்ந்தபோது, 'தொழிலாளர் சட்டங்கள் - தொழில்துறை உறவுகள்' பற்றிய சிறப்புப் பாடத்தை எடுத்துப் படித்தேன். படிப்பை



* அப்பா, அம்மாவுடன்...

"சினிமா போராட்டமான விஷயம்!"

முடித்து வெளியே வந்த போது மாதச் சம்பளக்காரனாக வேலைக்குச் செல்வதில் உடன்பாடு இல்லை. அப்பாவும் 'நமது குடும்பத்திலிருந்து தொழில்துறையில் யாருமே இடம்பெறவில்லை. நீ ஏன் தொழிலதிபர் ஆகக்கூடாது' என்றார். அவர் சுட்டிக்காட்டியபோது எனக்கும் அந்த எண்ணம் உருவாகியிருந்தது. 'என்ன பிரச்னைகள் வந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம். கவலைப்படாமல் இறங்கு' என்று அப்பா, அம்மா இருவருமே உத்வேகம் கொடுத்தார்கள். இன்று கட்டுமானத் துறைக்குத் தேவைப்படும், 'கன்ஸ்ட்ரக்ஷன் ஒயர்' எனப்படும் கட்டுக்கம்பிகள் தயாரிக்கும் சிறுதொழில் நிறுவனத்தை அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தொடங்கி நடத்தி வருகிறேன். கட்டுக்கம்பி தயாரிப்பில் போட்டி அதிகம். இங்கே தரமும், சரியான நேரத்தில் டெலிவரியும் மிக மிக முக்கியம்'' என்றவர், சினிமா இயக்கம் மீது தமக்கு ஈர்ப்பு இல்லாமல் போன காரணத்தைச் சொல்கிறார்.

"ஏ.வி.எம் நிறுவனத்தில் எடிட்டிங் பயிற்சியாளராகச் சேர்ந்து, அடுத்து உதவி இயக்குநர், இயக்குநர் என்ற நிலையை அடைவதற்கு அப்பா பதினைந்து ஆண்டுகள் போராடி இருக்கிறார். ஆனால் இன்று உதவி இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் என்று பாதி வாழ்க்கையை சினிமாவில் தொலைத்துவிட்டு, கனவுகளை அடைகாத்தபடி ஐயாயிரம் பேர் இருக்கிறார்கள். இவர்களில் எத்தனை பேர் இயக்குநர் ஆகிறார்கள் என்பதைப் பார்த்தாலே, இன்று சினிமா எத்தனை பெரிய போராட்டம் என்பது தெரியும். அப்பா பட்ட கஷ்டங்களையும், அவர் சந்தித்த சோதனைகளையும் நான் சந்திக்கக்கூடாது என்று நினைத்தாரோ என்னவோ, சினிமாவின் வாசனை படாமலே வளர்த்துள்ளார். நானும் ஒரு சினிமா இயக்குநரின் பிள்ளைபோல் வளரவில்லை'' என்றவர், "பெற்றோரின் தொழில் சார்ந்த பாதிப்பு இல்லாமல், புதிதாகச் சிந்தித்து புதிய துறையில் தடம் பதிக்க பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும். அப்போதுதான் புதிய தலைமுறையின் வாழ்க்கை சுவையாகவும், சவாலாகவும் இருக்கும்'' என்கிறார் சுப்பையா என்கிற அசோகன்.

தொகுப்பு: **ஆர்.சி. ஜெயந்தன்**
படங்கள்: **ஸ்ரீஹரி**

THE HINDU பாராட்டிய

அற்புத புத்தகம்

THIS DAY THAT AGE

Easy to read, and colourful to boot

Shanmuganathan's book encapsulates events and people from Stone Age to the present.



FIRST IN TAMIL : *I. Shanmuganathan presents his book to President Abdul Kalam.*

T.A. Narasimhan

CHENNAI : For readers who see history as more than just mythology here is an opportunity to travel into the past to learn about the personalities and the events that have shaped today's world.

I. Shanmuganathan's 460- page work, "Karkaalam mudhal computer kaalam vaarai" (from stone age to computer age), the first such one to be published in Tamil, is packed with political intrigue, drama, war and personal achievements. The book and its CD version in Tamil and English were recently presented to President Abdul Kalam at Rashtrapati Bhavan. President Kalam congratulated Mr. Shanmuganathan, saying, "Your knowledge of history is encyclopaedic. This book will be very useful for the future generation."

Mr. Shanmuganathan, a journalist and novelist for 40 years, said, "This book has been created for easy use. In fact, one look at it and one will never forget historical facts. The book features everything:the creation of the Earth to the September 11,2001 attack on the World Trade Centre, the growth and disappearance of civilisations,cultural and politicial revolutions, discoveries,voyages,rise and fall of great leaders and information about the film industry.

"Once you get a chance to read the events along with the colourful illustrations, it is sure to stick in your mind. It will create a visual image of the world for the reader".

Tamil Nadu gets a special focus in this book. The Tamil Nadu Government had subsidised his earlier work, "Twentieth century history in a Tamilian's view. Mr. Shanmuganathan is now compiling a Tamil Kalanjiam (encyclopaedia).

கற்காலம் முதல் கம்ப்யூட்டர் காலம் வரை

உலக வரலாறு

விலை ரூ. 400

உலக வரலாற்றை திரைப்படம் போல் கண்முன் நிறுத்தும்

VCDயும் கிடைக்கும்

(தமிழ் அல்லது ஆங்கிலம்)

விலை ரூ. 150

புத்தகம், இரண்டையும் சேர்த்து வாங்கினால் சலுகை விலை ரூ.450

கிடைக்கும் இடம் :

1 / 3, V. கங்காதரன் தெரு, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034. தொலைபேசி : 2825 1340

வெளியூர் வாசகர்கள் Books India என்ற பெயரில் Demand Draft அல்லது MO அனுப்பவும்

தமிழக இளைஞர்களிடம் ஓட்டெடுப்பு நடத்தினால் தனிப் பெரும்பான்மையுடன் ஜெயிக்கக் கூடியவர் சன் மியூசிக்கின் டாப் காம்பியரான மஹாலட்சுமி. பூனைக்குட்டி குரலில் இவர் பேசும் பேச்சுக்கு யாராயிருந்தாலும் க்ளீன் போல்டுதான். டான்ஸ் மாஸ்டர் சங்கரின் ஒரே மகளான மஹாவிடம் ஒரு சிட்சாட்...

மஹாலட்சுமி..?

"பந்தா இல்லாத பொண்ணுங்க. பீட்டரிங் விடமாட்டாள். சமர்த்தான பொண்ணுன்னு எங்க போனாலும் பேர் வாங்கிடுவா."

பிடித்த கவிதை...

"என் ஃப்ரெண்டு என்கிட்ட சொன்னதைச் சொல்றேன், ஓட்டாதீங்க...

"ஜோ மீது பொறாமை!"

ஒரு வரியில் கவிதை சொல்லணுமா? அதுதான், மஹாலட்சுமி!

ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமா? அதுதான் நீ!"

டானிக்!

"வாலமீனுக்கும் விலாங்குமீனுக்கும் பாட்டுதான். இந்தப் பாட்டை எங்கே கேட்டாலும் கால் தன்னால ஆட ஆரம்பிச்சுடும்."

சினிமா?

"மாட்டேன். எனக்கு சினிமாவுல ஒரு எடிட்டரா நுழையணும்னுதான் ஆசை. ஆனாலும், மஹாலட்சுமிங்களா, ஒரு நல்ல கேரக்டர் இருக்கு'ன்னு தினமும் போன் கால்ஸ் வந்துட்டுதான் இருக்கு."

ஆசை!

"யுஎஸ். போகணும். அங்கிருந்து திரும்பி வந்து நேரா ஒரு கிராமத்துல போய் செட்டிலாயிடணும். நகரம் எல்லாம் நரகம்தான். கிராமத்துலதாங்க நிம்மதியான வாழ்க்கை இன்னமும் பத்திரமா இருக்கு. அப்புறம் ஸ்ரேயா மாதிரி ஜிலுஜிலுன்னு மழையில நனையப் பிடிக்கும். சாக்லெட், ஐஸ்கிரீம் பிடிக்கும். கடைசியில சளிப் பிடிக்கும்!"

விடமுடியாத பழக்கம்?

"இன்னிக்கும் நான் அம்மா ஊட்டினாத்தான் சாப்பிடுவேன். தயிருக்கு ஊறுகாய்க்குப் பதிலா சாக்லெட் கடிச்சுக்குவேன்! காரை எடுத்தேன்னா நரேன் கார்த்திகேயன் என் பின்னாடி நிக்கணும். அவ்ளோ ஸ்பீடா விரட்டுவேன். இதுக்குப் பயந்தே பக்கத்துல உட்கார்றவங்க உஷாரா பிரேக்ல காலை வச்சுட்டு இருப்பாங்க."

காமெடி!

"எங்க காலேஜ்ல விழாவெல்லாம் நடந்தா என்னை கெஸ்டுக்கு பொக்கே கொடுக்கக்கூட விடமாட்டாங்க. ஆனா மத்த காலேஜ்ல நடக்குற விழாக்கள்ல நான்தான் சீஃப் கெஸ்டா இருப்பேன். கூப்பிட்டு விழுந்து விழுந்து கவனிப்பாங்க. ஒரே தமாஷா இருக்கும்."

தொல்லை?

"ரசிகர்கள்தான். எங்கே போனாலும் மொய்ச்சுக்குறாங்க. ஹோட்டல்ல சாப்பிடும்போதுகூட என்னையே உத்து உத்துப் பார்க்குறாங்க. இதனால என்னால சரியா சாப்பிடக்கூட முடியறதில்லை"

கனவு நடிகர்?

"சூ... சூ... சூர்யா... அந்தக் கண்கள்... மைகாட்!"

பொறாமைப்படும் நபர்?

"அஃப்கோர்ஸ் ஜோதிகாதான். கடவுளே... அடுத்த ஜென்மத்துலேயாவது நான் ஜோவா பிறக்கணும்."

உங்களைப் பற்றி மூன்று பிட்ஸ்...

• அரசியலில் ஆர்வம் இல்லாததால இம்முறை யாருக்கும் வோட்டுப் போட மாட்டேன்..

• தமிழ்மீது கொண்ட ஆர்வத்தினால் கல்லூரியில் தமிழையே விருப்பப் பாடமா எடுத்து படிச்சுட்டு வர்றேன்.

• ஆண் காம்பியர்கள்ல பிரஜன். ஆனந்த கண்ணனை ரொம்பப் பிடிக்கும்.

-ச.ந.கண்ணன்

அட்டை, படம் : **ஸ்ரீஹரி**




சேனஸ்



"அந்த ஆள் எப்பவும் தலை வரைச் சுத்தியே வட்டம் போட றாரே, ஏன்?"

"வட்டச் செயலாளர் பதவிய வாங்குறதுக்குத்தான்!"

- நெல்லையப்பபுரம் செல்வன்



"நேற்று ராத்திரி முழுவதும் உங்க வீட்ல லைட் எரிஞ்சுதே... என்ன விஷயம்?"

"கரண்ட் செலவை எப்படிக் குறைக்கிறதுன்னு நானும் என் மனைவியும் பேசிக்கிட்டிருந் தோம்!"

- லீலாஜி

அத்தனைக்கும்...



"'அத்தனைக்கும் ஆசைப் படு'ன்னு என் குருநாதர் அடிக்கடி சொல்லுவார்!"

"அதுக்காக 234 தொகுதிகளை யும் கேட்கணுமா?"

- ஞா. ஞானமுத்து



'''கள்வனின் காதலி' எப்படிக் கொஞ்சுவா...?' ''

'''திருட்டுப் பயலே'ன்னுதான்''

- கே.ஜி.எஸ்

''உயில்ல என்ன எழுதி இருக்கீங்க?''

''என் மறைவுக்குப் பிறகு இந்த உயிலை எழுத உதவிய வக்கீலுக்கு ஃபீஸை மறுக்காம என் மகன் செட்டில் செய்யணும்னு எழுதியிருக்கேன்!''

- பம்மல் நாகராஜன்



''சார்... உங்க மனைவிக்கு என்ன பிரச்னை...?''

''நான் சமைக்கும்போது கிட்ட வந்து 'நான் ஏதாவது உதவி செய்யணுமா...?'ன்னு கேட்கறா எனக்குப் பயமாயிருக்கு டாக்டர்...!''

- நாமக்கல் பாலு



...ஆசைப்படு!

அந்நியன்

பையன் படிக்கப் போனபிறகு நிறைய காசு செலவாக ஆரம்பித்தது. ரெண்டாம் பிள்ளை ஒரு முறை கேட்ட பெருந்தொகையைப் புரட்ட முடியாமல் தவித்துப் போனாள் விசாலாச்சி.

“என்னய எதுக்கு யம்மா பெத்த? இத்தனை படிச்சும் வீணாப் போயிடுமே, படிச்சி முடிச்சா பெரிய வேலை கிடைக்கும். படிக்காட்டி நானும் அப்பனை மாதிரி வீட்டுக்கு வந்து தோட்டத்தில வெத்தலை கூலிக்காரனா ஆக வேண்டியதுதான்” என்று சொல்லி அழுதான்.

அரண்டு போன விசாலாச்சி நேராக வீட்டுக்கு வந்து எருமை முன்பாக நின்று கொண்டு தன் துக்கத்தைச் சொல்லி வெகு நேரம் அழுதாள். ஒரு கன்றை ஈன்று சிலமாதங்கள்தான் ஆன அது, விசாலாச்சியைப் போல வயதாகித் தளர்ந்து நின்றது. மூச்சு நிற்கும்வரை பெற்ற பிள்ளையை உயிர்வாழத் தூக்கிப் பிடிக்கும் ஒரு தாயின் அழுத்தமான யோசனை அவளுக்குள் ஓடியது. எருமையைத் தடவிக் கொடுத்தாள். அழுதாள். தீனி வைத்தாள். அது போட்ட கன்றை அவிழ்த்துவிட்டு மொத்தப் பாலையும் குடிக்க விட்டாள். குளிர்ந்த நீர் விட்டுக் குளிப்பாட்டினாள். பொட்டு வைத்தாள். தொட்டு வணங்கினாள். பிறகு எருமையை ஓட்டிப் போய் தரகனிடம் விற்று காசை வாங்கிக்கொண்டு வந்து மகனுக்கு அனுப்பி வைத்தாள். எருமையின் நினைவாக அதன் கழுத்துக் கயிறை வாங்கி வந்திருந்தாள்.

எருமையை விற்றுவிட்டது தெரிந்ததும் அம்மாக்கண்ணு கிழவி பல் கடித்து மகளைத் திட்டித் தீர்த்தாள்.

“ஒரு மகனுக்காக ஒரு அம்மா எம்மாம் பெரிய தியாகத்தையும் செய்யலாம் ஆத்தா” எருமையின் கயிற்றைப் பார்த்தபடி கண்ணீர் விட்டாள் விசாலாச்சி.

“நீதானேடி உம் மகனுக்கு ஆத்தா, எருமையை எதுக்கு விக்கணும்? உம் புருசன் இருக்கானே அவனை வித்துக் காசாக்கறது” என்று கத்திய அம்மாக் கண்ணை பரிதாபத்தோடு பார்த்த விசாலாச்சி,

“நானா ஆத்தா எம் புள்ளைக்குத் தாயி? நான்



பெத்த தாயிதானே ஆத்தா. பாலூட்டி வளத்தது யாரு, சொல்லு? அவன பெத்து ஒரு சொட்டுப் பால் ஊறாம என் நெஞ்சு வறண்டு இருந்தப்ப அவனுக்குப் பால் குடுத்தது அந்த எருமைதானே ஆத்தா. தரகனோட அது வம்பு பண்ணாம ஒரு வாய் கத்தாம போனத நீ பாக்கல ஆத்தா. வித்துப்புட்டேன், ஆனா அது கடைசி யில பார்த்த பார்வை. ஏ ஆத்தா, நான் பாவியா பொறந்தவ ஆத்தா... அது பாத்த பார்வையை நான் எப்படித் தாங்குவேன் சொல்லு..."

மகளின் துக்கத்தைக் கண்டு "வித்தது வித்தே, அதுபோட்ட கன்னுக்குட்டியும் சேத்து விக்கிறதுக்கென்ன? அது இங்க கிடந்து கத்திக்கிட்டு இருக்கே..." என்றாள்.

"நம்ம வாழவெச்ச ஜீவனோட நெனப்பா அது நம்மகிட்ட இருக்கட் டும்..." என்று அழுதாள்.

பால் மறக்காத கன்றுக்குட்டியும் ஒரே மாதத்தில் சரியாகத் தீவனம் எடுக்காமல் எலும்பும் தோலுமாகி செத்துப்போனது.

நெருப்பை மேலே கொட்டிக் கொண்ட உடம்புபோல் வாழ்க்கை யானது அன்று விசாலாச்சிக்கு. ஒரு தாயையும் பிள்ளையையும் பிரித்து ஒரு உசிரையும் கொன்று போட்டோமே.. அழுதபடியே கன்றை பின்கட்டில் புதைத்துவிட்டு ஒரு நாவல் மரத்தை நட்டு வைத்தாள்.

மரம் வளர, அந்த இரு ஜீவன்களின் நினைவு அவளை கிளை உலுக்கும் காற்றாக உலுக்கியபடி இருந்தது. இந்த ஒரு வாரமாக அந்த நாவல் மரத்திடம் தான் தன் ரெண்டாம் பிள்ளை வரப் போவதைப் பற்றி சந்தோஷமாய் பேசிக் கொண்டிருந்தாள்.

நாளைக்கு விடியற்காலையிலேயே ரெண்டாம் பிள்ளை வந்துவிடுவான். வந்தவர்களுக்கு களியும், கூழுமா தின் னத்தர முடியும். சந்தைக்குப் போய் நல்ல அரிசி வாங்கிக்கொண்டு, கொஞ்சம் தின்பண்டமும், மருமகளுக்கு வளையல், பேரனுக்குப் பொம்மை எல்லாம் வாங்கிவர காலையிலேயே நாலு கோழி யைப் பிடித்துக்கொண்டு கிளம்பி விட்டாள் விசாலாச்சி.

வாசல் தாண்டியதும் "எங்க விசா லாச்சி கௌம்பிட்டே, சந்தைக்கா?" என்று கேட்டபடி கரடிக் குட்டிபோல தன் பேரனை இடுப்பில் சுமந்து நின்றாள் பக்கத்து வீட்டு சின்னக்கா.

"காத்தாலே இருந்து எம் மருமகளை யும் காணோம் எம் மகனையும் காணோம்... நீ பாத்தியா விசாலாச்சி" என்று கேட்டாள்.

"ராத்திரியெல்லாம் ரெண்டு பேரும் சண்டை போட்டாங்க. காலையில காணோம். மருந்து குடிச்சி செத்துடப் போறா அவ. இந்தப் புள்ள அனாதையா விடும்" என்று கண்ணீர் விட்டாள்.

"அடிபோடி இவளே... புருஷன், பொண்டாட்டி சண் டைக்கு ஒருத்தி மருந்து குடிச்சா இந்த ஊர்ல ஒரு பொம்மனாட்டி இருப் பாளாடி. எங்கனா வேலையா போயிருப்பா வந்துடுவா போ" என்று அவளை அனுப்பிவிட்டு சந்தைக்குக் கிளம்பினாள்.

சமாதானம் செய்தாளே ஒழிய சின்னக்காமீது

எழில்வரதன்



கோபம்தான். அவள் துக்கத்திற்கு இவளுக்கொரு சந்தோஷந்தான். தன் கரிச்சட்டி பேரனை இடுப்பில் வைத்துக் கொண்டு வந்து விசாலாச்சியிடம், "உன் பேரன் எப்பிடி இருப்பான்? உம் பேரன் பேரன்னே? அவன் கருப்பா சிவப்பா சொல்லு..." என்று பேரனைப் பிரிந்திருப்பதைக் குத்திக்காட்டிக்கொண்டே இருப்பாள்.

ஊரில் விசாலாச்சி வயது கிழவிகள் எல்லாம் ஆளுக்கு ஒரு குரங்குகளை இடுப்பில் சுமந்து திரிகிறார்கள். பேரன், பேத்தி இம்சைகளை சந்தோஷமாய்ச் சொல்கிறார்கள். சாகும் வயசு கிழவிகளுக்குப் பேரன், பேத்திகளை சுமப்பதைவிட வேறு என்ன சுகம் இருக்கப் போகிறது. அப்படி ஒரு குடுப்பினை இல்லாமல் போயிற்று விசாலாச்சிக்கு. பையன் வீட்டுக்குப் போகும்போதுதான் பேரனைப் பார்க்க முடியும். ஆசையாய் எடுத்து பேரனைக் கொஞ்சுவாள். அடி வாங்கிய பிள்ளை போல அவன் அழுவான். ஊருக்குத் திரும்பும்போதுதான் கொஞ்சம் ஒட்டுவான். பேரனைப் பிரிந்து ஊருக்கு வரும்போது காரணமில்லாமல் கண்ணில் கண்ணீர் வந்துவிடுகிறது.

"எம் பேரன் ராஜாவாட்டம் சிவப்பு. அப்பன் போல துறுதுறுப்பு. அஞ்சு வயசில இங்கிலீசு பேசுது" என்று ஊரிலிருந்து வந்து கிழவிகளிடம் பேர புராணம் சொல்வாள். ஆனால் பேரை மட்டும் சரியாகச் சொல்லத் தெரியாது. வளவளப்பான, சொன்னால் வாய் கிழிந்து காயம் ஆகும்படி ஒரு பெயரை தன் மகனுக்கு வைத்திருந்தான் ரெண்டாம் பிள்ளை.

இப்படி வயிற்றெரிச்சல் கொட்டிக் கொள்ளும் சின்னக்காவுக்கு இது வேணும் என்று நினைத்தபடி பனை மரத்து ஒற்றையடிப் பாதை வழியாக நடந்து போகும்போது தூரத்தில் சின்னக்கா மருமகள் உயிரை பிடித்துக் கொண்டு ஓடி வருவது தெரிந்தது. பின்னாலேயே அவள் கணவன். ஓடி வந்தவன் அவளைப் பிடித்து அடிஅடியென்று அடித்தான். இவள் பதிலுக்கு அடிக்க, ஒரே ரணகளம். விசாலாச்சி தான் ஓடிச் சென்று இருவரையும் தடுத்தி நிறுத்தி விசாரித்தாள்.

"தினத்துக்கும் சாப்பாடு இல்லாத வறுமையா இருக்கே. நீயெல்லாம் ஒரு ஆம்பளையா? உனக்கு எதுக்கு இடுப்புல வேட்டியும் சட்டையும்னு கேட்டேன். அதுக்கு வேட்டிய அவுத்து எங்கியோ போட்டுட்டு என்னய அடிக்க வர்றான்" என்றாள் சின்னக்கா மருமகள்.

விசாலாச்சி கன்னத்தில் கைவைத்து "அட கேனப் பயலே... இதுக்காடா இப்படி ரவுசு பண்ற... ரோசமுள்ளவன் இந்த வீரத்த சம்பாதிக்கிறதுல காமிக்கணும்டா போ, போ" என்று அவனைத் துரத்தினாள். சின்னக்கா மருமகளைத் தன்னோடு சந்தைக்குக் கூடவே கூட்டிப் போனாள். இப்படியே விட்டுப்போனால் திரும்ப வந்து அடித்தாலும் அடிப்பான்.

வழியெல்லாம் ஒரே சந்தோஷமாக இருந்தது விசாலாச்சிக்கு. தன் ரெண்டாம் பிள்ளை இவர்கள் போல துக்கிரியாக இல்லையே, காப்பாத்தின கடவுளே என்றுதான் சந்தோஷப்பட்டாள்.

கடவுள் என்றால் அது வெங்கட்டன் வாத்தியார்தான். அந்த மனுசன் மட்டும் இல்லையென்றால் ரெண்டாம் பிள்ளை

"எதுக்காக இப்படித் தலைதெறிக்க ஓடி வர்றீங்க...?"

"சீரியல் கதாநாயகிக்கு உடம்பு குணமாயிட்டா 108 தேங்காய் உடைக்கறதா என் மனைவி வேண்டியிருக்காளாம்..."

"அதுக்கு நீங்க ஏன் பயந்து ஓடணும்?"

"தேங்காய என் தலையில உடைக்கறதா இல்ல வேண்டியிருக்கா..."

- குட்டி பிரசன்னா

எங்கே படித்திருக்கப் போகிறான்? எங்கே வேலைக்குப் போயிருக்கப் போகிறான்? இப்பொழுது கையெடுத்துக் கும்பிடுமனவுக்கு யோக்கியமான பிள்ளையாக இருப்பதற்கு அந்த மனுசன்தானே காரணம்.


பையன் படிக்கட்டும்னு வெங்கட்டன் வாத்தியார் சொன்னது உண்மைதான். ஆனா சும்மாவா சொன்னான் மனுசன். தன் பொண்ணுக்கு மாப்பிள்ளையா இல்ல ஆக்கிப்புட்டான். சைக்கிள்ல பொண்ண பின்னாடி உட்கார வெச்சு ரெண்டாம் பிள்ளைய முன்னாடி உட்காரவெச்சு படிக்க பள்ளிக்கூடம் கூட்டிக்கிட்டுப் போன வாத்தியார் எங்கப்போயி ஒண்ணா ஒக்கார வெச்சானோ யாருக்குத் தெரியும். கடைசியில கல்யாணம் பண்ணிவெச்ச பெறகு தானே தெரியிது அந்த வெக்கங்கெட்ட வாத்தியாரு எண்ணம்.

வாத்தியார் பொண்ணு நல்ல சிவப்புதான். நல்ல படிப்பு படிச்சு வேலைக்குப் போறவதான். அழகுதான். அதுக்காக படியேறி சம்பந்தம் பேச எத்தினி தைரியம் வேணும். எம் பையன் வெத்தல கிள்ளிக்கிட்டிருந்தா வந்து எம் பொண்ண கட்டிக்கோன்னு கேட்டிருப்பானா வாத்தியாரு? எம் புள்ளைய நான் பிரிஞ்சிருக்க வாத்தியாருதானே காரணம்.

சொந்தத்தில் இத்தனை செவப்பா பொண்ணு இல்லயேன்னு கல்யாணத்துக்குச் சம்மதம் சொல்லிட்டா விசாலாச்சி. சம்மதம் என்று சொல்லாவிட்டால்கூட கல்யாணம் ஆகித்தான் இருக்கும் என்பது பின்னாடி தான் தெரிந்தது விசாலாச்சிக்கு. படியேறி சம்பந்தம் பேசறதுக்கு முன்னாடியே பத்திரிகை அடிச்ச கொடுமைய என்ன சொல்ல...

'வாத்தியாரே, எம் பையன் படிக்காம இருந்து உம் பொண்ணையும் கட்டாம இருந்திருந்தா அவன் இங்கனையே என் வீட்டுல இருந்திருப்பானே... நான் தெனம் எம் பையன பாத்த சந்தோஷத்தில இருந்திருப்பேனே... உன்னாலதானே நான் பையன பிரிஞ்சிருக்கேன்... எனக்குத் தேவைதானா'ன்னு கேட்டதும் சிரிச்சிக்கிட்டு ஒரு கதை சொன்னானே...

"விசாலாச்சி கால கால கட்டிக்கிட்டு மொகத்தப் பாத்துக்கிட்டு பட்டினியா கெடந்ததெல்லாம் அந்தக் காலம். இப்ப நாடு விட்டு நாடு போறாங்க சம்பாதிக்க. காலம் அப்படிக் காலம். தெனத்துக்கும்



மகளப் பாக்கணும், பேரன பாக்கணுன்னா ஆகுமா? இது எலிக்கும் மீனுக்குமான உறவு மாதிரி விசாலாச்சி. ரெண்டையும் கயிறு போட்டு கட்டி வெக்க நெனைச்சா தப்பாயிடும். எலி வளையில இருக்கணும். மீனு தண்ணியில இருக்கணும். கயிறு போட்டுக் கட்டினா எலியோட போற மீனு வளையில சாகும்-மீனோட போற எலியும் தண்ணியில சாகும். அது அது எடத்தில அது அது இருக்கணும் அதான் தருமம்" என்கிறானே.

பெத்தவளும் பொறந்ததுவும் பிரிஞ்சு கெடக்கிறதுதான் தருமமா? யாரிடம் நியாயம் கேட்க? பலமுறை வருகிறேன் என்று சொல்லிவிட்டு ஒவ்வொரு முறையும் வராமல் ஏமாற்றிய ரெண்டாம் பிள்ளை இதற்குப் பதில் தருவானா? குறைந்தபட்சம் ஊருக்காவது இந்த முறை வருவானா?

(தொடரும்)



தமிழகத்தின் வி.ஐ.பி.களான கலைஞர், ஜெயலலிதா, ரஜினிகாந்த் உள்ளிட்ட பல பிரமுகர்கள் வசிக்கும் தொகுதி ஆயிரம் விளக்கு. ஏறக்குறைய இரண்டேகால் லட்சம் வாக்காளர்களைக் கொண்ட இத்தொகுதியில் இஸ்லாமியர்களும், வன்னியர்களும் கணிசமான அளவில் வசிக்கின்றனர். இங்கு கடைசியாக நடைபெற்ற நான்கு தேர்தல்களில் தி.மு.க. மூன்று முறையும் அ.தி.மு.க. ஒரு முறையும் வென்றுள்ளன. பத்து மாநகராட்சி வார்டுகளைக் கொண்டுள்ள இந்தத் தொகுதியில் ஆறு வார்டுகள் அ.தி.மு.க. வசமும், மூன்று வார்டுகள் தி.மு.க. வசமும், ஒரு வார்டு காங்கிரஸ் வசமும் இருக்கின்றன.

கடந்த தேர்தலில் ஸ்டாலின் 49,056 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

தொகுதி விசிட்-10

ஸ்டாலின்

அவரை எதிர்த்த த.மா.கா.வைச் சேர்ந்த விடியல் சேகர் 41,782 வாக்குகளைப் பெற்றார். தி.மு.க.வின் கோட்டை என்று வர்ணிக்கப்படும் இந்தத் தொகுதியில் நாம் முதலில் சந்தித்தது தொகுதிவாசியும், காங்கிரஸ் பிரமுகருமான இதயத்துல்லாவை.

“பள்ளிக்கூட வகுப்பறை கட்டித் தந்தது, பேருந்து நிழற்குடை அமைச்சதுன்னு பல அத்தியாவசியப் பணிகளைச் செய்திருக்கிறார் ஸ்டாலின். முக்கியமாக பீட்டர்ஸ் சாலையில் கட்டப்பட்ட இரண்டு பாலங்கள், மியூசிக் அகாடமி அருகே கட்டப்பட்டுள்ள பாலம் ஆகியவை ஆயிரம் விளக்கின் மிக முக்கியப் பிரச்னையான போக்குவரத்து சிக்கலுக்குத் தீர்வு. இது அவருடைய செல்வாக்கை மேலும் உயர்த்தியிருக்கிறது. மாநில அளவிலான முக்கியப் பொறுப்பினை

வகித்தாலும்கூட தொகுதியில் நடக்கும் எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறார். தொகுதிப் பிரச்னையை தானே நேரடியாக வந்து, கேட்டுச் சரிசெய்கிறார். நாம் சந்திக்க வேண்டும் என்றாலும் அறிவாலயம், அன்பகம் இல்லம் என்று எங்கு வேண்டுமானாலும் சந்திக்க முடிகிறது" என்கிறார் இதயத்துல்லா.

ஆனால், "இது தி.மு.க.வின் கோட்டை என்பதெல்லாம் வெற்றுக் கூச்சல்" என்கிறார் அ.தி.மு.க. பகுதிச் செயலாளரான ஜெகதீஷ்.

"முதலியாண்டான் தோட்டத்துல ஏகப்பட்ட குடிசை மக்கள் இருக்காங்க. அவங்களுக்கு குடியிருப்பு கட்டித் தர்றேன்னு சொல்லி வோட்டுக் கேட்டாரு. இன்னிய வரைக்கும் அந்த ஏரியாவைத் திரும்பிக்கூட பார்க்கல. ஒண்ணரை வருஷத்துக்கு முன்னால சத்தியமூர்த்தி நகர்ல ஒரு தீ விபத்து நடந்தது. அதுல பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல்கூட சொல்ல வரல. அம்மாதான் அந்தக் குடும்பங்களுக்கு நிவாரணம் கொடுத்தாங்க. தொகுதிக்குள்ள இருக்குற ஆறு அ.தி.மு.க. வார்டுகளுக்குத் தன்னோட எம்.எல்.ஏ. நிதியிலிருந்து கொஞ்சம்கூட நிதி ஒதுக்கித் தரல. வருஷா வருஷம் பொங்கல் திருவிழா நடக்குறப்போ மட்டும் தொகுதிக்குள்ள வருவாரு. ஆக இந்தத் தடவை ஸ்டாலின் ஜெயிக்கறது

தலை தப்புமா?

ஆயிரம் விளக்கு

ஒண்ணும் அவ்வளவு சுலபமில்ல. அம்மா ஆதரவு அலைலேர்ந்து அவரது தலை தப்புறது கஷ்டம்ங்க" என்கிற ஜெகதீஷ், மாநகராட்சி கவுன்சிலரும்கூட.


"இந்தத் தொகுதியிலதான் நான் பொறந்ததுல இருந்து இருக்கேன். நான் வோட்டுப் போட ஆரம்பிச்சதிலிருந்து இன்னியவரைக்கும் உதயசூரியனுக்குத்தான் வோட்டுப் போடுவேன். வர்ற தேர்தல்லயும் கலைஞர் கட்சிக்குத்தான் எங்க வோட்டு" என்றார் தொகுதிவாசியான பலராமன். ஏன் என்று கேட்டால், "பழகிடுச்சு" என்கிறார் கூலாக.

சுவர் விளம்பரம் எழுதுவதை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த அ.தி.மு.க. கவுன்சிலரான சியாமளா நம்மிடம் மிகவும் ஆர்வத்துடன் பேசினார்.

"இந்தத் தொகுதிக்குள்ள சமுதாயக் கூடம்ங்கறதே கிடையாது. அதுக்காக ஸ்டாலின் இதுவரைக்கும் ஒண்ணுமே செய்யல. அதே போல என்னோட வார்டுக்குத் தன் எம்.எல்.ஏ. நிதியிலிருந்து பணமே ஒதுக்காம விட்டுட்டாரு. எம்.எல்.ஏ.



• இதயத்துல்லா



• பலராமன்



• சியாமளா



• ஜெகதீஷ்



• சே.ம.நாராயணன்

தொகுதிப் பிரச்னையைத் தீர்க்க ஒண்ணும் செய்யலைன்னாலும் கவுன்சிலரா இருக்கிற நாங்க குறிப்பா அதி.மு.கவைச் சேர்ந்தவங்க மக்களோட பிரச்னைகளுக்கு உடனடி தீர்வு கிடைக்க ஏற்பாடு பண்றோம். அதனால இந்தத் தொகுதியில அ.தி.மு.க. ஜெயிக்கறது உறுதி'' என்றார்.

ஏரியாவில் பூக்கடை நடத்தி வரும் மூர்த்தி என்ன சொல்கிறார்?

"தொகுதிக்கு நல்லது நிறைய நடந்திருக்கு. மக்களை ஸ்டாலின் வந்து அடிக்கடி பார்க்கறாரு. ஆனா இந்தத் தொகுதியில ஜெயிக்கறது யாருன்னு அவ்ளோ தெளிவா சொல்ல முடியாது. நான் எப்போவுமே ரெட்டை இலைக்குத்தான் வோட்டுப்போடுவேன். ஸ்டாலின் மேயராகணும்ங்கறதுக்காக மட்டும் சூரியனுக்குப் போட்டேன். வர்ற எலக்‌ஷன்ல நிச்சயமா ரெட்டை இலைக்குத்தான் என் வோட்டு."



• பீட்டர்ஸ் சாலை மேம்பாலம்...



• மூர்த்தி

கல்லூரி மாணவியான அமுதா முதலில் தயங்கி, பின்னர் தன் தந்தையிடம் அனுமதி பெற்று நம்மிடம் பேசினார்.

"அடிக்கடி தொகுதிக்கு ஸ்டாலின் வருவாரு. அப்பாகூட அவர்கிட்ட நாலஞ்சு தடவை மனு கொடுத்திருக்காங்க. அதுல ரெண்டு மனுக்களுக்கு உடனடியா நடவடிக்கை எடுத்ததா அப்பா சொல்லியிருக்காங்க. இப்போதுதான் முதல் தடவையா வோட்டுப் போடப் போறேன். அது ஸ்டாலினுக்குத்தான்."

ஏரியா கவுன்சிலரான சேம.நாராயணன், "பாலங்கள் கட்டியது, மழலையர் பள்ளிகள் கட்டிக் கொடுத்தது, சிமெண்ட் சாலைகள் போட்டது ஆகியவற்றால் தொகுதி மக்களிடம் ஸ்டாலினுக்கு நல்ல பெயர் இருகிறது. அடிக்கடி தொகுதிக்குள் வந்து பொது மக்களின் குறைகளைக் கேட்டுத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய எம்.எல்.ஏ.வாக இருக்கிறார். அதனால் அவருக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது'' என்றவர், தொகுதிக்குள் இருக்கும் சில பிரச்னைகளையும் முன் வைத்தார். "இங்குள்ள குடிசைப் பகுதிகளை அகற்றி, அதில் வசிப்பவர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டித் தருவது, போக்குவரத்து சிக்கல் அதிகமாக இருக்கும் வள்ளுவர் கோட்டம் பகுதி மற்றும் எல்டாம்ஸ் சாலையில் மேல் மற்றும் கீழ் பாலங்களைக் கட்டுவது, சுகாதாரத்தை மேம்படுத்துவது என்று நிறைய பணிகள் அவருக்குக் காத்திருக்கின்றன."

பொதுவாகப் பார்த்தால் தொகுதிக்குள் ஸ்டாலினுக்கு ஆதரவான காற்றே பலமாக வீசுகிறது. 'ஒருவேளை தி.மு.க. ஜெயித்து ஆட்சியமைக்கும் பட்சத்தில் ஆயிரம் விளக்குக்கு முதல்வர் தொகுதி அந்தஸ்து கிடைத்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை' என்று குஷியாக நம்மிடம் கிசுகிசுத்தார் ஒரு உடன்பிறப்பு. தி.மு.க. பலமாக இருக்கும் இந்தத் தொகுதியில் ஸ்டாலினை எதிர்த்துக் களமிறங்க லோக்கல் ரத்தத்தின் ரத்தங்கள் துடித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், அ.தி.மு.க. சார்பாக குஷ்பு அல்லது ராதாரவி போன்ற வி.ஐ.பி. வேட்பாளரைக் களமிறக்கும் முயற்சிகளும் நடந்து கொண்டிருக்கின்றனவாம்.

- இரா.முத்துக்குமார்

படங்கள் : ராஜன்

உள்ளங்கை ரகசியம்!

டி.சீனிவாசன்



கல்வி அதிகாரி, தலைமை ஆசிரியரிடம் ஆச்சரியப்பட்டார்...

"அதெப்படி... அந்த கிளாஸ்ல மட்டும் எல்லாருமே பாஸ்மார்க் வாங்கறாங்க? அது அந்த கிளாஸ் டீச்சரோட உழைப்பா...? இல்ல படிக்கற பசங்களா பாத்து அந்த கிளாஸ்ல போட்டிருக்கீங்களா...?"

"இல்ல... சார்.... அதுக்குக் காரணம் முழுக்க முழுக்க அந்த வகுப்பாசிரியரோட அணுகுமுறைதான். இந்த வருஷம்னு இல்ல... அவங்க சர்வீஸ்ல... அவங்களோட கிளாஸ்ல எல்லாருமே ஆரம்பத்துல எப்படி இருந்தாலும் முழுப் பரீட்சையில கண்டிப்பா பாஸ்மார்க் வாங்கிடுவாங்க சார்!"

தலைமையாசிரியர் திடமான குரலில் சொன்னார்.

"அப்படியா...? வெரி இன்ட்ரஸ்டிங்... சரி... அப்படி என்னதான் அவங்களோட அப்ரோச்?"

கல்வி அதிகாரி ஆர்வத்துடன் கேட்டார்.

"சார்... அத வாயால சொல்றதவிட வாங்க.... அந்த கிளாஸுக்கே போகலாம். ஜன்னல் வழியா வாட்ச் பண்ணலாம்..." தலைமை ஆசிரியர் சொல்ல, இருவரும் அந்த வகுப்புக்குச் சென்றனர். மறைவாக நின்று அந்த வகுப்பைக் கவனிக்க ஆரம்பித்தனர்.

வகுப்பாசிரியை நந்தினி, அப்போதுதான் ஒரு தேர்வு நடத்தி... விடைத்தாள்களைத் திருத்தி மாணவர்களிடம் கொடுத்திருந்தாள்.

"இதுல நாப்பது மார்க் எடுக்காம ஃபெயிலானவங்க எவ்வளவு பேர்... ப்ளீஸ் எழுந்திருங்க!"

நான்கு மாணவர்கள் எழுந்து நின்றனர். நந்தினி முதல் மாணவனிடம் சென்றாள். அந்த மாணவனின் கண்கள் கலங்கின.

"நாப்பதுக்கு எவ்வளவு மார்க் குறைச்சல்?"

"ரெண்டு மார்க் மிஸ்..."

உடனே நந்தினி பிரம்பை எடுத்தாள். அதை அந்த மாணவனின் கையில் திணித்துவிட்டு, "உனக்குச் சரியா சொல்லிக் கொடுக்காததுக்கு தண்டனை எனக்குத்தான். ரெண்டு அடி கொடு... ம்..." சொல்லிவிட்டு தன் உள்ளங்கையை நீட்டினாள்!



இத்தாலிக்குச் சென்று, வாயில் சுலபத்தில் நுழைந்துவிடாத ஒரு விருதை வாங்கி வந்திருக்கிறார் ஒரு தாத்தா (அந்த முழும் நீள விருதை 'தியேட்டருக்கான ஐரோப்பிய பரிசு' என்று தமிழ்ப்படுத்தலாம்). இவர் மேடையேறி பரிசை வாங்கும்போது ஒட்டுமொத்த அரசாங்கமும் எழுந்து நின்று மரியாதையோடு கைத் தட்டி மகிழ்ந்தது. இவர் பெயர் ஹெறால்டு

ஒரு பக்கம்



அமெரிக்காவை குட்டும் தாத்தா!

பின்டர். 75 வயது நாடகத் தாத்தா. கூன் போடாமல் நிற்கிறார். இவர் மட்டுமல்ல... இவர் பேனாவும்.

சோடா குடித்துவிட்டு "விருது வழங்கிய ஆன்றோர்களுக்கு நன்றி. பேச வாய்ப்பளித்த சான்றோர்களுக்கு நன்றி" என்று துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு போய்விடவில்லை இவர். மைக்கை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அமெரிக்காவின் முகத்தில் பலமாக ஒரு குத்து விட்டிருக்கிறார். "ஐரோப்பியா ஒன்றிணைந்து அமெரிக்காவை எதிர்க்க வேண்டும். இது அவர்களது கடமை. அப்படிச் செய்யவில்லையென்றால் அமெரிக்கா ஐரோப்பியாவையே அழித்துவிடும்."

இலேசுபட்ட தாத்தா அல்ல இவர் என்பதற்கு இதைவிடச் சிறந்த உதாரணம் சொல்ல முடியாது. மேடை என்று ஏறி விட்டால் போதும்... ஏதோ குத்துச் சண்டை மேடையில் இவரையும் அமெரிக்காவையும் ஏற்றிவிட்டதைப் போல உணர்ச்சிவசப்படத் தொடங்கிவிடுவார். குட்டுவார், கத்துவார், பிறாண்டுவார். மொத்தத்தில் அமெரிக்காவை உலுக்கியெடுத்து கீழே தள்ளி ரத்தக் களறியாக்கிவிட்டுத்தான் நெற்றி வியர்வையைத் துடைப்பார்.

தனது நோபல் உரையைக்கூட அமெரிக்காவை குத்தியெடுக்கும் உரையாகவே மாற்றிக் கொண்டார். எந்தெந்த லத்தீன் அமெரிக்க நாடுகளில் எப்படியெல்லாம் அமெரிக்கா விளையாடியிருக்கிறது என்று நிறுத்தி நிதானமாகப் பட்டியலிட்டு வைத்தார்.

1957லிருந்து நாடகம் எழுதிக் கொண்டிருக்கிறார். எல்லா மொழியிலும் இவரைத் தழுவிக் கொண்டிருக்கிறார்கள். தனக்குக் கொடுக்கப்பட்ட நோபல் பற்றி இவர் என்ன சொன்னார் தெரியுமா? "மண்டையில் அடிபட்டு ஆஸ்பத்திரியில் இருந்தேன். ரெண்டு நாள் கழித்துப் பார்த்தால் எனக்கு நோபல் பரிசு கிடைத்திருக்கிறது என்று சொன்னார்கள். வாழ்க்கையில் மேடு பள்ளம் சகஜம்தான்."

'அமெரிக்காவைத் திட்டுவதைத் தவிர வேறு என்ன செய்திருக்கிறீர்கள்?' என்று கேட்டால், தாத்தா இப்படிப் பதிலளிக்கிறார். "29 நாடகம் எழுதிட்டேன். இது போதாதா?"

- மருதன்



26.3.2006 முதல் 1.4.2006 வரை



• படம்: ஸ்ரீஹரி

மேஷம்: வாக்கு, தனம், கல்வி மேலோங்கும். பொருளாதாரக் கஷ்டம் விலகும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். எதிலும் கோபப்படாமல் இருப்பது நல்லது. வாக்குவாதம் செய்ய வேண்டாம். மனச்சலனம் தீரும். திருமணக் காரியம் கைகூடும். வியாபார விரிவாக்கம் செய்ய நற்பலன் கிட்டும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. ஆஞ்சநேயர் சுவாமியை சனிக்கிழமைதோறும் தரிசனம் செய்து வர, நற்பலன் கிடைக்கும்.

ரிஷபம்: முயற்சிக்கும் காரியத்தில் வெற்றி கிட்டும். வழக்கு வெற்றி பெறும். குழந்தைகள் இடம் மாறிச் செல்வார்கள். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். சிலருக்கு வீடு மாறும் அமைப்பு உள்ளது. நெருங்கிய உறவினர் / நண்பர் விலகிச் செல்வார்கள். பதவி உயர்வு, சம்பள உயர்வு ஏற்படும். வியாபாரத்தில் விறுவிறுப்பு ஏற்பட்டு லாபம் காணும். வியாழன்தோறும் தட்சிணாமூர்த்தி சுவாமி தரிசனம் செய்து வரவும்.

மிதுனம்: லட்சியங்கள் நிறைவேறும். சுபகாரியம் கைகூடும். வாக்குவன்மை மேலோங்கும். பணக்கஷ்டம் தீரும். புத்திர பாக்கியம் ஏற்படும். கணவன் - மனைவி உறவு நற்பலனைத் தரும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். நண்பர் / உறவினர் மூலம் அனுகூலம் ஏற்படும். வீடு / வாகனம் வாங்க நல்ல தருணம். மாணவ / மாணவியர் அதிக மதிப்பெண் பெறுவார்கள். ராகு / கேது வழிபாடு சிறந்தது.

கடகம்: படிப்பில் அதிக முன்னேற்றம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். திருமணக் காரியம் கைகூடும். உத்தியோகத்தில் பதவி உயர்வு கிட்

நடக்குமென்பார்; நடக்கும்!

செய்ய நற்பலன் கிட்டும்.

பரத்வாஜ்...

என் இரு மகன்களுடைய திருமணம், எதிர்காலம் பற்றிக் கூறவும்?

- எம். ஜெயந்தி, கோவை

அரவிந்துக்கு 2007-ல் திருமணம் நடக்கும். நாக தோஷம் / செவ்வாய் தோஷம் உள்ள ஜாதகத்தைச் சேர்க்கவும். 14.11.2006-க்குப் பிறகு ராஜயோகமான காலம் கவலைப்படத் தேவையில்லை.

ஆனந்த் ஜாதகப்படி வெளிநாட்டு வேலை நன்றாக இருக்கும். சுத்த ஜாதகமாகப் பார்க்கவும். 27 வயதில் திருமணம் நடக்கும். வீட்டில் பார்த்து வைக்கும் திருமணம் மேன்மையாக அமையும்.

எனது மைத்துனன் மகளுக்கு எப்போது திருமணம் அமையும்?

- ஏ.எம்.கோவிந்தன், கொளத்தூர்

படித்த, பண்புள்ள, நல்ல வேலையிலுள்ள கணவன் அமைவான். 2006-ல் திருமணம் முடியும்.

எனது மருமகன் 'கிருத்திகை' நட்சத்திரம். 'புனர்பூச' நட்சத்திரத்திலுள்ள

டும். தந்தையின் உடல்நிலையில் சற்று கவனம் தேவை. வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள். சங்கடங்கள் வில கும். குரு / சனி வழிபாடு செய்து வரவும். சிவன் ஸ்தலம் சென்று அம்பாள் தரிசனம் செய்ய நற்பலன் கொடுக்கும்.

சிம்மம்: உடல்நிலையில் கவனம் தேவை. கொடுக்கல் வாங்கலில் உஷார். நெருங்கிய மனிதர்களால் தொல்லை வரலாம். வாக்குவாதம் தவிர்க்கவும். வண்டி வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. திருமணம் தடங்கல் விலகி கைகூடும். எதிரிகளை வீழ்த்தும் வாரம். பகைவர்கள் விலகிச் செல்வார்கள். தொழில் துறையில் சற்றுக் கவனம் தேவை. யாருக்கும் ஜாமீன் போட வேண்டாம். குழந்தைகள் இடம்மாறிப் போவார்கள். உத்தியோகத்தில் எதிர்ப்புகள் இருக்கும். வெள்ளிக்கிழமை அன்று ராகு காலத்தில் துர்க்கை வழிபாடு

கன்னி: குடும்பத்தில் குழப்பங்கள் மிகுந்து காணும். திருமணத் தடங்கல் விலகி சுப காரியம் கைகூடும். தேர்வில் அதிக மதிப்பெண் கிடைக்கும். குழந்தைகள் வழியில் இடமாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல லாபம் காணும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் தீரும். வழக்கு வெற்றி பெறும். தொழில் மூலம் அல்லது பூமி மூலம் ஆதாயம் கிட்டும். நீண்ட கால கடன் தொல்லை தீரும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். ராகு / கேது வழிபாடு செய்து வரவும்.

துலாம்: வழக்கு வெற்றி அளிக்கும். உடல்நிலை பாதிப்பு விலகும். வாக்கு வன்மை மேலோங்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். குடும்பத்தில் சுபச் செலவு ஏற்படும். சிலருக்கு வீடு மாற்றம் ரெடி. வீடு / வாசல் வாங்க ஏற்ற தருணம். குழந்தைகள் வழியில் சுபச் செலவு ஏற்படும். நண்பர் / உறவினர்கள் மூலம் ஆதாயம் கிட்டும். எதிரிகள் சரண் அடைவார்கள். வியாபாரத்தில் அபரிமித லாபம் கிட்டும். உத்தியோகத்தில் வேலைப் பளு குறையும். புதிய வேலை கிடைக்கும். நீண்ட கால பிரச்னை தீர்வு பெறும். ஆஞ்சநேயர் நாமாவளி படித்து வரவும்.

விருச்சிகம்: பணக் கஷ்டம் விலகும். ஆடை ஆபரணம் சேரும். மனக் கிலேசம் தீரும். குழந்தைகள் இடம் மாற்றம் ஏற்படும். நெருங்கிய நண்பர் / உறவினர்களை விட்டு விலக நேரிடும். பூர்வீக சொத்து பாகப்பிரிவினை ஏற்படும். கடன் தொல்லை தீரும். வழக்கு வெற்றி பெறும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

பத்திரிகையில் பெயர் வரும். திடீர் தன வரத்து, குழந்தைப்பேறு கிட்டும். ராகு / கேது வழிபாடு சிறந்தது. செவ்வாய்க்கிழமை தோறும் முருகன் ஸ்தலம் சென்று முருகப் பெருமானை வழிபட்டு வரவும்.

தனுசு: மிகவும் சந்தோஷமான வாரம். சுபச் செலவு ரெடி. பணக்கஷ்டம் இராது. கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். திருமணம் கைகூடும். நண்பர் / உறவினர்களால் ஆதாயம் கிட்டும். தாயின் உடல்நிலை சற்று பாதிக்கும். வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கூடும். புதிய தொழில் செய்ய உற்ற தருணம். குழந்தைகளால் சந்தோஷம் கிட்டும். சத்ரு தொல்லை விலகும். வெளியூர்ப் பிரயாணம் செல்ல நேரிடும். ராகு / கேது / சனி வழி பாடு நன்மை தரும். சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயர் தரிசனம் செய்யவும்.

மகரம்: பொருளாதாரக் கஷ்டம் இராது. கொடுக்கல் வாங்கல் நற்பலனை அளிக்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். பண வரத்து ரெடி. நீண்ட கால கனவு நிறைவேறும். வீடு / வாகனம் வாங்க நல்ல தருணம். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். பதவி வரும். நீண்ட தூரப் பிரயாணம் செல்ல நேரிடும். திருமணம் கைகூடும். உடல்நிலையில் பாதிப்பு இல்லை. தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். குரு / சனி வழிபாடு செய்து வரவும். வியாழன்தோறும் ராகவேந்திர சுவாமி வழிபாடு செய்து வரவும்.

கும்பம்: பணக் கஷ்டம் வராது. உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் இருந்தாலும், குரு கடாக்ஷத்தால் தவிடுபொடி ஆகும். பொருளாதார மேன்மை கிட்டும். எதிரிகள் தொல்லை குறையும். பணவரத்து ஏற்படும். கணவன் / மனைவி அனுசரணையுடன் நடந்துகொள்வது நல்லது. பெயர், புகழ் வரும். உடல்நிலையில் கவனம் தேவை. வண்டி வாகனத்தில் செல்லும் போது உஷார். யாருக்கும் ஜாமீன் போடுவது கூடாது. புதிய பதவி தேடி வரும். தொழில் துறையில் எதிர்ப்புகள் இருந்தாலும் சமாளிக்க பலமும் வரும். ராகு / கேது வழிபாடு செய்து வரவும்.

மீனம்: பொருளாதாரக் கஷ்டம் விலகும் வாரம். எண்ணிய எண்ணம் ஈடேறும். மனத்தில் துணிவும் தைரியமும் ஏற்படும். உத்தியோகத்தில் பதவி உயர்வு ஏற்படும். நண்பர் / உறவினர் மூலம் அனுகூலம் ஏற்படும். உடல்நிலை பாதிப்பு இல்லை. செலவுகள் சுபமானதாக இருக்கும். தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவீர்கள். திடீர்ப் பிரயாணம் ஏற்படும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்து வரவும். ○

...பதில்கள்

பையனைக் காதலிக்கிறாள். திருமணம் பொருத்தமாயிருக்குமா? எப்போது திருமணம் முடிக்கலாம்?

- காயத்ரி, பெங்களூர்

கிருத்திகை நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணுக்கு, புனர்பூசத்தில் பிறந்த பையனைத் திருமணம் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் வம்சாவளி இல்லாமல் காலமெல்லாம் கஷ்டப்பட நேரிடும்.

என் மகள் விரும்புகின்றபடி வாழ்க்கைத் துணை அமையுமா? எதிர்காலம் எப்படி இருக்கும்?

- சாவித்திரி, சென்னை

உங்கள் பெண்ணுக்கு குருவும் சனியும் ஒன்று சேர்ந்து லக்னத்தில் இருப்பதால் யாரையும் விரும்பித் திருமணம் செய்வது முடியாத காரியம். 30.10.2006-க்குப் பிறகு திருமணம் நடக்கும். பரிகாரம் தேவையில்லை.

பெயரில்லாதவன்!

சங்கர்பாபு



கல்யாணசுந்தரம் சற்று முன்புதான் இறந்து போயிருந்தார். தூக்கத்தில் உயிர் பிரிந்திருந்தது. உறவினர்களுக்குத் தகவல் சொல்லும் பொறுப்பு என்னைச் சேர்ந்து விட்டது. கூடப் பிறந்தவர்கள் என்று அவருக்கு யாரும் கிடையாது. குழந்தைகளும் கிடையாது. அவரது பெரியப்பா வழியில் தான் சகோதர, சகோதரிகள் மொத்தம் ஐந்து பேர் உண்டு. அதில் மூத்தவன் உள்ளூரில் இருக்கிறான். நான்கு பேர் வெளியூர்களில் இருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் நான் இப்போது தகவல் சொல்ல வேண்டும்.

தெரிந்தவர்கள், அக்கம் பக்கம் உள்ளவர்கள், கண்ணீர், சோகம் என்று வீடு இறப்பை எதிர்கொள்ளத் துவங்கியிருந்தது. என் துயரை அடக்கிக்கொண்டு தொலைபேசியை எடுத்தேன்.

முதலில் நடராஜன், ஐம்பத்தி ஏழு வயதாகிறது. கல்யாணசுந்தரத்தை விட ஒரு வயது குறைந்தவர். ''அண்ணா, அண்ணா...'' என்று உயிராய் இருப்பார். எந்த ஒரு காரியத்தையும் அண்ணனிடம் ஆலோசிக்காமல் செய்ய மாட்டார். ''ஏதாவது ஒரு இடியாப்ப மாவு வாங்குடே; கொகவர்த்திச் சுருள் வாங்கறதுக்குக் கூட என்னைக் கேக்கணுமா... இனிமேல் கேட்டா உதைப்பேன்...'' என்றெல்லாம் சலிப்பான பதில் வந்தபோதுகூட நடராஜன் கவலைப்பட்டதில்லை.

அவரது வீட்டில் பெரிய அளவில் கல்யாணசுந்தரத்தின் புகைப்படம் உண்டு. இன்னொன்றில் அவர் அமர்ந்திருக்க, நடராஜன் கைகட்டி நிற்கிறார்.

தனது மூத்த மகளின் குழந்தைக்கு 'கல்யாணி' என்றும், மகனின் மகனுக்கு 'கல்யாணசுந்தரம்' என்றும் பெயரிட்டு தனது அண்ணன் பாசத்தை உலகறியச் செய்த நடராஜனுக்கு, தனது பேரக் குழந்தைகள் தன்னை தாத்தா என்று கூப்பிடுவதைவிட, கல்யாணசுந்தரத்தையே தாத்தா என்று அழைக்கப் பிரியப்படுகின்றன என்று சொல்வதில் அலாதி இன்பம் உண்டு. தீபாவளி என்றால் புத்தாடைகள் எடுத்து வந்து தம்பதியரின் ஆசியைப் பெற்ற கையோடு தான் கொண்டு வந்த ஆடைகளின் சிறப்புகளைப் பட்டியலிடத் துவங்குவார் நடராஜன். அது மெல்ல பிறர் பரிசளித்திருந்த ஆடைகளை இகழும் திசையில் செல்லத் துவங்கும்.

தொடர்பு கிடைத்தது. அதிர்ந்து விட்டார். திணறினார். ''அண்ணியை தைரியமா இருக்கச் சொல்லு...'' என்றார் உடைந்த குரலுடன். "அண்ணன் இல்லாத உலகில் இனி நமக்கு என்ன வேலை...?'' என்றெல்லாம் புலம்பி ''முட்டாளே, மசமசவென்று நிற்காதே. ஆக வேண்டிய வேலையைப் பார்... பீரோவை யாரும் திறக்க வேண்டாம்...'' என்று முடித்துக் கொண்டார். இன்னும் சில மணி நேரத்தில் இங்கே இருப்பார்.

அடுத்தது சுசீலா. இவள் குரல்

கம்மப் பேசுவதில் நிபுணியாக இருந்தாள். நினைத்த மாத்திரத்தில் கண்ணீரை வரவழைத்து விடுவாள். மற்றவர்களைப் போல் தனக்கு நடிக்கத் தெரியாது என்றும் சொல்லிக்கொள்வாள். கல்யாண சுந்தரத்திடம் 'எனக்குக் கூடப் பொறந்த வங்க இருந்து என்ன பிரயோஜனம்? நான் உன்னை மட்டும்தாண்ணே, உடன் பிறப்பா நெனைக்கேன்...'' என்று துவங்குவாள். சிறிது நேரத்திற்குப் பின் சில ஆயிரம் ரூபாய்களுடன் வெளியேறி விடுவாள்.

ஒரு தடவை கல்யாணசுந்தரம் சென்ற பைக் விபத்துக்குள்ளாகியிருந்தது. சிறிய காயம்தான். தகவல் அறிந்த சுசீலா ஆஸ்பத்திரிக்கு விரைந்தாள். அடுத்து சில நிமிடங்களில் அந்த ஆஸ்பத்திரியின் வரலாற்றிலேயே இதுபோல் அழுகை வெளிப்பட்டதில்லை என்பதை தலைமை மருத்துவர் ஒப்புக்கொண்டார். நிலைமை விபரீதமாய்ப் போவதை உணர்ந்த பிற சகோதர, சகோதரிகளும் உடனே தங்கள் கண்ணீர்ச் சுரப்பிகளுக்கு அதிக வேலை கொடுக்க வேண்டியதாகிவிட்டது.

இதுவரை ஆறு பாடல்களை, மூன்று சேனல்களின் மூலம் தனது பாசமிகு அண்ணனுக்கு டெடிகேட் செய்திருக்கிறாள்.

அண்ணன் கோபக்காரர்தான்; கேவலமாகப் பேசக்கூடியவர்தான்; மனைவியைக்கூட மதிக்காதவர்தான். ஆனால், அண்ணனின் கம்பீரமே அதில்தானே இருந்தது? ஒரு அதிகாலைப் பொழுதில் அவள் கனவு கண்டாள். வயல் வெளியில் நின்று கொண்டு சுற்றிலும் பார்க்கிறாள். அருகில் மூட்டைகளில் நெல். அது அண்ணனின் வயல் போலவே இருக்கிறது. எதிர் காலத்தில் அண்ணன் அதைத் தனக்கே தந்துவிடக் கூடும். அதற்காக 'பிச்சைக்காரர்களும் இப்போது நன்றாகவே ஆடை அணிகிறார்கள்...' போன்ற குத்தல்களையும் தாங்கித்தான் தீர வேண்டும்.

சொன்னேன். ''நான் பக்கத்துல இருந்தா எமன் வந்திருப்பானா? என் அண்ணனை விட்டிருப்பேனா...?'' என்று கதறியழத் துவங்கினாள். நான் ரயில் பயணத்தில் அவளருகே உட்காரக் கூடியவர்களை யோசித்துப் பார்த்தேன்.

என் முன்னால் இப்போது தனலட்சுமியின் எண்கள் இருந்தன.

தனலட்சுமிக்கு பஸ்ஸில் போகும்



போதெல்லாம் அதிர்ச்சி அடைவதே வேலையாகிக் கொண்டிருந்து. தோப்பில் சில மாடுகள் மேய்ந்து கொண்டிருக்கும். தோப்பிலுள்ள சிறு செடிகள், புற்கள் கண்டிப்பாக மேயப்பட்டிருக்கும். இதை அவளால் எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்? உருக்கமாக அவள் சொன்ன போது கல்யாணசுந்தரம் சிரித்து விட்டார். "தோப்புன்னா உனக்கு அவ்வளவு இஷ்டமா தனம்?" என்றார்.

தெய்வத்தின் குரல் போன்றிருந்தது அது. நேரடியாகவா தெய்வம் பேசும்? உன் ஹேண்ட் பேக்கில் ஓட்டை ஒன்றுமில்லையே என்று கேட்டால் ஏதோ தரப்போகிறது என்றுதானே அர்த்தம்? அன்று முதல் அவள் தோப்பைக் கடக்கும் போதெல்லாம் பரவசம் அடையத் துவங்கினாள்.

எதற்குமே ஆசைப்படாத மாதிரியும், கிடைத்தால் கொடுத்தவர்கள் மனம் புண்படக்கூடாது என்பதற்காக ஏற்றுத் தொலைப்போம் என்கிற மாதிரியும் அலட்சியமாகப் பேசுகிற அவளுக்கு வேறு சில குழப்பங்களும் இருந்தன.

தோப்பைவிட வயல் கிடைத்தால் ஆதாயம் அதிகமோ? வங்கியில் உள்ள பணத்தைக் கேட்பதுதான் புத்திசாலித் தனமோ? அல்லது வீடு? எதையாவது கொடுத்து நடராஜனும் சுசீலாவும் உலகநாதனும் ஏமாற்றிவிடக் கூடாதே... எது கிடைத்தால் நன்றாக இருக்கும்? இப்போதே தெரிந்துவிட்டால் நல்லது. அதனால் அவள் அவ்வப்போது பல வதந்திகளைக் கிளப்பிப் பார்த்தாள். நடராஜனுக்கு போன் செய்து "அண்ணன் சுசீலாவுக்கு வீட்டை எழுதி வச்சிட்டாராமே...? நெசமாவா?" என்று விசாரித்துப் பார்த்தாள். யாரும் தூண்டிலில் சிக்கவில்லை.

தொலைபேசியில் விஷயத்தைச் சொல்லுமுன் அவளது மகளை விசாரித்துக் கொண்டேன். அவளுக்கு இது எட்டாவது மாதம். தகவல் அறிந்ததும் என்னது? என்று ஓர் அலறல். அப்புறம் மௌனம். "ஹலோ... ஹலோ..." என்றேன். அவளது மகன் போனை எடுத்து "அம்மா மயக்கம் போட்டு விழுந்துட்டாங்க..." என்று அறிவித்தான்.

அடுத்தது உலகநாதன். அண்ணன் மீதான பாசப் போட்டியில் தான் மட்டுமே ஜெயித்துக் கொண்டிருப்பது மாதிரியான பிரமையை எப்போதுமே ஏற்படுத்தி விடுவார். குழந்தைப்பேறு இல்லாத கல்யாணசுந்தரத்துக்கு, ஓர் அப்பாவாய் கிடைத்திருக்கக்கூடிய ஆனந்தத்தைப் பெற்றுத் தர இவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் குடும்பத்தினரின் நிம்மதியைப் பறித்தன. தமது மகளின் திருமண அழைப்பிதழில் கல்யாணசுந்தரத்தின் பெயரை முன்னிலைப்படுத்தியதும், மணமேடையில் அப்பா ஸ்தானத்தில் அவரை இருத்தி கௌரவப்படுத்தியதும் நடராஜனைத் திடுக்கிட வைத்தன. அவரது வீட்டு விசேஷத்தில் இப்படி எல்லாம் நடைபெறவில்லை. "என்ன உலகு, இப்படிப் பண்ணிட்ட... அண்ணன் பேரைப் போடாதேன்னு சொல்லிட்டு, நீ போட்டிருக்கே... உன்னைப் போய் நம்பினேன் பாரு...."

"நான் சொல்லவே இல்லியே..." என்றார் உலகநாதன் புன்னகையுடன். அதிகமாகப் பேச மாட்டார். 'திடீர்னு

"அரசியலுக்கு வந்து ரெண்டாவது மேடையிலேயே பொய் பேச ஆரம்பிச்சிட்டீங்களாமே?"
"ஆமாம்... அரசியலுக்கு வந்ததுக் கப்புறம் ஒரு 'ஸ்டேஜு'க்கு மேல என்னால உண்மை பேச முடியல."
- வீ. விஷ்ணுகுமார்

உன்னப் பாக்கணும்போல இருந்துச்சு அண்ணே..' என்பார். அவை பெரும்பாலும் நடராஜனோ, சுசிலாவோ, தனமோ வந்துபோன தினங்களுக்கு அடுத்த தினங்களாய் இருந்தன. மேலும், கனவுகளில் பாசமிகு அண்ணனை நாய் துரத்துதல், பல்லி விரட்டுதல் போன்ற காரணங்களும் அவரது வருகைக்குக் காரணமாய் இருந்தன. அப்புறம் மனநிம்மதி ஏது?

இவரைப் பார்த்ததும் தெருவில் உள்ள கோயில் அர்ச்சகர் 'அண்ணன் பேருக்குத் தானே அர்ச்சனை?' என்பார். அதே கோயிலுக்கு 'அண்ணனும்' தவறாது வருவதால் கடவுளும் ஆயிரம் தடவைகளுக்கு மேல் அர்ச்சனைகளைக் கேட்டு விட்டார்.


அண்ணனின் வீட்டுக்கு வெள்ளை அடிப்பது இவரது மேற்பார்வையில்தான் நடக்கும். ஒருமுறை வெள்ளையடித்தவர்கள் வசவுகளுக்குப் பயந்து அடுத்த முறை வரவே மாட்டார்கள். அந்த அளவு அவரது ஒவ்வொரு அசைவிலும், பேச்சிலும் பிற்காலத்தில் இந்த வீடு தனக்குத்தான் என்கிற உறுதி இருந்தது. அது தனக்குக் கிடைக்காமலிருக்க எந்த விதமான காரணமுமில்லை. காய் நகர்த்தல்கள் செவ்வனே நடந்து கொண்டிருக்கின்றன. போன மாதம்கூட வீட்டுத் தோட்டத்தில் நின்றுகொண்டு மருதாணி இலை கேட்டு வந்த சிறுமிகளையும், கிரிக்கெட் பந்தைத் தேடிய சிறுவர்களையும் விரட்டி ஆனந்தம் அடைந்தார் உலகநாதன்.

மரணச் செய்தி தெரிவிக்கப்பட்டது. "ரெண்டு நாளுக்கு முன்னாடி எனக்கு ஒரு கனவு வந்தது. அதுல..." என்று துவங்கினார் உலகநாதன். கடவுளால் எழுத முடிந்த ஒரே புத்தகத்தின் தலைப்பு 'நல்லவர்களைச் சோதிப்பது எப்படி?' என்பதாகும். "வந்துவிடுகிறோம். பந்தல் போடுகிறோம் என்று வீட்டின் முன்னால் உள்ள செம்பருத்திச் செடிகளைப் பிடுங்கிவிட வேண்டாம்."

எல்லோரும் வந்து எல்லாம் முடிந்தும் விட்டது. தனத்தின் பெண் பெரிய வயிறுடன் உட்கார்ந்திருந்தாள். பிறக்கப் போகிற குழந்தை பற்றிப் பேச்சு வந்தது.

"குழந்தைக்கு என்ன பெயர் வைக்கப் போறேன், தெரியுமா?" என்றாள் தனம்.

பெயர் மிகவும் முக்கியம் என்பது எல்லோரையும்விட எனக்குத் தெரியும். ஏனென்றால் நான் பெயரில்லாதவன். இந்த நான்கு பேருக்கும் உடன்பிறந்த



மூத்தவனாய், கல்யாண சுந்தரத்துக்கும் மூத்தவனாய்ப் பிறந்தும் விருந்தினர் வராத வீட்டைக் கொண்டவன். குழந்தைப்பேறு இல்லாததால் சொந்த சகோதர, சகோதரிகளால் காயப்படுத்தப்பட்டவன். உருப்படாமல் போய் பலசரக்குக் கடையில் பொட்டலம் போடுவதால் அலட்சியம் செய்யப்பட்டவன். அன்பை மட்டும் சொத்தாகக் கொண்டவன்.

"என்ன பெயர் தெரியுமா?" என்றாள் தனம் மீண்டும்.

"மகேஸ்வரி அல்லது மகேஸ்வரன்..." என்று முடித்தாள்... 'எங்களை மீளாத் துயரில் விட்டுச்சென்ற தெய்வமே...' என்ற பேப்பர் வரிகளைப் படித்துக் கொண்டிருந்த கல்யாணசுந்தரத்தின் மனைவி மகேஸ்வரி தலை நிமிர்ந்து பார்த்தாள்.

சென்டாப் சாலையிலுள்ள புது வீட்டுக்குக் குடிபோயிருக்கிற சந்தோஷம் த்ரிஷா முகத்தில். கூடவே தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவியுடன் நடிக்கும் 'ஸ்டாலின்' படப்பிடிப்பு சென்னையில் தொடங்கப்பட்டிருப்பதில் உண்டான மலர்ச்சி (இயக்கம் - 'கஜினி' முருகதாஸ்). "நாங்க பல வருஷமா சேத்துப்பட்டுல ஒரு அபார்ட்மெண்ட்லதான் குடியிருந்தோம். எனக்கு மேற்கத்திய ஸ்டைல்ல ஒரு வீடு கட்டி வாழணும்னு ஆசை. வீட்டுக்குள்ள நுழைஞ்சா புத்துணர்ச்சி தன்னால வரணும். பிரியதர்ஷனோட 'ஃபோர் பிரேம்ஸ்' பிரிவியூ தியேட்டரை டிசைன் பண்ணின சஜித்-விவேக்தான் என் வீட்டுக்கும் இண்டீரியர் டிசைனர்ஸ். சும்மா மின்னுது புது வீடு" என்று தமது வீட்டுப் புராணம் பாடுகிறார் த்ரிஷா.

நிற்க. ஏற்கெனவே சிவாஜியில் ரஜினியுடன் நடிக்கும் வாய்ப்பைத் தவறவிட்ட த்ரிஷாவுக்கு கமல்-கே.எஸ்.ரவிக்குமார் காம்பினேஷனில் உருவாகவிருக்கும் தசாவதாரத்தில், கமலுக்கு ஜோடியாக நடிக்கும் வாய்ப்புக் கிட்டியதாகவும், கால்ஷீட் பிரச்னையால் த்ரிஷா நடிக்க நேரமில்லாமல் போனதாகவும் சொல்லப்படுகிறது. சமீபத்திய 'ஆறு', 'ஆதி' படங்களினால் த்ரிஷாவுக்கு எந்த லாபமுமில்லை என்றாலும் அடுத்தடுத்து அட்டகாசமான தமிழ், தெலுங்கு படங்களைக் கைவசம் வைத்திருக்கிறாராம்.

"இப்போதான் விக்ரமுக்கு ஜோடியா பீமாவுல சைன் பண்ணினேன். சம்திங் சம்திங், பீமா, ஸ்டாலின், சைனாகுடுன்னு நாலு படங்களை சுமந்துட்டு இருக்கேன். இங்கிருந்து ஆந்திரா போனா, 'என்னங்க எங்களை மறந்துட்டீங்களா'ன்னு பாச விண்ணப்பம் வைக்கிறாங்க. சென்னை வந்தா, 'பிறந்த மண்ணை மறந்துடாதே த்ரிஷா'ன்னு செல்லமா கோரிக்கை வைக்கிறாங்க" என்கிறவர், இன்னொரு விஷயத்தையும் மறக்காமல், மறைக்காமல் பேசுகிறார்.

"ஆதி பத்தி என்னென்னவோ செய்திகள் வருது. எல்லாப் படங்களும் எனக்கு இன்னொரு 'கில்லி'யா அமையும்னு நான் எதிர்பார்க்கலை. ஆனாலும் 'ஆதி'ல என் டான்ஸுக்கு நிறைய கைத்தட்டல்கள். கோடி நன்றி பிரபு தேவாவுக்குத்தான்" என்றவர், பேட்டி முடியும்வரை நம்மிடம் பேசிக் கொண்டிருந்தது அவரைப் பற்றித்தான்.


"பிரபுதேவாவோட கிரியேட்டிவிட்டி ஒரு ஊற்று மாதிரி. ஒவ்வொரு காட்சியையும் ஷயிக்கப் பண்ணலாம். கண்ணு, மூக்கு, கன்னம்னு முகத்துக்கு அழகழகா க்ளோசப் ஷாட்ஸ் வைப்பார். 'வர்ஷம்' படத்துல வர்ற மழை பாட்டுக்கு முதல்ல பிரபுதேவா கொடுத்த ஸ்டெப்பைப் பார்த்து நான் அழுதுட்டேன். 'எப்படி ஆடறேங்கிறது முக்கியமில்லை. எந்த டான்ஸானாலும் அதுல ஒரு ஸ்டைல் முக்கியம்'னு அறிவுரை சொன்னாரு. இன்னைக்கு தெலுங்கு 'பௌர்ணமி' படத்துல ஒரு டான்ஸரா நடிக்கிறேன்னா அதுக்கு அவர்தான் காரணம்" என்று ஆந்திரா நோக்கி கும்பிடு போடுகிறார் த்ரிஷா.

- சநகன்



கமலோடு நடிக்க நேரமில்லை!

சில சமயம் பல பரீட்சைத் தாள்கள் மகா மோசமாக அமைக்கப்படுகின்றன. கேள்வி கேட்பவர்கள் மாணாக்கர் களைத் திணற அடிப்பதில் தங்களுடைய சாமர்த்தியத்தை




யெல்லாம் காட்டி விடுகிறார்கள். இதன் காரணமாகப் பரீட்சை எழுதிய மாணாக்கர்களில் 100க்கு 70 பேர் 80 பேர், சில சமயம் 90 பேர் கூட பாஸ் மார்க் பெறுவதில்லை. இந்த மாதிரி நிலை மையில் என்ன செய்கிறார்களாம் தெரியுமா? ஒரு பரீட்சையில் 100க்கு 90 மாணாக்கர்கள் தேறவில்லையென்றால் அது பெரிய வெட்கக்கேடாக இருக்குமல்லவா? கல்வி இலாகாவுக்கே முட்டாள் பட்டம் கிடைக்கும் அல்லவா? இதற்காகப் "பரீட்சை எழுதிய எல்லாப் பிள்ளைகளுக்கும் +20 மார்க்குப் போடு!" என்கிறார்கள். அதாவது கிடைத்த மார்க்கோடு இருபது மார்க் கைக் கூட்டு என்கிறார்கள்? இவ்விதம் பரீட்சை தேறியவர்களின் தொகையைக் கணிசமாகப் பெருக்கிக் கல்வி இலாகாவின் மானத்தைக் காப்பாற்றிக் கொள்கிறார்கள்.

இந்தமாதிரி நடந்திருக்கிறதா இல்லையா என்று கல்வி

பரீட்சை என்னும்

இலாகா பதில் சொல்லட்டும். அப்படி நடந்திருப்பது உண்மை யானால் இம்மாதிரி பரீட்சைகளுக்கு ஏதாவது பொருள் உண்டா? இளங்குழந்தைகளின் விஷயத்தில் பெருங்கேடுகள் செய்வது ஆகாதா? பரீட்சை தாள்களைப் பார்த்தவுடன் ஆயிரக்கணக்கான பிள்ளைகளும் பெண்களும் மனவேதனைப்பட்டதற்கெல்லாம் யார் ஜவாப்தாரி? அத்தகைய கேள்விப் பத்திரங்களைத் தயாரித்த வர்களுக்கு என்னதான் தண்டனை? அவர்கள் கல்வி இலாகாவுக் குப் பொருத்தமற்றவர்கள் என்றாவது தீர்மானித்து வேறு உத்தி யோகம் பார்த்துக்கொள்ளும்படி சொல்ல வேண்டாமா?

ஒரு வருஷம் முழுவதும் படிப்பில் ஒரு இளம் பையனுக்கு எவ்வளவு மூளைச் சோர்வும் உடல்நலக் கெடுதியும் ஏற்படுகிறதோ, அவ்வளவு சோர்வும் கெடுதியும் பரீட்சை வாரத்தில் மட்டும் ஏற் பட்டு விடுகிறது. எத்தனை பிள்ளைகள் இரவில் டீ போட்டுச் சாப்பிட்டுவிட்டு இரவெல்லாம் கண்விழித்துப் படிக்கிறார்கள்! 'படிக்கிறார்கள்' என்பது தவறு; மூளை வறளும்படியாக 'நோட்ஸ்'களை உருப்போட்டுத் தள்ளுகிறார்கள்! இதனால் இளம் குழந்தைகளின் உடல்நலத்துக்கு எவ்வளவு கெடுதல் ஏற்படுகிறது! யாராவது நல்ல வைத்தியர்களைக் கொண்டு ஆயிரம் மாணாக்கர் களை எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு முன்னாலும் பின்னாலும்



வைத்திய பரிசோதனை செய்து பார்க்கட்டும். பரீட்சைக் கெடுபிடியினாலும் பீதியினாலும் பாதிக்கு மேற்பட்ட மாணவர்களின் உடல்நலம் சீர்கேடு அடைந்திருக்குமென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இந்தியாவிலேயே மிகச்சிறந்த அறிவாளி என்று எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரமுகர் தம்முடைய பரீட்சை அனுபவத்தைப் பற்றிப் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:-

"கலாசாலைக்குத் தலை முழுகிவிட்டு நான் வெளியேறிய பிறகு பல வருஷ காலம் தூங்கும்போது பரீட்சைக் கனவு காண்பது உண்டு. பரீட்சைக்காக அவசர அவசரமாக ஓடுவது போலும், அப்படி ஓடியும் காலேஜ் வாசலில் என்னை நிறுத்திவிட்டது போலும் சில சமயம் காண்பேன். இன்னும் சில சமயம் பரீட்சை எழுத உட்கார்ந்தது போலும் பரீட்சைத் தாளைக் கையில் வாங்கிப் பார்த்ததும் ஒன்றும் புரியாமல் தலை கிறுகிறுத்தது போலும் கனவு காண்பேன். சட்டென்று கண்விழித்துக்

பாதகம்!



கொள்வேன். உடம்பெல்லாம் வியர்த்து விறுவிறுத்திருக்கும். அப்புறம் வெகுநேரம் வரையில் தூக்கமே வராது! பரீட்சையானது அத்தகைய பீதியை என்னுடைய உள்ளத்தில் உண்டாக்கியிருந்தது!"

இவ்விதம் கூறியது யார் என்று நினைக்கிறீர்கள்? வேறு யாரும் இல்லை. இந்தியாவின் முதலாவது இந்திய கவர்னர் ஜெனரலான ஹிஸ் எக்ஸெலன்ஸி ஸ்ரீசக்கரவர்த்தி இராஜகோபாலச்சாரியார் அவர்களேயாகும். பரீட்சை விஷயமாக அவருடைய அனுபவமே இப்படியெனில் மற்றவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

எந்தவிதமான கல்வி முறையிலும் ஏதோ ஒருவிதமான பரீட்சை அவசியமாயிருக்கலாம். ஆனால் அந்தப் பரீட்சை குழந்தைகளின் இளம் உள்ளத்தில் பீதியை உண்டாக்கக் கூடாது; அவர்களுடைய மூளையைப் பலவீனப்படுத்தக் கூடாது; அவர்களுடைய உடல் நலத்தைப் பாதிக்கக் கூடாது; பரீட்சையில் தேறாததற்காகத் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டும் சூழ்நிலையும் கூடாது.


- கல்கி, மே 23, 1948 இதழிலிருந்து...



சாகஸம் ஆயிரம் - 3

நானோ டெக்னாலஜியின் ஆதார சாகஸம் அணு அளவில் பொருள்களை நம் இஷ்டப்படி மாற்றுவது. ஒரு பொருளின் அணுக் கட்டடத்தை மாற்றினால் அந்தப் பொருளின் இயற்கை மாறிவிடும். உதாரணமாக, அடுப்புக் கரியின் அணுக் கட்டட அமைப்பை சற்று மாற்றினால் அது வைரமாகிறது. அதேபோல் சிலிக்கான் தனிமத்தின் கட்டமைப்பை மாற்றி, அதனுடன் சில சேர்மானங்களைக் கட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேர்த்து குறிப்பிட்ட முறையில் வடிவமைத்தால் அது கம்ப்யூட்டர் ஆகிறது. இன்னும் ஆதாரமாகப் பார்த்தால் மண், நீர், காற்று இவற்றின் அணுக்களை ஒரு வகையில் கட்டமைத்தால் அது உருளைக்கிழங்காகிறது. நானோ டெக்னாலஜி இதைத்தான் முயற்சிக்கிறது. இயற்கை செய்வதை ஒரு ஆராய்ச்சி சாலையில் மனிதன் செய்ய முடியும் என்று நம்புகிறது.

இன்றைய தினத்தின் மிகச் சிறந்த போட்டோ லித்தோகிராஃபி உற்பத்தி முறைகள்கூட அணுக்களுடன் குறுக்கிடும் அளவுக்கு அத்தனை நுட்பமானவையல்ல. ஒரு ட்ரான்சிஸ்டர் தொழில்நுட்பத்தில்கூட அதன் சிலிக்கான் பாஸ்பரஸ், ஆர்சனிக் போன்ற தனிம அணுக்களின் போக்குவரத்து லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் இருக்கும். ஓர் அணுவைத் தனிப்படுத்தி, நகர்த்தி 'நீ ஒதுங்கப்பா, அங்க போய் உக்கார்' என்று சொல்லும் நானோ டெக் திறமை அத்தனை எளிதில் பெறக்கூடியதல்ல. அதற்கான கருவிகள் நம்மிடம் இல்லை. திறமைகளும் இல்லை. எப்படிச் செய்ய வேண்டும் என்னும் அந்த அறிவு மட்டும் உள்ளது. எதை எப்படி எப்படி மாற்றினால், எது எதுவாகும் என்ற ஞானம் மட்டும் உள்ளது. அதன் செய்முறை இல்லை. விக்கெட் கீப்பர், கையில் கிரிக்கெட் கிளவ்ஸ் போட்டுக் கொண்டு பந்து பிடிக்கலாம். ஊசி நூல் கோக்க முடியாது. அதுபோல்



படம் : ஸ்ரீஹரி

மேலும் கீழும்...!



சுஜாதா

இன்றைய டெக்னாலஜியில் இயலாத காரியம் எதிர்காலத்தில் கிளவ்ஸைக் கழற்றி வைத்துவிட்டு மாலிக்யுல் என்னும் கூட்டணு அளவில் சின்னச் சின்ன ரோபாட்டுகள் ஒரு குறிப்பிட்ட செயலைத் திரும்பத் திரும்பச் செய்து, மெல்ல எறும்புகள் சேர்ந்து ஒரு பெரிய புற்றுக் கட்டுவதுபோல, ஒரு பெரிய சாதனத்தை உருவாக்க முடியும் என்று டெக்ஸ்லர் போன்றவர்கள் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை மிகையானது என்று சொல்வதற்கில்லை. காரணம், சென்ற நூற்றாண்டின் எழுபதுகளில் கண்டுபிடிக்கப்பட்ட மைக்ரோ ப்ராஸஸர் சில்லியல் இத்தனை வேகமாக வளர்ந்து, ஒரு கட்டடத்தையே அடைத்துக்கொண்டிருந்த கம்ப்யூட்டரை உள்ளங்கைக்குள், இருபது ஆண்டுகளில் அடக்கும்படி வந்துவிட்டது.

அந்த முன்னேற்றத்தை நோக்கும்போது மாலிக்யுலர் கம்ப்யூட்டர் என்கிற கருத்து சாத்தியம் என்றே தோன்றுகிறது. டெக்ஸ்லர், மாலிக்யுலர் கம்ப்யூட்டர்களை வடிவமைப்பதற்கான யோசனை, இயற்கையில் ப்ரோட்டின் தயாரிப்பைக் கவனித்தால் கிடைக்கும் என்று சொல்கிறார். ஒரு கம்ப்யூட்டர் என்பது ஆதாரமாக என்ன? ஒருவிதமான சிக்கலான அணுக் கட்டட அமைப்புதானே? ஒரு மரபணு அதற்குள்ளேயே அதன் இறுதி வடிவத்தின் செய்தியை வைத்திருப்பதுபோல, ஒரு கூட்டணு கம்ப்யூட்டர், தான் இறுதியில் இந்தப் பணி செய்யும் சாதனமாகப் போகிறோம் என்கிற அறிவை அதற்குள்ளேயே வைத்துவிட முடியும். அதை ஆரம்பித்துவிட்டாலே போதும்... தானே அணு அணுவாகச் சேர்ந்துகொண்டு கம்ப்யூட்டர் சில்லாகிவிடும். இதுதான் நானோ டெக்னாலஜியின் 'பாட்டம் அப்' கீழிருந்து மேல் அணுகுமுறை. மற்றொரு அணுகுமுறை, 'டாப் டவுன்' மேலிருந்து கீழே படிப்படியாக சின்ன தாக்கிக்கொண்டே போய் 'நானோ' அளவை எட்டுவது. இன்றைய தினத்தின் மைக்ரோ டெக்னாலஜி முறைகள் இந்த டாப் டவுன் வகையைச் சார்ந்தவை.

இந்த இரண்டு அணுகுமுறைகளையும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

(விந்தை தொடரும்)

அருள்வாக்கு



நமக்கு எப்போதும் நல்லதையே நினைத்துக்கொண்டு, நம்முடைய சந்தோஷத்துக்காக எத்தனை கஷ்டத்தையும் தாங்கிக்கொள்கிற அன்பு நம் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இருக்கிறதல்லவா? நாம் நல்லவர்களாக வேண்டும்; புத்திசாலிகளாக வேண்டும்; நாம் வாழ்க்கையில் நன்றாக முன்னுக்கு வர வேண்டும் என்பதுதானே நம் பெற்றோரின் ஒரே குறிக்கோளாக இருக்கிறது? இதற்காகவேதான் அவர்கள் சில சமயங்களில் நம்மைத் தண்டிக்கிறார்கள், கண்டிக்கிறார்கள். இதைக் கொண்டு நாம் அவர்களிடம் கோபப்படக் கூடாது. நம்முடைய நல்லதை நினைத்தே தான் அவர்கள் கண்டிக்கிறார்கள் என்று உணர வேண்டும். அவர்கள் கோபித்துக் கொண்டாலும் அதற்குக்கூட காரணம் நம்மிடம் அவர்களுக்குள்ள அன்புதான். இந்த அன்பினால்தான் அவர்கள் நம்மை வளர்த்துப் படிக்க வைத்து, நமக்கு உடம்புக்கு வந்தால் இரவெல்லாம் கண் விழித்துக் கவனித்து, எல்லாக் காரியங்களும் செய்கிறார்கள். இப்பேர்ப்பட்ட அன்பு அவர்களுக்கு எங்கிருந்து வந்தது என்று பார்த்தால், இந்த அன்பு என்ற சரக்குக்கும் மூலம் ஸ்வாமிதான். ஸ்வாமியேதான் அப்பா-அம்மா என்கிற உருவங்களில் வந்து நம்மிடம் அன்பைச் செலுத்துகிறார்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

அப்பா... அம்மா... அன்பு..!



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.

கிளை நிறுவனம் : புதிய எண். 16, பழைய எண். 19, முதல் மாடி, 30வது தெரு,
தில்லைகங்கா நகர், நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 18 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்

வானவில் வயசு - 12

காட்டுக்குடுமி, காதி
கடுக்கன், அந்தக் காலம்.
பங்க் தலைமுடி, ஒற்றைக் கடுக்க
இந்தக் காலம்.

''மாற்றங்கள் வந்து மீண்டும் மறுபடி மார போகும்'' என்கிறார் கவிஞர் வைரமுத்து.

'எத்னிக் ஃபுட் பெஸ்டிவெல்' என்ற பெயரில் நட்சத் உணவகங்களில் நாட்டுப்புறச் சமையல் ரகங்களுக்கு இளை கூட்டம் அலைமோதுகிறது. ''வாவ்! டெட்லி யார்!'' என் சிலாகித்துக்கொண்டே பருப்பு உருண்டைக் குழம்பும், கொத்தவ காய் வற்றலும் ஆனந்தக் கண்ணீரோடு 'ஸ்வாஹா' ஆகின்றன.

புதுமைகள் மலர மலர பழமைகள் மீதான பிரியமும் ஒருபு வளர்ந்துகொண்டே வருகிறது இளைஞர்களுக்கு. என்னைப் பொறு வரை இது நல்ல அறிகுறி.

உணவிலும் உடையிலும் மட்டுமல்ல... உணர்வு ரீதியாக நம் எல்லோருக்குள்ளும் மரபு சார்ந்த மனம் ஒன் இயங்கிக் கொண்டிருக்கிறது. டைட் ஜீன்சும், ஷர்ட்டுமாய் ஸ்கூட்டியில் புழுதி பறக்கப் பயணிக் இளம் பெண்கள், பண்டிகை நாட்களில் பட் புடைவையும் மல்லிகைப் பூவுமாய் பெற்றோர்களு இன்ப அதிர்ச்சி தருகிறார்கள்.

தொலைநோக்கு என்பதற்கு டாம்பீட்டர் அழகான விளக்கத்தைக் கொடுத்தார். ''தொ



ஊருக்கும் உங்களுக்கும்!

நோக்கு என்பது எதிர் காலத்திற்குத் தயாராவது. அதே நேரம் கடந்த காலத்தை மதிப்பது'' என்றார் அவர்.



பழமையின் விழுமங்களும், புதுமையின் வசதிகளும் சரிவிகிதத்தில் சங்கமிக்கிற வாழ்க்கைதான் சரியான வாழ்க்கை.

வசந்த காலத்தின் வாசலில் நிற்கிற வாலிபர்கள் ஒரு தீர்மானத்தைத் தெளிவாக எடுத்துவிட்டால் வாழ்க்கை முழுவதும் வெற்றிகள்தான்.

ஒன்றைச் சாதிப்பதற்கு எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று முடிவெடுப்பது ஒருவகை. "சாதிப்பது நிச்சயம். ஆனால் அது சரியான பாதையில்தான்'' என்பது இன்னொரு வகை. இரண்டாவது வகைதான் நிலையான சாதனைகளுக்கு நிலைக்களம். நாம் போகிற பாதை நியாயமானது என்கிற நம்பிக்கை இருந்தால் யார் சொன்னாலும் அதிலிருந்து அசையத் தோன்றாது. காப்பி அடிக்கச் சொல்லி ஆசிரியரே காலை மிதித்தும்கூட மறுத்துவிட்டதால்தான் மோகன்தாஸ் மகாத்மா ஆனார்.

ஓர் ஓவியப் போட்டி. குழந்தைகளை, அவர்கள் பார்த்ததிலேயே மிகவும் பிடித்ததை வரையச் சொன்னார்கள். ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொன்றை வரைந்தது. சிங்கம், யானை, கார், காட்பரீஸ் என்று விதவிதமான ஓவியங்கள்.

ஒரு குழந்தை மட்டும் வேறெதையோ வரைந்து கொண்டிருந்தது. போட்டி முடியப் பத்து நிமிஷங்கள்தான் இருந்தன. ஆசிரியர் "என்ன வரைகிறாய்'' என்று கேட்டபோது குழந்தை சொன்னது "கடவுளை வரைகிறேன்.'' ஆசிரியர் சிரித்துக்கொண்டே "கடவுளை யாரும் பார்த்ததில்லையே'' என்றதும் அடுத்த விநாடியே குழந்தை சொன்னது. "இன்னும் பத்து நிமிஷத்திலே பார்க்கத்தானே போறீங்க'' என்று.

தன் பிஞ்சு விரல்கள் மீது அந்தக் குழந்தைக்கு இருந்த நம்பிக்கை அசாத்தியமானது. தனக்குள் ஓர் உறுதியை உருவாக்கிக்கொண்டே உயரங்களைத் தொடுவதுதான் சாதனைக்குச் சரியான இலக்கணம்.

இன்று சர்வதேச தரச் சான்றிதழ் பெறுகிற நிறுவனங்கள் எல்லாமே 'இலட்சிய வாசகம்' (MISSION STATEMENT) என்ற ஒன்றை வகுத்துக் கொள்கின்றன. தங்கள் அலுவலகத்தின் வரவேற்பறையில் தொடங்கி மூலைக்கு மூலை அவற்றை நிறுவுகின்றன.

யோசித்துப் பார்த்தால், ஆண்டாண்டு காலமாய் அப்படியொரு இலட்சிய வாசகத்தை வகுத்துக்கொண்டுதான் சாதனையாளர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் அதனைப் பகிரங்கமாக அறிவிக்காவிட்டால்கூட அந்த இலட்சியம்தான் அவர்களின் உந்துசக்தியாய் இருந்திருக்கிறது.

பாரதியின் முப்பத்தொன்பதாண்டு கால வாழ்க்கையை அவனே ஒன்றரை வரிகளில் அடக்கிவிட்டான். "நமக்குத் தொழில் கவிதை - நாட்டுக்குழைத்தல் - இமைப்பொழுதும் சோராதிருத்தல்.'' 'என் வாழ்க்கையே என் செய்தி' என்று சொன்ன போர்பந்தர் கிழவரும் அப்படித்தான்.

நிறுவனங்களுக்கு மட்டுமல்ல... நமக்கும் அப்படியொரு இலட்சிய வாசகம் தேவை. பதின் பருவத்திலும் இருபதுகளிலும் இருக்கும் இளைய நெஞ்சங்களில் அத்தகைய வாசகங்கள் பதிந்து

மரபின்மைந்தன் முத்தையா

விட்டால் வாழ்க்கைப் பாதை தெளிவாகும்.

இந்த இலட்சிய வாசகம் நாமாக உருவாக்கியதாய் இருக்க வேண்டுமென்று கட்டாயமில்லை. நம்மைக் கவர்ந்த வரிகளாகக்கூட இருக்கலாம். மேதைகள் கருத்தை மேற்கோளாய்க் காட்டி, அதையே நம் குறிக்கோளாய்க் கொள்ளலாம்.

கண்ணதாசன் கவிதை வரிகள்தான் என்னுடைய வாழ்க்கை வாசகம்.

"காதலில் உறவினில் கலைகளில்
உணவினில் ஈதலில் புரத்தலில்
இயற்கையை ரசித்தலில்
வாழ்தலில் பற்றுவை! வாழ்க்கையைக் கற்றுவை!" என்பவைதான் அந்த வரிகள்.

எந்தச் செயல் செய்தாலும் அது வாழ்க்கையில் பற்றுவைக்கும் விதமாகவோ, வாழ்க்கையைக் கற்றுக்கொள்ளும் விதமாகவோ இருக்கிறதா என்று பார்ப்பேன்.

மேலை நாடுகளில் இதுபோல் இன்னொரு வாசகத்துக்கும் முக்கியத்துவம் தருகிறார்கள். TMAY என்பது அது. TELL ME ABOUT YOU என்பதுதான் இதன் விரிவாக்கம். யாரையாவது திடுமென்று சந்திக்க நேர்ந்தால் அவர்களிடம் மூன்றே வரிகளில் உங்களைப் பற்றிச் சுருக்கமாகவும், அதே நேரம் 'சுருக்'கென்று மனத்தில் தைக்கும் விதமாகவும் இருக்கும் வாசகங்களை அவர்கள் மனதுக்குள் உருவாக்கி வைத்துக்கொள்கிறார்கள்.

அறிமுக வாசகம், இலட்சிய வாசகம் இரண்டும் வளரத் துடிக்கும் ஒவ்வொருவருக்கும் அவசியம். இதுதான் வெற்றி பெற்றவர்களின் ரகசியம்.

நீங்கள் யார், உங்கள் நோக்கம் என்ன என்பதை முதலில் உங்களுக்குச் சொல்லுங்கள். பிறகு ஊருக்குச் சொல்லுங்கள்.

(தொடரும்)

தொடக்க விழாவில்...



மேஜிக் சேனல்!

மின் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் செலுத்த நீண்ட வரிசையில் நிற்க வேண்டியதில்லை. உங்கள் ப்ரீபெய்டு செல்போனுக்கு ரீசார்ஜ் செய்ய கடையைத் தேடி ஓட வேண்டியதில்லை. எஸ்.ஆர். ப்ளஸ் என்ற சாட்டிலைட் சேனல் வழியாகவே இதை நீங்கள் செய்யலாம். அட! ஆமாங்க. வரும் ஜூன் இருபத்தாறாம் தேதி முதல் இந்தியாவில் ஒளிபரப்பைத் தொடங்கும் இந்த ப்ரீபெய்டு சேனலை, செட்ஆஃப் பாக்ஸ் மூலம் கண்டுகளிக்கலாம். நீங்கள் விரும்பும் சினிமா, இசை, தலைப்புச் செய்திகள், வானிலை, ஷேர்மார்கெட் என இதில் நீங்கள் பார்க்க விரும்பும் நேரத்தில் எஸ்.எம்.எஸ். கொடுத்தால், உங்கள் டி.வி.யிலோ, கம்ப்யூட்டரிலோ எஸ்.ஆர். ப்ளஸ் சேனலின் திரை விரியும். இவர்கள் தரும் செட்ஆஃப் ஃபாக்ஸில் உள்ள ஹார்டு டிஸ்கில் தொண்ணூறு மணி நேரம் நிகழ்ச்சிகளை, சேமித்து வைத்து, தேவைப்படும் போது ரசிக்கலாம். சாட்டிலைட் தொழில்நுட்பத்தின் அடுத்த கட்ட புரட்சியில் குதித்திருக்கும் எஸ்.ஆர். ப்ளஸ் சேனலின் உரிமையாளர் யார் தெரியுமா? சினேகா காதல் விவகாரத்தில் அடிபட்டாரே நாக்ரவி... அவரேதான்.

- ஸ்ரீ

ஸர்ச் இன்ஜின்!

பில்கேட்ஸின் புதிய கனவு!

தமிழ்நாட்டில் ஒரு ரூபாய் போன், இந்தியாவில் 10000 ரூபாய்க்கு கம்ப்யூட்டர் என பரபரப்பு ஏற்பட்டது போல், இப்போது உலக அளவில் பேசப்படும் பரபரப்பான செய்தி நூறு டாலருக்கு லாப்-டாப் என பில்கேட்ஸ் கொண்டு வந்துள்ள புதிய திட்டம்தான். 'வளர்ந்த நாடுகளின் ஒவ்வொரு குழந்தை கையிலும் லாப்-டாப் இருக்க வேண்டுமென்பது என் புதிய கனவு' என களத்தில் கூகுள் உதவியுடன் குதித்துள்ளார் பில்கேட்ஸ்.



அழிஞ்சது கிடைக்கணுமா!

கீபோர்டு மேல நம்ம விரல்கள் நடனமாடிக்கிட்டே இருக்கும். அப்ப திடீர்னு ஒரு செகண்டுல ஏதாவது ஒரு விரல் பட்டு ஏதோ ஒரு முக்கியமான ஃபைல் Delete ஆயிடும். அதை Recycle Bin-ல தேடுவோம். அங்கேயும் இருக்காது. 'என்னடா செய்ய, இப்படி ஆயிடுச்சே'ன்னு கையைப் பிசைஞ்சுக்கிட்டு நிப்போம். வேற வழியே கிடைக்காது. 'போனால் போகட்டும் போடா'ன்னு விரக்தியா பாடிட்டு அந்த ஃபைலை மறந்துட வேண்டியதுதான். இனிமே அந்தக் கவலை இல்லை. Soft-pedia நிறுவனம் Restoration என்ற அப்ளிகேஷனைக் கொண்டுவந்துள்ளது. இந்த அப்ளிகேஷன் தப்பித் தவறி நாம் அழித்த ஃபைல்களைக் கூட மீண்டும் தேடிப் பிடித்துத் தருகிறது. எல்லா ஃபைல்களும் திரும்பக் கிடைக்காவிட்டாலும் பாதிக்குமேல் தேடித் தந்துவிடுகிறது. இனிமேல் காணாமல்போன ஃபைல்கள் பற்றி நீங்கள் அறிவிப்பு கொடுக்க Restorationதான் பெஸ்ட். (இணைய முகவரி: www.softpedia.com/get/System/Back-Up-and-Recovery/Restoration.shtml)

செவ்வாயும் வந்துடுச்சு!



'கூகுள் எர்த்' பத்தி எல்லாத்துக்கும் தெரியும். கண்டம் கண்டமா, நாடு நாடா, ஊர் ஊரா, ஏன் தெருத் தெருவா பூமியைப் படம் பிடிச்சுக் காட்டி, உக்காந்த இடத்துல இருந்தே பயணம் செஞ்ச அனுபவத்தை நமக்குக் கொடுக்கறதுதான் கூகுள் எர்த். எர்த்துக்கு அப்புறமா 'கூகுள் மூன்' அப்படின்னு நிலாவைப் படம் பிடிச்சுக் காட்டுனாங்க. இப்போ நாஸாவின் உதவியோட 'கூகுள் மார்ஸ்'னு செங்கோளான செவ்வாயைப் படம் பிடிச்சுக் காட்ட ஆரம்பிச்சிருக்காங்க. செவ்வாய்க்கு அடுத்தது என்ன புதனா!

- முகில்

யாருக்குச் சொந்தம்?

டெல்லியிலிருந்து மதிவாணனுக்கு போன்.

"என்னாச்சுங்க...?" என்று அவன் தோள் மேல் தன் கைகளை இதமாய் அழுத்திய வண்ணம் கேட்டாள் அவன் மனைவி அனந்தலட்சுமி.

"அம்மாவுக்கு மத்திய அரசு விருது கிடைச்சிருக்காம்..."

"பெருமையா இருக்கு... ஆனா... இப்ப என்ன பண்றது...?" என்றான் நடுங்கிய குரலில். இடது கையை விரித்துக்காட்டி உதட்டைப் பிதுக்கி விட்டு சிந்தனையில் ஆழ்ந்தான் மதிவாணன். அவன் மடியில் குழந்தை பிருந்தா - உறக்கத்தில்.



குழந்தைக் கல்வி முன்னேற்றத்துக்குப் பாடுபடும் தனி நபருக்கு வழங்கப்படும் விருது 'ராஜீவ் காந்தி மானவ சேவா விருது'. இந்த வருடத்துக்கான விருதைப் பெற்றுள்ள மதிவாணனின் அம்மாவைப் பார்க்க வேண்டுமானால் 'காக்கும் உள்ளங்கள்' முதியோர் இல்லத்துக்குத்தான் செல்ல வேண்டும்.

ஒரு மாதமாயிற்று அம்மா அங்கே போய். பெரிய சண்டை சச்சரவு இல்லை. வாய் வார்த்தை கூச்சல் இல்லை. ஒரு சின்னப் புழுக்கம். அவ்வளவுதான்.

அம்மாவின் தொடக்கம் எப்போதென அவன் அறிந்தானில்லை. ஆனால் அவனுக்கு நினைவு தெரிந்த நாள் முதல், பருத்த தென்னை வேர்களாய் கழுத்து நரம்புகள் புடைக்க அம்மா கற்பித்துக்கொண்டு இருந்தாள். ஒன்றாய் இரண்டாய்த் தொடங்கி இப்போது ஐந்நூறைத் தாண்டிவிட்டது அவள் 'பிள்ளைகள்' எண்ணிக்கை.

அம்மாவின் 'பிள்ளைகள்' சிதைவும் மூப்பும் கண்ட துணிகளை உடுத்தும் பிள்ளைகள். எங்காவது கொம்பு கிடைக்காதா எனப் பற்றிப் படர விரும்பும் கீழ்தட்டுக் கொடிகள். சிகரம் தொட உதவும் ஒரு சின்ன ஏணிக் காய் தவமிருக்கும் ஏழை அறிவாளிகள். சாதனைக் கனி நோக்கிப் பறக்க சிறகு தேடும் வறுமைப் பறவைகள்.

அம்மாவுக்கு அவர்கள்தாம் பிள்ளைகள். அவர்கள் முன்னேற்றம் உயிர் மூச்சு. அவர்களின் சின்ன சாதனை

களே பெருமகிழ்ச்சி.

மற்றவர் பார்வையில் வெறும் 'ட்யூஷன்' என்று மட்டுமே அறியப்பட்டாலும் அம்மாவின் கல்விக்கூடம் பள்ளிக்கூடங்களைவிட நூறு சதம் அதிக தரத்தைக் கொண்டிருந்தது. வெறுமனே சொல்லிக் கொடுப்பதோடு நிறுத்திக்கொள்ளாமல் மேல் படிப்புக்கும் வழிகாட்டினாள். நல்ல வேலை



திருவையாறு பாலகுமார்

கிடைக்க வழிவகை சொன்னாள். அம்மாவால் முன்னேறிய எண்ணற்ற மாணவர்கள் குறித்து அவனுக்குப் பெருமிதம் உண்டு.

கட்டணம் என்றோ, வெகுமதி என்றோ ஒரு சிறு அளவைக்கூட எப்போதுமே ஏற்றுக்கொள்ளாத அம்மா, மதிவாணனையும் அந்தப் பிள்ளைகளினூடே ஒரு பிள்ளையாய்த்தான் பார்த்தாள். அவனும் அவ்வாறே.

அனந்தலட்சுமி வந்தபின்கூட பெரிய மாற்றங்களில்லை. வீடு எப்போதும் போலவே பிள்ளைகள் வழியும் நந்தவனமாய்த்தான் இருந்தது. வேப்ப மரங்களின் நிழல் எப்போதும் கவிழ்ந்திருக்கும் அவர்கள் வீடு நிசப்தம் அறியாதது. காலை ஆறு முதல் இரவு பத்து வரை வகை வகையான குரல்கள்... பாவனைகள்... உச்சரிப்புகள்... கூக்குரல்கள்...

குழந்தை பிருந்தா பிறந்த பிறகு சூழ்நிலை மெதுவாய் மாறியது.

''எல்லாப் பிள்ளையும் எம்புள்ளையும் ஒண்ணா?''

இந்தக் கேள்வியை நிறைய முறை அனந்தலட்சுமி அவனிடம் கேட்டிருக்கிறாள். தாய்மை உள்ளத்தின் நியாயமான கேள்விபோல் தோன்றியதால் அதனைத் தவறென்று சொல்ல மதிவாணனுக்குத் தெரியவில்லை.

''ஒரு நாளாவது அழுகிற பிள்ளையைத் தூக்கியிருக்காங்களா உங்க அம்மா...?''

மதிவாணனிடம் ஒரு பதிலற்ற பார்வை.

''உடம்பு சரியில்லேன்னு ஒரு நாள் படுத்தேன்னா திரும்பிக்கூட பார்க்க முடியாம அப்படியென்னதான் பிள்ளைகளோ? பொல்லாத பிள்ளைகள்... பைசாவுக்குப் பிரயோஜனம் இல்லாம...''

அனந்தலட்சுமிக்கு ஆறவில்லை.

''இதென்ன சத்திரமா? பொழுதன்னிக்கும் காதைச் செவிடாக்கிற சத்தம்...''

பெரும்பாலும் அம்மாவற்ற நேரங்களில் நடந்த இந்த உரையாடல்களின் எச்சமே அம்மா வீடு துறக்கக் காரணமாய் இருந்தது. அம்மா அவ்வளவு

மென்மை.

வார்த்தைகளால் விளைந்த பெருந் தவறால் துக்கம் தொண்டையடைக்க நாட்களை நகர்த்தினர் அனந்தலட்சுமி யும் மதிவாணனும்.

ஒரு மாதம் ஓடிப்போனது. அம்மா வரவில்லை.

இன்று விருதுச் செய்தி வந்திருக் கிறது. மாலையில் நிருபர்கள் வர இருக் கின்றனர். கேமராவோடு தொலைக் காட்சி நிறுவனங்கள் பேட்டியெடுக்க வர உள்ளன.

அம்மா வீட்டில் இல்லை. முதியோர் இல்லத்தில். 'மத்திய அரசு விருது பெற்ற பெண்மணியை முதியோர் இல்லத்துக்குத் துரத்திய மகன் இவர்தான்' என அவன் புகைப்படம் நாளை காலை தினசரிகளில் பிரசுர மாகலாம். கூடவே அனந்தலட்சுமியும்.



''யோவ், இந்த எஃப்.ஐ.ஆர் போலி. யார் இதைக் கொடுத்தாங்க?''
''பக்கத்து கிராம போலீஸ் ஸ்டேஷன்லே!''
''அங்கே போலீஸ் ஸ்டேஷனே கிடையாதே!''
''ஒருவேளை அதுவும் போலியோ!''
- பூவராகவன்

''கால்ல கையில விழுந்தாவது வீட் டுக்குக் கூட்டியாந்திரலாம். வாங்க...'' எனறாள் அனந்தலட்சுமி.

''வேணாம்...'' என்றான் மதி வாணன். ''இன்னிக்கு கூப்பிடப் போனா மறுபடியும் ஒரு சுயநலக் காரனா மாறிட்டதாத்தானே அர்த்தம். பண்ணின தப்புக்குத் தண்டனை வரட் டும்...'' அனந்தலட்சுமி வாயடைத்துப் போனாள்.

மதிவாணன் காத்திருந்த மாலை வெகு சீக்கிரமே வந்தது. மற்றுமோர் பகல் கனவென மதிவாணன் குழம்பிப் போய் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மாலைச் சூரியனின் மஞ்சள் கிரணங்களை தன் முகத்தில் பிரதி பலித்தபடி ஒரு தேவதை போல் வந் திறங்கினாள் அம்மா.

நிருபர்கள், புகைப்படக்காரர்கள் அம்மாவைச் சூழ்ந்துகொண்டனர். அம்மா நிதானமாய்ப் பேசினாள். அடித் தட்டு மாணவர்களைத் தொடர்ந்து முன்னேற்றுவதற்கான தன் எதிர்கால திட்டங்கள் பற்றிச் சொன்னாள்.

இரவுவரை நீண்ட பேட்டிகள் எல் லாம் முடிந்து அம்மா எழ, மதிவாண னும் அனந்தலட்சுமியும் பிருந்தாவும் உணர்ச்சிக் குவியலாய் அம்மாவுக்காய் நின்றனர். அனந்தலட்சுமி கண்களில் நீர் நிறைந்திருந்தது.

அம்மாவின் கூரிய பார்வை மூவரின் மேலும் அழுத்தமாகப் பதிந்தது. கருணைப் பொழிவாய் வெளிப் பட்ட சின்னப் புன்னகை 'நீங்கள் மன்னிக்கப்பட்டீர்கள்' என்று சொன்னது.

திடீரென வெளியே ஆனந்தக் கூக்குரல்கள் பேரிரைச்சலாய் பெருக் கெடுத்தன. அம்மாவின் பிள்ளைகள். அம்மா தன் வயது மறந்தவளாய் சிற்றத்துடன் வெளியே ஓடினாள். அனந்தலட்சுமி முகம் சுண்டிப்போனாள்.

''இப்பகூட பாருங்க... குழந்தை யைத் தூக்கி ஆசையா ஒரு முத்தம் கொடுக்கக்கூடத் தோணலையே அவங்களுக்கு...''

''பெய்யற மழை யாருக்குச் சொந் தம்...? அம்மா இனிமே எல்லாருக்கு மான மழை...!'' என்றான் மதிவாணன்.

வேப்பமர நிழல் சூழ்ந்த அந்த வீட்டை நெடுநேரம் பிள்ளைகளின் பேரிரைச்சல் நிறைத்தது. ○

தங்கம் எல்லோருக்கும் பிடித்தமான விஷயம். ஆனால் விலையைக் கேட்டால் தான் நடுங்க வேண்டியிருக்கிறது. பெண்களின் அணிகலன்களுக்கே இப்படியென்றால் கடவுளர்களுக்குத் தங்கக் கவசம் என்பது மிக அதிக நிதி வசதியில்லாமல் சாத்தியமே இல்லை. ஆனால், "கடவுளை மட்டுமல்ல, வீட்டு பூஜையறையைக்கூட மிகக் குறைந்த செலவில் தங்கமாக ஜொலிக்க வைக்கலாம் - ஒரு ஃபார்முலா மூலம்" என்கிறார் 'தேஜஸ்' நிர்வாக இயக்குநர் சந்திரசேகர்.


அது என்ன ஃபார்முலா? அவரிடமே கேட்டோம்.

"தங்கம் இன்றைக்கு கிராம் எழுநூற்று ஐம்பது ரூபாய்க்கும் அதிகமாக விற்கும் நிலைமையில் முழுவதும் தங்கத்திலான விக்ரகங்களும், கலசங்களும் பெரும்பாலான கோயில்களில் சாத்தியமில்லாமல் போய்விட்டன. ஆனால் தங்க முலாம் பூச்சின் மூலமாக சுத்தமான தங்கத்தினால் கிடைக்கும் தோற்றப் பொலிவை எளிதாகப் பெறலாம்" என்றவர், இது குறித்து விரிவாகப் பேச ஆரம்பித்தார்.

"1970-ம் ஆண்டு ஐ.ஐ.டி.யில் மெட்டலார்ஜி படிப்பு படித்து, அதேபிரிவில் மேற்படிப்புக்காக ஜெர்மனி சென்றேன். 1974 முதல் இன்ஜினீயரிங் பிரிவில் வியாபாரம் செய்து வந்தேன். 90களில் வியாபாரத்தில் ஏதாவது புதுமையாகச் செய்யலாமே என்று தோன்றியது. உத்தரப்பிரதேசத்திலுள்ள அலிகாரில் பூட்டு, கதவு, தாழ்ப்பாள்களுக்கு தங்க முலாம் பூசுவார்கள். வட இந்தியாவில் பிள்ளையாருக்கு மார்பிள் கற்களைக் கொண்டு சிலை செய்வார்கள். அதுபோல நாமும் கடவுள் விக்ரகங்களுக்குத் தங்க முலாம் பூசலாமே என்று நினைத்தேன். பித்தளை மீது நிக்கல் பூசிவிட்டு அதன் மீது தங்க முலாம் பூச வேண்டும். கடைசியாக எலக்ட்ரோ லேக்கர் என்கிற பிளாஸ்டிக் கோட்டிங்கைச் செலுத்த வேண்டும்.

இதற்கு ஆகும் செலவு பத்தில் ஒரு பங்குதான். பதினைந்தாயிரம் ரூபாயில் விநாயகருக்குத் தங்கக் கவசம் போட்டுவிடலாம். இந்தியாவிலேயே கடவுள் விக்ரகங்களுக்குத் தங்க முலாம் பூச முடியும் என முதலில் நிரூபித்தது நாங்கள்தான். எங்களுடைய முதல் பணியாக உலகளந்த பெருமான் கோயிலுக்குப் பெரிய கவசம் செய்தோம். பின்பு மலேசியாவிலுள்ள ஒரு கோயிலுக்குக் கவசம், விமான அலங்காரம் செய்தோம். தொடர்ந்து மயிலை கபாலீஸ்வரர் கோயில், மலை மந்திர், புரசைவாக்கம் கங்காதீஸ்வரர், அண்ணாநகர் ஐயப்பன் கோயில் என இதுவரைக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட கோயில்களின் கவசங்களுக்கும், கலசங்களுக்கும் தங்க முலாம் பூசியுள்ளோம்" என்றவர், ஆசுவாசப்படுத்திக்கொண்டு தொடர்ந்தார்...

சக்ஸஸ் ஸ்டோரி



"கோயிலுக்குள் நுழைகின்ற உணர்வு

வர வேண்டும் என்பதற்காகவே கலை இயக்குனர் ராஜீவனின் கலை வண்ணத்தில் எங்கள் ஷோரூமை தெய்வீக உணர்வோடு வடிவமைத்துள்ளோம். வரும் வாடிக்கையாளர்கள் இதனால் கவரப்பட்டு, தங்களுடைய காலணிகளை வெளியே கழற்றி விட்டுவிட்டுத்தான் உள்ளே நுழைவர். ஒருசிலர் சாஷ்டாங்கமாக வணங்கிவிட்டுச் செல்வர். இது வரை மூவாயிரத்துக்கும் மேலான வாடிக்கையாளர்கள் எங்களை நாடி வந்துள்ளனர். வீட்டு பூஜையறையில் நீண்ட நாட்களாக உள்ள பித்தளை விக்ரகங்கள், விளக்குகளை தங்க முலாம் பூசித் தரும்படியும் பலர் எங்களிடம் தருகின்றனர்.



இதுதவிர எங்களது ஷோரூமில் பரிசுப் பொருட்களும் உண்டு. சுவர்க் கடிகாரங்களையும், பிளாஸ்டிக் பொருட்களையும்விட மூன்னூறு ரூபாய் மதிப்புள்ள கடவுள் விக்ரகங்களைத் திருமணத்துக்கோ, பிறந்த நாளுக்கோ பரிசளித்தால் அதன் மதிப்பே தனி. எங்களுடைய பொருட்களுக்கு மூன்று வருடம் கியாரண்டி உண்டு. ஆனாலும் அவை ஐந்து வருடங்கள் நீடிக்கும் தன்மை கொண்டவை.

அடுத்ததாக இணையதளம் மூலமாக ஈ-காமர்ஸ் செய்யத் திட்டமிட்டுள்ளோம். வெளிநாட்டிலுள்ள இந்தியர்கள் தங்க மூலாம் பூசப்பட்ட கடவுள் விக்ரகங்கள் மீது அதிக ஆர்வம் கொண்டுள்ளதால் இந்த ஏற்பாடு. பூக்கள், மாவிலை போன்ற சிறிய பொருட்களுக்கும் தங்க மூலாம் பூசி விற்பனை செய்யவுள்ளோம். அதே நேரத்தில் எல்லாப் பொருட்களுக்கும் தங்க முலாம் பூசுவது அழகல்ல. கடவுள் விக்ரகங்களாக இருந்தாலும் அதற்கென்று ஒரு முகம் வேண்டும். அப்போதுதான் நீங்கள் எதிர்பார்க்கும் அழகும் தெய்வீகமும் கிடைக்கும். மக்களுக்கு கடவுள் மீது பக்தியும், தங்கத்தின் மீது மோகமும் உள்ளவரை இந்தத் தொழிலுக்கு என்றைக்கும் இறக்கம் ஏற்படாது."

- செந்தில்

தங்கமே தங்கமே..!

வாரம் ஒரு வாசகர் குடும்பம்

நூற்றியெட்டு வைணவத் திருத்தலங்களில் ஒன்று சோளிங்கர். இவ்வூரின் சுப்பாராவ் தெருவில் வசித்து வருகிறது கல்கி வாசகரான வி.சி. நரசிம்மனது குடும்பம். மனைவி அனுராதா. இந்தத் தம்பதிக்கு யோகேஷ், அமிர்தவர்ஷினி என இரண்டு பிள்ளைகள்.

இக் குடும்பத்தின் மூத்தவர் சடகோபன். அவருக்கு மூன்று சகோதரிகள். அதில் ஒரு சகோதரியின் மகன்தான் நரசிம்மன். சடகோபன், சோளிங்கரில் டி.வி.எஸ். சதர்ன் ரோட்வேஸ் கிளை பொறுப்பாளராக முப்பத்தைந்து ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். ஐம்பத்தியிரண்டு ஆண்டுகளாக கல்கியின் தீவிர வாசகர். அமரர் கல்கியின் படைப்புகள் அத்தனையையும் வாசித்து ஆனந்தத்தில் திளைத்த அனுபவங்கள் பல உண்டாம் அவருக்கு. அவரது படைப்புகள் சக மனிதர்கள் மீது பரிவு காட்டுகிற, நேசம் கொள்கிற ஒரு மானிடனாகத் தன்னை பண்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடுகிறார். "ஒரு முறை என் நண்பர் ஒருவருக்கு விபத்தொன்றில் வலதுகால் முறிந்து போய்விட்டது. ஆந்திராவில் புத்தூர் அருகே ஈசலாபுரம் எலும்பு முறிவு இயற்கை சிகிச்சை மையத்துக்கு அழைத்துச் சென்று கட்டுப்போட்டு வந்து கொண்டிருந்தேன். வாரத்தில் இரண்டு தடவை சென்று கட்டுப்போட்டு வர வேண்டும். ஒவ்வொரு முறையும் சோளிங்கரிலிருந்து தனியாக காரில்தான் சென்று வந்தோம். ஒரு நாள் அந்த சிகிச்சை மையத்துக்குத் தாமதமாகச் சென்றிருந்தோம். கடைசி நபராக வந்திருந்த என் நண்பருக்குக் கட்டுக்கட்ட அங்கு துணியேதும் இல்லை என்றும், எல்லாமே அன்று தீர்ந்து போய்விட்டதாகவும் ஆஸ்பத்திரியில் கூறினார்கள். நானும், என் நண்பரும் என்ன செய்வதென்று திகைத்துப் போய் அமர்ந்திருந்தோம். அப்போது சில நிமிடங்கழித்து கால்களிரண்டிலும் அடிபட்டு ரத்தம் சொட்டச் சொட்ட ஒரு ஆளை எல்லோரும் தூக்கி வந்தார்கள். அவரது கால்களின் அடிபட்ட இடங்களிலிருந்து ரத்தம் கொட்டிக் கொண்டே இருந்தது. அங்கிருந்தவர்கள் கட்டுக்கட்ட துணி இல்லை. எனவே பக்கத்து கிராமத்துக்கு அவரைக் கொண்டு செல்லுங்கள்' என்றார்கள். கொட்டுகின்ற ரத்தத்தைப் பார்த்து எனக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. உடனே என்



வாழ்வின் வழிகாட்டி!

வேண்டுகோள்!

என் இரண்டு வயது மகள், எஸ்.வைஷ்ணவிக்கு தீவிர காதுகேளா நோய் உள்ளதாக (Bilateral severe cochlear hearing loss) கண்டறியப்பட்டுள்ளது. இவளைப் பரிசோதித்த சென்னை ENT மருத்துவர்கள், உடனடியாக காக்ளியர் மாற்று அறுவை சிகிச்சை செய்யும்படி அறிவுறுத்தியிருக்கிறார்கள். இதற்கான செலவு 6 லட்ச ரூபாய். என்னால் இத்தனை பெரிய தொகையைத் திரட்ட முடியாது என்பதால் பெரும் நிறுவனங்களையும், இளகிய மனம் கொண்டவர்களையும் தாராளமாக உதவுமாறு தாழ்மையுடன் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

தங்களுடைய பங்களிப்பை Madras ENT Research Found Charitable Trust A/c Baby S.Vaishnavi எனும் பெயருக்கு வரைவோலை அல்லது காசோலை மூலமாக அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். எங்களது முகவரி. எண்.1, முதல் குறுக்குத் தெரு, இரண்டாவது மெயின் ரோடு (இந்தியன் வங்கிக்கு எதிரில் R.A.புரம்), ராஜா அண்ணாமலைபுரம், சென்னை. தங்களது அன்பளிப்புக்கு வருமான வரி U/S 80Gயின் கீழ் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி!



- என்.சங்கரன்
(தந்தை)

இடுப்பில் கட்டியிருந்த எட்டு முழ வேஷ்டியை அவிழ்த்துக் கொடுத்தேன். ஆஸ்பத்திரி ஊழியரிடம். அதனைக் கிழித்து, அந்த நபரின் காயங்களுக்கு மேலாகக் கட்டி முதலில் ரத்தம் கொட்டுவதைத் தடுத்தனர். பின்னர் அவருக்கும் சிகிச்சை தந்து, என் நண்பருக்கும் கட்டுப் பிரித்து புதிதாகக் கட்டுக்கட்டி அனுப்பினர். போட்டிருந்த அரை டிராயருடன் காரில் அமர்ந்து சோளிங்கர் வந்து சேர்ந்தேன் நான்!" என்கிறார் சடகோபன்.

சோளிங்கர், டி.வி.எஸ். பிரேக்ஸ் இந்தியா தொழிலகத்தில் பவுண்டரி டிவிஷனில் டெக்னீஷியனாகப் பணிபுரிந்து வருகிறார் நரசிம்மன். துவக்கப் பள்ளியின் இறுதி ஆண்டிலிருந்து, ஒரு வழிகாட்டி போல கல்கி அவருக்கு உற்ற துணையாக இருந்து வருகிறதாம்.

பொதுநல சேவையில் ஆர்வம் உள்ளவர். ரத்ததானம் செய்கிறார். பொது நிகழ்ச்சிகளின்போது வாலண்டியராகச் செயல்படுவது இவருக்குப் பிடித்தமான பொழுதுபோக்காம். தன்னுடன் கம்பெனியில் வேலை பார்க்கும் இருபது முப்பது அன்பர்களை அழைத்துக்கொண்டு ஆண்டுதோறும் திருப்பதிக்கு சோளிங்கரிலிருந்து நடை பயணம் சென்று வருகிறார்.

"சோளிங்கர் என்றாலே ஸ்ரீயோக நரசிம்மரும், ஸ்ரீயோக ஆஞ்சனேயருமே நினைவுக்கு வருவார்கள். அதுபோல, ஒரு நல்ல பத்திரிகை என்றால் எங்கள் நினைவுக்கு வருவது கல்கிதான்.

இந்த தேசம்... சமூகம்... அரசியல்... கலை சார்ந்த அத்தனை விஷயங்களும் கல்கியில் ஆஜராகி வருகின்றன. ஒவ்வொரு வார தலையங்கமும் ஆயிரமாயிரம் சிற்றுளிகளுக்குச் சமம். அவை செதுக்கிச் செதுக்கி சீர்படுத்தக் கூறும் விஷயங்கள் யாவும் தேச நலன் சார்ந்தே அமைந்திருக்கும். ஒவ்வொரு வார கல்கி இதழும் காலப் பெட்டகம் எனக் கூறினால் அதில் மிகையில்லை!" என்கிறார் நரசிம்மன்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

குறையொன்றுமில்லை

கர்மா என்றால் புரிகிறது. அகர்மா என்றால் கர்மாவில் தவறுவது அல்லது பண்ணாமல் விடுவது.

விகர்மா...? விகர்மா என்பது கன விலும் பண்ணக் கூடாதது. இந்த விகர்மா கூட சில சமயங்களில் கர்மாவாகிவிடும். உதாரணமாக, பொய் பேசுவது என்பது விகர்மா. ஆனால் பொய் பேசுவது என்கிற விகர்மாகூட சில சமயம் கர்மா ஆகிவிடும். அது எப்போது என்று பார்த்தால், விவாஹ காலத்தில் பொய் சொல்லலாம்.

ஒரு கல்யாண காலத்திலே, மாங்கல்ய தாரணம் ஆகப்போகிறது; கூறை புடைவை உடுத்திக்கொண்டு வரப் போயிருக்கிறாள் மணப்பெண். அதற்குள்ளே இங்கே இரண்டு சம்பந்திகளுக்கும் சண்டையாகிவிடுகிறது. வந்திருக்கிற பந்து - மித்திரர்கள் எல்லோருமே அந்தச் சண்டையை அதிகப்படுத்தி அந்தக் கல்யாணத்தை நிறுத்துவதற்கா முயற்சி செய்வது!?

சண்டையைத் தவிர்க்க வைத்து அந்தக் கல்யாணத்தை நடத்திக் கொடுக்க வழி பண்ண வேண்டும். ஒரு பொய்யைச் சொல்லியாவது சமாதானம் பண்ண வேண்டும்...

இந்த இடத்திலே நன்றாகக் கவனிக்க வேண்டும்...

விவாஹ காலத்திலே ஆபத்துக்குப் பொய் சொல்லலாம். ஆனால் ஆரம்பத்திலிருந்தே பொய்யைச் சொல்லி ஒரு கல்யாணத்தைப் பண்ணக் கூடாது. கல்யாணம் நின்றுபோகிற சூழ்நிலை வந்தால் அதைக் காப்பாற்றுவதற்குப் பொய் சொல்லலாம்.

அதே மாதிரி, ஒருவர் சொத்தையெல்லாம் இழந்து நடுத்தெருவில் நின்றுபோய் விட்டாரானால், அவரைக் காப்பாற்றுவதற்காக பொய் சொல்லி அவரை அந்தக் குடும்பத்தில் நிலைக்கப் பண்ண வேண்டும். 'நடுத்தெருவிலே அவரை நிற்க வைத்துப் பார்க்காதே' என்கிறது சாஸ்திரம்.

சீதா பிராட்டியே ராமாயணத்தில் பொய் சொல்லியிருக்கிறாள். ஆஞ்சநேயனே பொய் சொல்லியிருக்கிறான். இந்தப் பொய்யெல்லாம் பார்த்தால் நமக்கு நன்றாகவே தெரியும் - விகர்மா எவ்வாறு கர்மாவாகிறது என்று!

இலங்கையைக் காவல் காக்கும் லங்கிணி, ஆஞ்சநேயனைப் பார்த்துக் கேட்கிறாள்: "காட்டுக்குள்ளே திரியக்கூடிய குரங்கே... நீ யார்? எங்கேயிருந்து வந்திருக்கிறாய்?"


"நான் ராமனால் அனுப்பட்டவன். இங்கே சீதை இருக்கிறாளா என்று பார்க்க வந்தேன்" என்று ஆஞ்சனேயன் உண்மையைத்தானே சொல்ல வேண்டும்? ஆனால், நடந்தது என்ன...?

"இங்கே இருக்கிற வனப்பிரதேசங்களையெல்லாம் பார்த்தால் ரொம்ப அழகாக இருக்கிறது. ஊருக்குள்ளே இருப்பவையெல்லாம் ரொம்ப அழகாக இருக்கின்றன" என்று தான் சுற்றிப் பார்க்க வந்ததாகச் சொன்னானேயொழிய தான் வந்த காரியத்தையே அவன் சொல்லவில்லை.



அதே மாதிரி, இலங்கையை துவம்ஸம் பண்ணுகிறான் ஆஞ்சநேயன். படுத்துக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்த ராக்ஷஸிகளெல்லாம் அலறியடித்துக் கொண்டு, சீதையைப் பார்த்து, "இவன் யார்?" என்று கேட்கிறார்கள். கேட்டால் சீதை என்ன சொல்ல வேண்டும்...?

"ராமனிடத்திலிருந்து வந்திருக்கிறான்.



என்னிடத்தில் இவன் சூடாமணியைக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறான். நான் அவனிடத்தில் அங்குலியத்தைக் கொடுத்தனுப்பியிருக்கிறேன். ராம தூதன் அவன்...'' என்றெல்லாம் சொல்ல வேண்டும் அல்லவா?

ஆனால், அவள் மறைத்துவிட்டாள். எல்லாவற்றையும் மறைத்துவிட்டாள்!

"எனக்கென்ன தெரியும்?" என்று ஒரு வார்த்தை சொல்லி, "பாம்பின் கால் பாம் பறியும். இவ்வளவு துவம்ஸம் பண்ணு கிறவன் உங்களில் ஒருவனாக இருக் கக்கூடும்" என்று சொல்லிவிட்டாள்.

சீதை பொய் சொன்னாளா என்றால் இல்லை. உத்தமமான ஆத்மா அந்த ஆஞ்சநேயன். அவனை ரக்ஷிப்பதற்காகச் சொன்ன பொய். பொய்யாகாது.

ஒரு மஹரிஷி உட்கார்ந்து கொண்டு தபஸ் பண்ணிக் கொண்டிருக்கிறார். பசுவைத் துரத்திக்கொண்டு கையிலே கத்தியுடன் ஓடி வருகிறான் ஒருவன். பசுவானது, 'அம்மா' என்று கத்திக் கொண்டு தபஸ் பண்ணும் மஹரிஷியைக் கடந்து அவருடைய ஆசிரமத்தினுள்ளே நுழைந்து விட்டது. அங்கே போய் மறைந்து கொண்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

எட்டாம் பாகம் 12

டது.

வந்தவன் கத்தியோடு வந்து மஹரிஷியைப் பார்த்து, "இந்தப் பக்கம் பசு வந்ததா?" என்று கேட்டான்.

"வந்தது, ஆசிரமத்துக்குள்ளே இருக்கிறது" என்றுதானே பதில் சொல்ல வேண்டும்?

ஆனால், அப்படிப் பதில் சொன்னால், அவர் ஆசிரமத்திலேயே கோ ஹத்தி பண்ணுவான் அவன்.

அவர் பார்த்தார்.... ரொம்ப கெட்டிக்காரர். பொய் சொல்லாமலேயே தப்பித்துக்கொண்டார். "பசு இந்தப் பக்கம் போச்சா" என்று அவன் கேட்டதும் "கண் பார்க்கும் ஆனால் பேசாது; வாய் பேசும் ஆனால் பார்க்காது..." என்றார்.

"இதுகிட்டே போய்க் கேட்டோமே..." என்று அவன் புறப்பட்டுப் போய் விட்டான்.

ஒரு காரணமுமின்றி பசுவைக் கொல்ல வரும் மூர்க்கனுக்கு புத்தி எவ்வாறு இருக்கும். அவர் சொன்னது அவனுக்குப் புரியவில்லை.

"பார்த்தேன்; பேச முடியாத நிலையில் இருக்கிறேன்" என்பதைத்தான் மஹரிஷி அப்படி சூசகமாகச் சொன்னார். சொல்லி, அவ்வளவு அழகாக, சமத்காரமாக அந்தப் பசுவை ரக்ஷித்துவிட்டார்.

விகர்மா கர்மாவாவது இப்படித்தான்!

அகர்மா கர்மாவாகிவிடும் சில சமயங்களில்... பகவான் வீதி வழியாக எழுந்தருள்கிறான். உத்ஸவ சமயம். சாயங்காலம் நாலு மணிக்கு வாகனத்தில் அவனை எழுந்தருளப் பண்ணி, வீதி வழியாக வலம் வருகிறார்கள். முன்னே அருளிச் செயல் கோஷ்டி - பிரபந்த கோஷ்டி; பின்னே வேத பாராயணம் பண்ணுகிறவர்கள்... எல்லோரும் போகிறார்கள்.

சாயங்காலம் ஆறு மணி ஆகி விடுகிறது. கோயிலுக்கு வந்து சேர ஏழரை ஆகிவிடும். ஆறேகால் மணி என்பது சந்தியா வந்தனத்துக்கான சமயம் இல்லையா...? அதனால், அங்கேயே ஆயக்கால் போட்டு சுவாமியை நிறுத்திவிட்டு, "சுவாமி நீ இங்கேயே நின்று கொண்டிரு... நாங்கள் போய் சந்தியாவந்தனம் பண்ணி விட்டு வந்து அப்புறமாக உன்னை எழுந்தருளப் பண்ணுகிறோம்" என்று நடுத்தெருவிலேயே விட்டுவிட்டு வரலாமா என்றால், கூடாது!

சந்தியாவந்தனத்தை அப்போது பண்ணாமல் இருப்பதுதான் கர்மா! அகர்மா தான் கர்மா! பகவானைக் கொண்டு வந்து கோயிலில் எழுந்தருளப் பண்ணிய பிற்பாடு அதற்கப்புறம் கிருஹத்துக்குப் போய் ராத்திரி ஏழு மணிக்கு "காலாதீத பிராயச்சித்தார்த்தம் இதி அர்க்கியப்பிரதானம் கரிஷ்யே" என்று 'காலம் அதிகமாக ஆனதற்காக ஒரு அர்க்கியம் அதிகமாக விட்டுவிடுகிறேன்' என்று சொல்லிவிட்டு விட வேண்டும்.



அதற்காக நித்தியமே இந்த மாதிரி விடக் கூடாது. என்றைக்குக் காலதாமதமாகிறதோ அன்றைக்குத்தான் விட வேண்டுமேயொழிய சாஸ்திரம்தான் அனுமதித்துவிட்டதே என்று நித்யம் தாமதம் பண்ணி ஓர் அர்க்கியம் கூடுதலாக விடுவதென்பது ஆகாது!

காலாதீதம் என்பது ஓர் இக்கட்டான நிலை. பகவத் விஷயத்திலே நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறபோது, அகர்மா (கர்மாவைப் பண்ணாதிருத்தல்) ஏற்பட்டால் அது கர்மாவாகி விடுகிறது.

இதை உணர வேண்டும்.

பாம்பு ஒரு தவளையைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. திடீரென்று போய்

அந்தப் பாம்பை அடித்துத் தவளையை விடுவிக்கக் கூடாது என்கிறது சாஸ்திரம். அது கத்தினாலும் பேசாமல் போ!' என்கிறது. இங்கு அகர்மாதான் கர்மா ஆகும்.

ஜீவ ராசிகளின் ஸ்ருஷ்டி, ஸ்திதி லயம் இது. இதில் நாம் குறுக்கிட முடியாது. ஆதி சங்கர பகவத் பாதாள் ரொம்ப அழகாகச் சொல்கிறார்:

பாம்பு தவளையை விழுங்கிக் கொண்டிருக்கிறது. பாதி உடம்பு உள்ளே போய்விட்டது. தவளை என்ன பண்ணுகிறது...? தனக்கு முன் பறக்கிற ஓர் ஈயை நாக்கால் பிடித்திழுத்து விழுங்குகிறது. அந்த இக்கட்டிலும் தவளை ஈயை விடவில்லை! இதுவே போய்க் கொண்டிருக்கிறது; இது இன்னொரு ஜீவனைப் பிடித்து இழுத்துக் கொண்டிருக்கிறதே!

மனிதனும் அந்த மாதிரிதான். தானே ஒரு நாள் மருத்யுவிடத்தில் சிக்கப் போகிறவன்தான். இன்னொருத்தனை அடிக்கிறேன் உதைக்கிறேன் என்று ஏன் சொல்கிறான்! இது எவ்வளவு மோசமான உலகம்! என்கிறார் ஆதி சங்கரர்.

“சரி, அகர்மா விகர்மாவாகிவிடக் கூடிய நிலை எது...?

ஒரு சின்ன குழந்தை நடந்து போகிறது. ஒருத்தர் உட்கார்ந்திருக்கிறார். நான் ஒன்றும் பண்ண மாட்டேன் என்று யாருடனும் சம்பந்தம் இல்லாதவராக இருக்கிறார். அகர்மாதான் என் நிலை என்று இருக்கிறார். இந்தக் குழந்தை கிணற்றிலே விழப் போகிறது... அப்போதும் இவர் அசையாமல் உட்கார்ந்தபடி இருந்தாரானால் அவருடைய அகர்மா விகர்மாவாகிவிடும்!

இப்படி தன்னுடைய அகர்மாவானது விகர்மாவாகிவிடக்கூடாதே என்கிற அக்கறையில்தான் பரத சக்கரவர்த்தி மான் குட்டியைக் காப்பாற்றினார்.

(வளரும்)

வாரியார் அமுதம்

சிறிய பொருளாக இருப்பினும் பெரியவர்களை அடுத்தால் அது பெருமையடைகின்றது. பெரிய பொருளேயாயினும் சிறியவர்கள் பால் சேர்ந்தால் அவர்களால் அப்பொருளுக்குப் பெருமை உண்டாவதில்லை. சேரப் பெற்றவனும் சிறப்படைவதில்லை. ஆலகால விஷம் சிவபெருமானை அடைந்து அவருடைய கண்டத்தில் பெருமையுற்றது. அமிர்தம் ராகுவைச் சேர்ந்தும் பெருமையடையவில்லை.

சாமர்த்தியம் உள்ளவனுக்கு முடியாத காரியம் ஒன்றும் இருக்காது. நன்றாக உழைப்பவனுக்கு வெகு தூரம் போக வேண்டிய அவசியமே இல்லை.

நல்ல கல்வியுடையவன் அன்னியதேசம் போக வேண்டியதில்லை. தன் தேசத்திலேயே அவனுக்கு மதிப்பும், பரிசும் உண்டு.

ரேவதி

எனக்கான ஒரு விசாரிப்பு
எனக்கான ஒரு பதில்
எதுவுமில்லாமல் எழுதப்படுகின்றன
உனது கடிதங்கள்

எனக்கான ஒரு ஒலியழைப்பு
எனக்கான ஓர் இருக்கை
எதுவுமில்லாமல் பயணப்படுகிறது
உனது வாகனம்

எனக்கான ஒரு கையசைப்பு
எனக்கான ஒரு புன்சிரிப்பு
எதுவுமில்லாமல்
நகர்ந்து கொண்டிருக்கிறது
உனது நாட்கள்

எனக்கான ஒரு மரத்தின்மடி
எனக்கான ஒரு ரோஜாப்பூ
எதுவுமில்லாமல்
சிரித்துக் கொண்டிருக்கிறது
உன் வீட்டுத் தோட்டம்

எனக்கான ஒரு துளிக் கண்ணீர்
என்னைக் குறித்த சிறுஞாபகம்
எதுவுமில்லாமல்
நெருங்கிவிடக் கூடாது
என் இறுதி கணம்.

எதுவுமில்லாமல்...





12

என் கையைப் பிடித்து அடுத்த அறைக்குள் அழைத்துச் சென்றான். வீணை, மிருதங்கம் என்று இசைக் கருவிகள் மிக அழகாக தேக்குப் பலகையில் வைக்கப்பட்டிருந்தன.

வெல்வெட் புத்தகம் ஒன்றைக் கொண்டு வந்து என் அருகில் உட்கார்ந்து பிரித்துக் காட்டத் தொடங்கினான் மணி. அது மிக அழகான சினிமா ஆல்பம். "எஸ்.ஜி.கிட்டப்பா இவர்தான். இவர் எம்.கே.டி. இது பி.யூ.சின்னப்பா" என்று சொல்லிக்கொண்டே வந்த மணி, ஒரு முருக வேடம் போட்ட படத்தைக் காட்டி, "இவர் யார் தெரியுமா?" என்று கேட்டுவிட்டு நான் யோசிக்கும் முன் அவனே சொல்லத் தொடங்கினான்.



கோலாலம்பூர் பாம்பு!

"இவர்தாண்டா நம்ம ஊர் ஹீரோ டி.ஆர்.மகாலிங்கம். தென்கரை ராமகிருஷ்ண அய்யர் மகாலிங்கம். இதுதான் இவர் முழுப் பேரு."

"மணி இதெல்லாம் உங்க வீட்ல எப்ப எடுத்திங்க?" என்றேன் நான்.

"நாங்க எடுக்கலடா, எங்க பெரிய மாமா மெட்ராஸ்ல இருந்து, கொண்டுவந்த படங்களை எங்கம்மா தான் அழகா பைண்டு பண்ணி வைச்சிருக்காங்க"

அதற்குள் மணியின் அம்மா எங்கள் இருவருக்கும் பெரிய தேன்குழல் முறுக்கும், இனிப்புச் சீடையும் கொண்டு வந்து தந்தார்கள்.

"அம்மா நானும் இவனும் இன்னிக்கு டி.ஆர்.மகாலிங்க மாமாவைப் பார்க்கப் போறோம்" என்றான் மணி சந்தோஷமாக.

"நல்லாப் பாத்துட்டு வாங்க. உங்க மாமா பேரைச் சொன்னா அவருக்கு நல்லாத் தெரியும்" என்று சொல்லியபடி 'ஓவல்' ஆற்றிக் கொடுத்தார்கள். நான் அப்படிச் சுவையான உணவு வகைகளையும் ஓவலையும் இன்றுவரை உண்டதுமில்லை, கண்டதுமில்லை.

வெளியே வந்து மணி



கு. ஞானசம்பந்தன்

சினிமாவுக்குப் போகலாம் வாங்க!

சைக்கிள் ஓட்ட, நான் கேரியரில் தொற்றிக் கொண்டேன்.

''நம்ம டி.ஆர்.மகாலிங்கம் சினிமா நடிகர் மட்டுமில்லை, சிறந்த பாடகர், நாடக நடிகர். பல படங்கள்ல இவர் நடிச்சிருந்தாலும் இது வரைக்கும் யாருக்கும் இவர் பின்னணிக் குரல் கொடுத்துப் பாடிய



தில்லையாம். 'மாலையிட்ட மங்கை' படம் தான் இவருக்கு மறு வாழ்வு கொடுத்த படமாம்'' என்று சொல்லிக் கொண்டே வந்தவன், தென்கரை அக்ரஹாரத்துக்குள் சைக்கிளைச் செலுத்தினான்.

அரண்மனைபோன்ற வீட்டு வாசலில் நாங்கள் போய் இறங்கினோம். பளிங்குக்கூடம் போல எங்கும் பளபளப்பான சுவர்கள். வெள்ளிப் பிடிபோட்ட ஊஞ்சலில் ஆடியபடி இருந்தவரை நோக்கி, "மாமா நான்தான் மணி, ரெங்கநாத சர்மா எங்க தாய்மாமா. இவன் என் நண்பன். உங்களைப் பார்க்க வந்தோம்" என்றபடி என்னையும் கூட்டிக்கொண்டு அவர் அருகில் சென்றான்.

சராசரி உயரம், சிவந்த நிறம், வெற்றிலை மணக்கும் சிவந்த வாய், புன்னகை ததும்பும் முகம். இசையரசர் டி.ஆர்.மகாலிங்கம்தான் நான் முதன் முதலில் பார்த்த சினிமா நட்சத்திரம்.

அவர் என்னைப் பார்த்துப் பேசத் தொடங்க, நான் மெய்மறந்து போனேன்.

"நீ இந்த ஊர்தானா? என் நாடகங்கள், படங்கள் பார்த்திருக்கிறாயா? எனது பாடல்கள் உனக்குப் பிடிக்குமா?" திரு. டி.ஆர். மகாலிங்கம் அவர்கள் என்னிடத்தில் சரளமாகப் பேசத் தொடங்கினார்.

அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் நான் 'பெருமாள் மாடு' மாதிரி தலையைத் தலையை ஆட்டியபடி அவரைப் பார்த்துக்கொண்டே இருந்தேன்.

அதற்குள் மணி இடையில் புகுந்து நிலைமையைச் சமாளித்தான். "மாமா நீங்கள் 'திருவிளையாடல்' படத்தில் பாடிய 'இசைத்தமிழ், நீ செய்த அருஞ்சாதனை' பாடல் ஏ கிளாஸ் மாமா'' என்று பாராட்டத் தொடங்கினான். இவர் ஒரு பாட்டுப் பாட மாட்டாரா என்று நான் ஏக்கத்தோடு நினைத்துக் கொண்டிருக்கையில், உள்ளே திரும்பிய இசையரசர் ஏதோ சைகை செய்தார். சுதிப்பெட்டியும், சுவையான இனிப்பு வகைகளும் வந்தன.

அதற்குள் தெருப் பெண்கள் எல்லோரும் அவர் வீட்டு வாசலில் வந்து குழுமினார்கள். அத்தனை பேரையும் உட்காரச் சொன்னார். நாங்களும் நடுவில் உட்கார்ந்துகொண்டோம்.

குழந்தைகள், பெரியவர்கள் என்றுகூட எண்ணாமல் மிக அழகாகப் பாடத் தொடங்கினார். எத்தனை இனிமை! தமிழிசைப் பாடலால் செவி இனித்தது. அவர்கள் வீட்டு இனிப்புப் பண்டங்களால் நாவும் நெஞ்சமினித்தன.

சில மாதங்கள் கழித்து எங்கள் ஊர்த் திருவிழாவின் கடைசி நாளன்று அம்பிகை ஜெனகமாரி, வைகையாற்றில் தீர்த்தவாரி உற்சவம் காணும் நாள் வந்தது. அதாவது

''என்ன இது? ஒலைய புறா கொண்டு வராம கழுகு கொண்டு வருது?''

''புறாவை நீங்க திருப்பி அனுப்பறதில்லைன்னு புகார் வருது மன்னா!''

- அம்பை தேவா

நல்ல முழுநிலவு நாளில் கோயிலில் இருந்து மாலையிலே கிளம்பிய அம்பிகை, வைகையாற்றின் நடுவில் மணல்திட்டில் ஊஞ்சல் ஆடும் உற்சவம்தான் தீர்த்தவாரி.

அன்றைக்கு எங்கள் ஊரைச் சுற்றியுள்ள 18 கிராமத்து மக்களும் குடும்பத்தோடு இரவில் ஆற்றுக்கு வருவார்கள். அது கோடைக் காலமாதலால் ஆற்றின் கரை ஓரத்தில் நீர் ஓடிக்கொண்டிருக்கும்.

மற்றபடி ஆறு முழுவதும் வண்ண விளக்குகள், பல்வகை ராட்டினங்கள், சிறிய சர்க்கஸ், பலவிதமான மிட்டாய்க் கடைகள், 'தலை மட்டும் பெண்; உடலெல்லாம் பாம்பு - பார்க்க 10 பைசா' போர்டுகள், மிகப் பிரம்மாண்டமான நாடகக் கொட்டகை... அதில் டி.ஆர். மகாலிங்கம், யு.ஆர்.ஜீவரத்தினம் நடிக்கும் வள்ளித் திருமண நாடகம்.

எங்கள் நண்பர்கள் குழு வீட்டில் முன் அனுமதி பெற்று கை நிறையக் காசுகளுடன் (மொத்தம் 3 ரூபாய் இருக்கும்) கூட்டத்திற்குள் நுழைந்தோம். பலூன்கள், சீனி மிட்டாய், காரச்சேவு என்று அதிசயமான பொருள்கள்.

நான் மணியிடம் சொன்னேன். "மணி இந்தப் பெண் தலையும் மலைப்பாம்பு உடலும் உள்ள அதிசயத்தைப் பார்க்கலாம் வா" என்று.

"நீ போய்ப் பார், நான் வெளியே நிற்கிறேன்" என்று வர மறுத்துவிட்டு ஏதோ ஒரு புல்லாங்குழல்காரனுடன் பேசிக்கொண்டிருந்தான் மணி.

நானும் சிவனாண்டியும் உள்ளே போனோம். சதுரமாகக் கயிறு கட்டி நடுவே ஒரு மேடையில் பெண்ணின் தலையும் உடம்பு முழுவதும் மலைப்பாம்பாகவும் விநோதக் காட்சி. அந்தப் பாம்புப் பெண் பேசவும் செய்தது.

"உன் பெயர் என்ன?"

"சித்ரா"

"எந்த ஊர்?"

"கோலாலம்பூர்" - பாம்புப் பெண் பேசப் பேச, எங்களுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அதற்குள் எங்கள் நேரம் முடிந்து நாங்கள் வெளியே ஓடி வந்தோம்...

(ரீல் சுற்றும்)

“கொள்கையோட ஊடலு.. கொடுக்கலேன்னா ஓடலு'

- உலகநாதன்

அரசியல் கானா

“வாள மீனுக்கும் விலாங்கு மீனுக்கும் கல்யாணம்” - சித்திரம் பேசுதடி படத்தில் வரும் கானா பாட்டு, இன்று தமிழகம் முழுவதும் பட்டையைக் கிளப்பி வருகிறது. தொலைக்காட்சி சேனல்கள், எஃப்.எம். ரேடியோக்கள் என்று எல்லா மீடியாக்களிலும் ரசிகர்களை ஆக்ரமித்து வரும் இந்தப் பாடலை, படத்தில் பாடி நடித்திருப்பவர் கானா உலகநாதன். பாக்ஸ் ஆபிஸில் அடி வாங்கியிருக்க வேண்டிய படத்தை, கானா உலகநாதன் பாட்டு கைகொடுத்து தூக்கோ தூக்கென்று தூக்கி விட்டது (பாடலுக்கு ஆடியுள்ள மாளவிகாவும் ஒரு காரணம் என்பதையும் மறுக்க முடியாது).

ஒரே பாடலில் ஓஹோவென்று கிராஃப் ஏறிவிட்ட உலகநாதனின் வீடு வடசென்னை வியாசர்பாடியில் இருக்கிறது. ரொம்ப நெருக்கடியான உஷார் ஏரியா. கொஞ்சம் தயங்கி நின்றாலும் தர்ம அடி விழும் போல இருக்கிறது. தொலைக்காட்சி மற்றும் மீடியாக்காரர்களின் கூட்டம் அந்தச் சிறு ஓட்டு வீட்டை மொய்த்துக் கிடக்கிறது. செல்போனில் தொடர்ந்து வரும் கால்களுக்குப் பதில் சொல்லி மாளாத நிலையில் இருக்கிறார் உலகநாதன். இதில் பாடலைப் பாடச் சொல்லி அன்புத்தொல்லை கொடுக்கும் ரசிகர்கள் ஏராளம். “அண்ணே கோச்சிக்காதீங்க அண்ணே! அந்தத் தேதியில் ரெண்டு கச்சேரிகள் இருக்கு” என்று பலரிடம் மன்னிப்புக் கேட்டபடி இருக்கிறார் உலகநாதன். இன்று தமிழகம் முழுவதும் அவருக்குக் கச்சேரிகள் புக் ஆனபடி இருக்கின்றன. “இந்தப் பாட்டு 1986-87லேயே நான் இயற்றின பாட்டு. அப்போ ஹார்பரில் வேலை பார்த்து வந்தேன். மீன்காரங்ககூடதான் ரொம்பப் பழக்கம்” என்கிறார் உலகநாதன். இதுவரை இவர் எழுதி, பாடியுள்ள கானா பாடல்கள் 28 கேஸட்டுகளாக வெளிவந்து பட்டிதொட்டிகளிலும் பாதையோர சிற்றுண்டி விடுதிகளிலும் மெகா டெஸிபலில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. “நமக்கு தெருமுனையில் நிற்கிறது; தண்ணி போட்டுக் கலாய்க்கறதுன்னு எந்தப் பழக்கமும் கிடையாது. இதை ஏன் சொல்றேன்னா நம்ம ஏரியா அப்படிப்பட்ட ஏரியா. ஆனா ஜனங்க அடிப்படையா நல்லவங்க. பாக்ஸிங், கால்பந்து இது தான் நமக்குப் பிடிச்ச விளையாட்டு. கானாவுக்கு மேடை அந்தஸ்து வாங்கிக் கொடுக்கணும்ங்கற வெறி உள்ளுக்குள் புகைஞ்சிட்டே இருந்துச்சு. இதில் இப்போ வெற்றியும் பெற்றுட்டேன்” என்று சொல்லி உணர்ச்சிவசப் படுகிறார் உலகநாதன். வடசென்னைப் பகுதியில் இவருக்கு கட் அவுட் வைத்தும் அழகு பார்க்கிறார்கள். ஒன்பது வயதில் முதல் கானாவைப் பாடினாராம்.

‘சித்திரம் பேசுதடி’ படத்தின் டைரக்டர் மிஷ்கினிடம் இவரை அறிமுகப்படுத்தியவர் கவிஞர் கபிலன். இதற்கு முன் ‘மச்சி

படத்தில் 'கும்மாங்கோ' என்ற கானா பாட்டும் பாடியிருக்கிறார். ஆனால் எதிர்பார்த்தபடி அது ஹிட் ஆகவில்லை. ஆனால் மீன் பாட்டு எல்லோரையும் அசத்திவிட்டது. இப்போது



மதுரைவீரன், பொறி, மிஸஸ் ராகவன் ஆகிய படங்களில் நடிக்கிறார். காமெடி டிராக் + கானா என்று கலக்கவிருக்கிறாராம். "மேடையில டி.எம்.எஸ் வாய்ஸில் சினிமா பாட்டுக்களும் பாடுவேன்" என்கிறார் இந்த கானா கவிஞர். "டிவோஷனல் சாங்ஸ்கூட பாடறேன். ஐயப்பன் மேலே ஐம்பது பாடல்கள் பாடியிருக்கேன்" என்றவரிடம் "அது சரி உலகநாதன்... தமிழ்நாட்டில் தேர்தல் வருகிறதே... அதைப் பத்தி ஒரு கானா எடுத்து வுடுங்களேன்" என்றவுடன், "ஐயோ அரசியலா... வேண்டாம் அண்ணே" என்று ஜகா வாங்கப் பார்த்தார். விடுவோமோ? கற்பனையைத் தட்டிவிட்டு அவர் பாடிய கலக்கல் தேர்தல் கானா இதோ. அவரவர் இஷ்டப்படி ராகம் போட்டுக் கொள்ளலாம்.

'வரப்போகுது தேர்தல்; கட்சிக்காரங்க மோதல்
நல்லாட்சி அமைய வேண்டி மக்களெல்லாம் தேடல்!
இதுக்கு முன்னாடி தலைவருங்க மேல
எத்தனையோ பாடல்
எவர்தான் பெஸ்ட் என்று மக்கள்கிட்ட உரையாடல்!
சுவரோரம், ரோட்டோரம் வண்ண
வண்ண 'சின்ன' மாடலு
சூப்பராகப் போடறாங்க டிஜிட்டல் பேனரு
கொள்கையோட ஊடலு, கூட்டணிக்காக சாடலு
கேட்ட தொகுதிகளைக் கொடுக்கலேன்னா ஓடலு
தேர்தலுக்குப் பின் யாருக்கு யார் ஆறுதலு தோழா
ஜனங்க பொழப்பு போகக்கூடாதே பாழா!
இப்போ கைகூப்பி கேக்கறாங்க அம்மா ஓட்டு
பின்னாடி கண்டுக்கலேன்னா எடுத்துவுடு கானா
பாட்டு.'

- கௌசி


படம்: புதூர் சரவணன்



"இந்தாடா குங்குமம் எடுத்துக்கோ" என்று கையை நீட்டினாள் ஸ்ரேயா.

"நீ கோயிலுக்கெல்லாம் கூட போவியா? ஆச்சர்யமா யிருக்கே..." என்றபடி நெற்றியில் இட்டுக்கொண்டான் வசந்த்.

"கல்கி சாரோட பொண்ணு ஆனந்தியம்மா எழுதின 'நவக்கிரகத் திருத்தலங்கள்' புத்தகம் படிச்சுட்டு எங்கப்பா ஒரு ஆன்மிகச் சுற்றுலாவுக்கு ஏற்பாடு பண்ணிட்டார். குடும்பத்தோடு போயிட்டு வந்தோம். நானும் படிச்சேன் ப்பா... என்னமா எழுதியிருக்காங்க. சூரியனார் கோயில்ல ஆரம்பிச்சு, வைத்தீஸ்வரன் கோயில், திருவெண்காடு, ஆலங்குடி, கஞ்சனூர், திருநள்ளாறு, திருநாகேஸ்வரம், கீழப் பெரும்பள்ளம், திருவாரூர்னு எல்லாத்தைப் பத்தியும் பக்காவா டீடெய்ல்ஸ் கொட்டிக் கிடக்குது புக்குல. ஓவியர் தனுஸோட கோட்டுப் படங்கள் கூடுதல் அழகு. முடிஞ்சா நீயும் ஒருமுறை படி."



"நிச்சயமா. நானும் ஆனந்தியம்மாவோட 'தெய்வத் தமிழ் நாட்டினிலே' புத்தகத்தை வாசிச்சேன். தமிழகத்தோட முக்கியமான இருபத்து நாலு கோயில் தரிசனக் கட்டுரைங்கள வாசிக்க வாசிக்க, நேர்லயே போயிட்டு

புக் சாட்

வந்துட்ட திருப்தி. நிறைய பேரோட ஆலய தரிசனக் கட்டுரைகளை நான் வாசிச்சிருக்கேன். இந்தளவுக்கு இம்ப்ரஸ் ஆனதில்ல. ஆனா ஆனந்தியம்மா மட்டும் ஸ்பெஷல். காரணம் அவங்களோட ரோஜாப்பூ எழுத்து."



"கல்கியோட பொண்ணா கொக்கா. சிகரங்கள் நமக்காக!"

"என்ன திடீர்னு சம்பந்தா சம்பந்தமில்லாம பேசற?"

"ஒண்ணும் குழப்பமில்ல. அது தனி வாக்கியம்! இது தனி வாக்கியம். 'சிகரங்கள் நமக்காக' வழக்கறிஞர் த.இராமலிங்கம் எழுதின கட்டுரைத் தொகுப்பு."

"ஓஹோ... லிங்க்குக்காக பேசுனியா.. சரி, புக் எப்படி?"

"தன்னம்பிக்கை ஊற்றெடுக்குது. நல்ல நல்ல கதைகளை உதாரணம் காட்டியிருக்கிறது அருமை. அட்வைஸ் மாதிரி இல்லாம தோள்ல கைபோட்டுப் பேசற தோழமை கிடைக்குது வாசிக்கும்போது. கைக்கு அடக்கமா, கலர்ல பிரிண்டிங் அள்ளுது மனசை! யேய்... யேய்... எங்க கிளம்பிட்ட!"



"ரெண்டு நாளா வறட்டு இருமல். அதான் அட்வகேட் இராமலிங்கம் சாரை பார்க்கலாம்னு போறேன்..."

"அவரை ஏன் பார்க்கணும்?"

"அவர்தான் டானிக் மனிதராச்சே!"

• நவக்கிரகத் தலங்கள் / தெய்வத்தமிழ் நாட்டினிலே, வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, சென்னை-17

• சிகரங்கள் நமக்காக, விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை - 2

சின்ன ஜோக்; பெரிய பரிசு!

போட்டி முடிவு-10

'சமையல் ஜோக்ஸ்'னு கேட்டதும் புகுந்து விளையாடிட்டாங்க வாசகர்கள். வந்ததுல சிறந்ததா சமைச்ச, சாரி... செலக்ட் பண்ணப்பட்ட ஜோக்குக்கு சொந்தக்காரர் தஞ்சை ராகவ்.மகேஷ். வாழ்த்துக்கள்.

"வீட்ல சாப்பிடும்போது கண்டிப்பா மெகா சீரியல் பார்ப்பீங்களா... ஏன்...?"

"ஒரு கொடுமை இன்னொரு கொடுமையை மறக்கடிச்சிரும்... அதுக்காகத்தான்!"



கொடுமையிலும் கொடுமை!

பிரசுரத்துக்குத் தேர்வானவை :

"காலை டிபனுக்கு என்ன பண்ணினே?"

"பூரியா, பொங்கலான்னு என் கணவரோட வாக்குவாதம் பண்ணினேன்..."

- தஞ்சை தாமு

★★★

"என்னங்க, சீக்கிரம் எழுந்திரிங்க. ஒரு திருடன் நம்ம வீட்ல புகுந்து, நான் சமைச்சு வெச்சதையெல்லாம் சாப்பிட்டுக்கிட்டு இருக்கான்...!"

"விடு கமலா...! காலையில போலீஸ் ஸ்டேஷனுக்கு இன்ஃபார்ம் பண்ணி 'பாடி'யை ஒப்படைச்சுடலாம்...!"

- குட்டி பிரசன்னா

★★★

"எதுக்கு ஊருக்கே கேட்கற மாதிரி பாயசம் பாயசம்னு கத்தறே?"

"பாயசம் கொதித்ததும் ஏலம் போடவும்னு சமையல் குறிப்புல எழுதி இருந்தது"

- எஸ். அபிராமிஸ்ரீ

இந்திய விளையாட்டின் லெஜண்டான பி.டி.உஷா, கேரளாவில் தடகளப் பள்ளியொன்றை ஆரம்பித்து வருங்கால சாதனையாளர்களைத் தம் மேற்பார்வையில் உருவாக்கி வருகிறார். காமன்வெல்த் கேம்ஸில் இந்தியாவின் கை ஓங்கியிருக்கும் இந்த நேரத்தில் அவரிடம் பேசினோம்.

விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்ற பின் வாழ்க்கை எப்படிப் போகிறது?

"இப்பொழுதுதான் வாழ்க்கையை அணுஅணுவாக அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். தெற்கு ரெயில்வேயில் ஜூனியர் நிர்வாக அதிகாரியாக பாலக்காட்டில் பணிபுரிகிறேன். என்னுடைய பிரதான பணியே ரெயில்வே அத்லெடிக் வீரர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துதர வேண்டியதுதான். அவர்களைப் போட்டிகளுக்கு அனுப்புவதும் அவர்களுடைய குறைகளைச் சரிசெய்வதுமே என் தலையாய பணி. அதோடு ஆறு மாதத்துக்கு முன்பு நான் ஆரம்பித்த 'உஷா ஸ்கூல் ஆஃப் அத்லெடிக்ஸு'க்காக ஓய்வு நேரங்களை அர்ப்பணிக்கிறேன்."

அஞ்சு ஜார்ஜ் உட்பட நிறைய கேரள வீரர்கள் தமிழ்நாட்டில் செட்டிலாகியிருக்கிறார்களே?

"வேலை வாய்ப்புக்காகவும் தமிழக அரசாங்கத்திடமிருந்து கூடுதல் சலுகைகள் பெறவும் கேரள வீரர்கள் தமிழகத்துக்குத் தாவுகிறார்கள் என நினைக்கிறேன். சொகுசான மெட்ரோ வாழ்க்கையும் அவர்களுக்குப் பிடித்திருக்கும். அதோடு தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் வாரி வழங்கும் வள்ளல் தன்மை. எனக்குத் தெரிந்து இவர் மட்டும்தான் விளையாட்டு வீரர்களுக்கு இவ்வளவு தூரம் சலுகைகளை வாரி வழங்கி உற்சாகம் செய்கிறார்."

இன்னொரு பி.டி. உஷாவை இன்னமும் கண்டுபிடிக்க முடியவில்லையே?

"பொறுங்கள். இன்னும் நான்கு வருடங்களில் உங்கள் கேள்விக்கு முழுமையான விடை கிடைத்துவிடும். இந்த உலகத்தில் ஒரு பி.டி. உஷா மட்டும்தானே தோன்ற முடியும். யாரையும் யாரோடும் பொருத்திப் பார்க்கக்கூடாது. அதுவுமில்லாமல் இளம் வீரர்கள் என்னை ரோல் மாடலாக எண்ண வேண்டாம். என்னால் ஒலிம்பிக்ஸில் நான்காவது இடத்தைத் தானே அடைய முடிந்தது. மாறாக இந்தத் தலைமுறை வீரர்கள் ஒலிம்பிக்கில் மெடல் வாங்க வேண்டும் என்று ஆசைப்படுபவள் நான். அதனால் யாரும் இன்னொரு பி.டி. உஷாவாக ஆக வேண்டும் என்றெல்லாம் கனவு காண வேண்டாம். என் சாதனைகளைத் தாண்டுவதே அனைவரின் குறிக்கோளாக இருக்க வேண்டும்."

தடகள வீரர்களுக்கு மீடியா வேண்டிய ஆதரவு தருகிறதா?

"இல்லை. அத்லெடிக்ஸுக்கு மீடியா கொடுக்கும் கவரேஜ் சொற்பமாகவே உள்ளது. தேசிய அளவிலான போட்டிகளைக் கூட யாரும் சீந்துவதில்லை. மீடியா எப்போதும் கிரிக்கெட்டுக்கும் தற்போது சானியா மிர்சாவின் தாக்கத்தினால் டென்னிஸுக்கும்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது."

உங்களுடைய இளம் வயதில் சானியா மிர்சாவுக்கு இன்று கிடைக்கும் புகழும் மதிப்பும் கிடைத்ததா?

"இதில் எனக்கு எந்தக் கவலையும் இல்லை. என்னுடைய பதினாறு வயது முதல் இன்றுவரை நான் அடைந்த பேரும் புகழும் ஏராளம். 16 வயதிலேயே நான் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்றேன் 20வது வயதில் நான் உலகத்தின் நான்காம்



"சானியாவின் புகழுக்கு

நிலை வீராங்கனையாக உயர்வு பெற்றேன். ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கத்தை நூறில் ஒரு பங்கு வித்தியாசத்தில்தான் தவறவிட்டேன். இந்தியா போன்ற ஏழை நாட்டில் பிறந்து, எங்கு சென்றாலும் நான் ஒரு சாதனையாளராக மதிக்கப்படுவதே நான் அடைந்த பேறுதானே. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் ஒரு விளையாட்டு வீரருக்குத் தன்னுடைய திறமையைத் தவிர பாராட்டு, மதிப்பு எல்லாம் ஒரு பொருட்டே அல்ல."

சானியா மிர்சாவுக்குக் கிடைப்பது போன்ற மீடியா வெளிச்சம் ஒரு விளையாட்டு வீரரைப் பாதிக்குமா?

"சானியா பிரமாதமான விளையாட்டு வீராங்கனைதான். ஆனால் அவர் கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் விளையாடும்போது இன்னும் கொஞ்சம் சிரத்தை எடுக்க வேண்டும். விளையாடும்போது அவருடைய கவனம் சிதறுகிறது. அவர் மீடியாவின் கவனத்தைப் பெறுவதற்கு ஆட்டம் மட்டும் காரணமில்லை. வேறு சில விஷயங்களுக்காகவும் தான். அது என்ன என்று உங்களுக்கே தெரியும். டென்னிஸில் சானியா அதிகபட்சமாக 31வது இடத்தைத்தான் அடைந்திருக்கிறார். ஆனால் பல வருஷங்களுக்கு முன்பு ராமனாத கிருஷ்ணனும் ரமேஷ் கிருஷ்ணனும் டென்னிஸ் உலகைக் கலக்கி உச்சநிலையை அடைந்தார்களே... ஏன் பயஸ்-பூபதி ஜோடிகூட பல க்ராண்ட் ஸ்லாம்களைக் கைப்பற்றினார்களே... இதெல்லாம் யாருக்குத் தெரிகிறது? இதற்கெல்லாம் காரணம் மீடியாவின் போலியான பரபரப்புதான்."

விளையாட்டு வீரர்கள் மாடலிங்கில் ஈடுபடுவது பற்றி?

"உங்களுக்கு ஸ்பான்ஸர் வேண்டுமென்றால் உங்களுடைய திறமைகளையும் சாதனைகளையும் மேம்படுத்திக் கொள்வது அவசியம். மேலும் எந்த விளையாட்டு வீரராவது அழகாக இருந்து, அதனால் மாடலிங் வாய்ப்பும் பணமும் கிடைத்தால் ஓ.கேதான். ஆனால் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும்... விளம்பரங்களினால் கிடைக்கும் பேர் புகழ் எல்லாமே மாயைதான். நம்முடைய திறமைகளே நம் பெயரை காலத்துக்கும் சொல்லும்."



படம் : ஓம்

சுயசரிதை எழுதும் திட்டமுள்ளதா?

"2012 லண்டன் ஒலிம்பிக்ஸுக்குப் பிறகு சுயசரிதை எழுதலாம் என்றுள்ளேன்."

- ச.ந.கண்ணன்

...ாரணம் வேறு!" -பி.டி.உஷா



அந்தப் பிரபல இயக்குநரிடம் உதவியாளனாகச் சேர்ந்துவிட்டான் மாரியப்பன். எல்லோரையும் போலவே இயக்குநராகும் ஆசையில் ஒரு சுப முகூர்த்த நாளில் பெற்றோர் சம்மதத்துடன் சென்னைக்கு ஊரிலிருந்து கிளம்பி வந்தவன்தான்.

ராஜராஜனின் படங்களென்றால் அவனுக்கு உயிர். அவர் அட்ரஸைத் தேடிக் கண்டுபிடித்து, அவர் அலுவலகத்துக்குத் தொடர்ந்து படையெடுத்தான். ஒருநாள் அவரது கடைக்கண் பார்வை பட, அழைக்கப்பட்டான்.

''ஏதாவது ஒரு கதை சொல்லு பார்ப்போம்!'' என்றார். மாரியப்பன் தான் எழுதிய கதை ஒன்றைச் சொல்ல ஆரம்பித்தான்.

''பரவால்ல... நல்லாருக்கு!'' என்றவர், அன்றே அவனை அஸிஸ்டெண்ட்டாகச் சேர்த்துக்கொண்டார்.

மாரியப்பன் டிஸ்கஷனில் உட்கார வைக்கப்பட்டான். முதல் ஒரு வாரம் எதுவும் பேசாமல் அமைதியாக உட்கார்ந்து அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று கவனித்தான். அடுத்த வாரம் அவனும் சிற்சில ஸீன்கள் சொல்ல ஆரம்பித்தான். மூன்றாம் வாரம் கதை விவாதத்தில் தீவிரமாகக் கலந்துகொண்டான். அந்த நேரத்தில், ராஜராஜனிடம் ஒரு பிரபல நடிகர் தன்னை வைத்து ஒரு படம் பண்ணித் தருமாறு சொல்ல... அதற்கான கதையைப் பேச ஆரம்பித்தார்கள்.

ராஜராஜன் அந்தப் பிரபல நடிகருக்கான கதையைச் சொல்ல ஆரம்பித்தார். அரை மணி நேரத்தில் கதையின் மையக் கருவைச் சொல்லி முடித்தார்.

சுற்றி இருந்த அசிஸ்டெண்ட்டுகள் எல்லோரும், ''சூப்பர் சார்!

என்றார்கள்.

மாரியப்பன் மட்டும் அமைதியாக இருந்தான்.

"என்னய்யா... மதுரக்காரன் நீ ஒண்ணும் சொல்லலை" என்றார்.

"எனக்குக் கதை பிடிக்கலை சார்!" என்றான் மாரியப்பன் வெள்ளந்தியாக.

அனைவர் முகத்திலும் அதிர்ச்சி அப்பட்டமாகத் தெரிந்தது.

ராஜராஜனின் முகம் சிவந்து போனது.

"என்னய்யா பிடிக்கல!" என்றார் கோபமாக.

"சார், கதாநாயகன் அந்தப் பொண்ணுக்கு வலுக்கட்டாயமா தாலி கட்டினவுடன், அந்தப் பொண்ணு அடங்கி, அவன்கூட வாழப்போறது நல்லால்ல சார்!"

"யோவ்... அது கிராமத்துப் பொண்ணு. தாலிக்கு மரியாதை குடுத்து, அங்க போயிடுது, இதுல என்ன தப்பு?"

"தப்புதான் சார், இந்தக் காலத்துல கிராமத்துப் பொண்ணும் சரி, பட்டணத்துப் பொண்ணும் சரி, வலுக்கட்டாயமா தாலி கட்டுனா அறுத்துத்தான் எறிவாங்க... அடங்கிப் போக மாட்டாங்க சார்!" என்றான்.

"உனக்கு இதெல்லாம் புரியாது, பேசாம அமைதியா இரு!" என்றார் பற்களைக் கடித்தபடி.

"இல்ல சார்!"

"யோவ்!... பெரிய இவனா நீ... ஒருபடம்கூட வேலை பாக்கல. என் கதையைத் தப்புங்கிறியா... நான் இருபத்தஞ்சு வருஷம் சினிமாவுல இருக்கேன். எத்தனை ஹிட் குடுத்திருக்கேன் தெரியுமா... என் அனுபவம் உன் வயசவிட ஜாஸ்தி... வாய மூடிட்டு இருக்கிறதா இருந்தா இரு... இல்ல எந்திரிச்சு வெளில போ!" என்று நரம்புகள் புடைக்கக் கத்தினார்.

மாரியப்பன் எழுந்து வெளியே வந்துவிட்டான். அன்றோடு அந்த ஆபீஸுக்குத்

ஒரு வார்த்தை!

பி.மாரிமுத்து

தலைமுழுகினான். ராஜராஜன் பிரமாண்டமாக பூஜை போட்டுப் படம் ஆரம்பித்தார்.

நண்பர்கள் மாரியப்பனை 'பொழைக்கத் தெரியாதவன்' என்றார்கள். மாரியப்பன் வேறு வேறு இயக்குநர்களிடம் வாய்ப்புத் தேடி அலைந்தான்.

ஷூட்டிங் முடிந்து படம் ரிலீசானது. ஒரு வாரத்தில் படம் படுதோல்வி அடைந்தது. போன இடத்தில் எல்லாம் பெட்டி திரும்பி வந்தது.

இயக்குநர் ராஜராஜன் தன் ஆபீஸில் தனியாக உட்கார்ந்திருந்தார். 'கதை சூப்பர்' என்று சொல்லிய அனைத்து அசிஸ்டெண்ட்டுகளும் எஸ்கேப் ஆகியிருந்தார்கள். ராஜராஜனுக்கு மாரியப்பன் முகம் நினைவுக்கு வந்தது. 'இந்தக் கதை தப்பு சார்' என்ற வாதம் அவர் காதுகளில் ஒலித்தது.

அவனைப் போன்ற நேர்மையான ஆட்களைத்தான் கூடவைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்துக்கொண்டார்.

அதேநேரம் வேறு ஒரு இயக்குநரிடம் உதவி இயக்குநராகச் சேர்ந்தான் மாரியப்பன். அந்த இயக்குநர் சுமாரான ஒரு கதையைச் சொல்லிவிட்டு, "எப்படி இருக்கு?" என்றார்.

மாரியப்பன் ஒரே வார்த்தையில் பதில் சொன்னான்.


"சூப்பர் சார்!" ○

நீங்கள் கேட்டவை - தராசு


● ஜோ. ஜெயக்குமார்,
நாட்டரசன்கோட்டை

? 'நான் அதிக நாள் சிறையில் இருந்தால் மக்களிடம் எனக்கு செல்வாக்கு வளர்ந்துவிடும் என்ற பயத்தால் தான் நான் சிறையில் இருப்பதை ஆட்சேபித்தார் கருணாநிதி' என்று வைகோ பத்தாம் பசலியாகப் பேசியுள்ளாரே...?

! பத்துமில்லை, பசலியுமில்லை... மறுபடி ஜெயிலுக்குப் போய் செல்வாக்கை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இப்போது அம்மா மறுபடி ஆட்சிக்கு வரப் பாடுபடுகிறார்; தெரிஞ்சுக்கோங்க.



• பேச்சும் போக்கும்...



• தாயும் தந்தையும்...

● ஆர். பிரகாசம்,
மருதநாடு அஞ்சல்.

? ரஜினிகாந்த் இந்தத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆதரவு இல்லை என்று சொல்லிவிட்டாரே?

! இப்படி நெகடிவ்வாகப் பேசுவதைவிட, "நான் என் மனசாட்சிப்படி வோட்டளிக்கிறேன். நீங்களும் அவரவர் மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு வோட்டுப் போடுங்கள்" என்று ரசிகர்களிடம் பாஸிடிவ்வாகச் சொல்லியிருக்கலாம்.

● சி. பரத், சென்னை - 82.

? தாங்கள் மட்டும் அளவுக்கதிகமாக அணுகுண்டுகள் வைத்துக்கொண்டு, ஈரானுக்கு மட்டும் தடை விதிக்க முற்படும் அமெரிக்காவின் நிலை சரியா?

! சரி அல்ல; அதனால்தான் உலகெங்கும் அதற்கு எதிர்ப்பு கிளம்புகிறது.

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்

? மெல்போர்ன் காமன்வெல்த் போட்டிகளில் இந்திய வீரர்கள் - வீராங்கனைகள் பதக்கங்களைக் குவித்து வருகிறார்களே?

! தொடக்கத்தில் இரண்டாம் இடம். இப்போது மூன்றாவது இடம். இறுதியில் எந்த இடம்? தென் ஆப்பிரிக்காவும் ஸ்காட்லாண்டும் நம்மைப் பின்னுக்குத் தள்ள முண்டியடிக்கின்றன. நம்மிடமுள்ள நிறைகளைப் பார்த்தால் போதாது; குறைகளையும் கண்டறிந்து சரி செய்ய வேண்டும்.

● சியாமளா ஈஸ்வரன்,
தேவூர் மேட்டுக்கடை

? திமுகவின் தொகுதிப் பங்கீட்டைப் பார்க்கும்பொழுது, கூட்டணி ஆட்சிக்கும் கருணாநிதி தயாராகிவிட்டதாகத்தானே தோன்றுகிறது?

! தி.மு.க அதற்குத் தயாராக இல்லை; நிச்சயம் அறுதி பெரும்பான்மை கிடைக்கும் என்றுதான் நம்புகிறார்கள். ஆனால் கூட்டணி ஆட்சியை மக்கள் அவர்கள் மீது நிர்ப்பந்திக்கக் கூடும்.

● ரேவதிப்பிரியன், ஈரோடு.

? "தனது ஆட்சிக்காலத்தில் இமாலய சாதனைகளை ஜெயலலிதா செய்ததால் இமய மலையே வெட்கித் தலைகுனிகிறது'' என்கிறாரே ம.தி.மு.க பேச்சாளர் நாஞ்சில் சம்பத்...

! சம்பத்து எப்படியும் பேசும்!



• சிறையும் செல்வாக்கும்...

● க. குமரேசன்,
சென்னை - 49

? அண்மையில் படித்துப் பரவசமடைந்த கவிதை வரிகள்...?

! எனைச் சுற்றி ஏற்படும்
ஊமை வெளிச்சத்தில்...

உண்மை நுரைக்க நுரைக்க - ஒரு
மௌனம் ஓடிக் கொண்டிருக்கிறது.

- இப்படி ஒன்றல்ல இரண்டல்ல; பல வரிகள்... கபிலன் வைரமுத்துவின் 'கடவுளோடு பேச்சு

வார்த்தை' தொகுப்பில், அம்மாவின் மென்மை, அப்பாவின் வைராக்கியம் - இரண்டையும் உள்ளடக்கி ஒளிரும் தனித்தன்மை.

● ஆர். செல்லம்மாள், மதுரை - 16★

? கிராமப்புற குளங்கள் - ஏரிகளை அந்தந்த கிராம மக்களே பராமரித்து வருவதற்கு எது தடையாக இருக்கிறது?

! பாழும் அரசியல்தான்! உள்ளாட்சி அமைப்பாளர்கள் கட்சி சாராதவர்களாக இருந்தவரை, ஊர் நலன் ஒன்றே கருதிச் செயல்பட்டார்கள்; மக்களைப் பணிகளில் ஈடுபடுத்தினார்கள். குடிமராமத்து என்று இதற்குப் பெயர். இப்போது கட்சி சார்பு ஏற்பட்டுவிட்ட பிறகு, நலத் திட்டங்கள் அரசியல் சிக்கல்களிலும் ஈகோ பிரச்னைகளிலும் சிக்குண்டு நகராமலே போய்விடுகின்றன.



● ஆளுமையும் ஆதரவும்...

ரஜினி இப்படிச் சொல்லலாமா...?

● ஜோ. பன்னீர்செல்வம், சென்னை - 12 ❒

? "ஒரே கட்சி ஆட்சியில் தொடருமானால் அக்கட்சிக்கு ஆணவம் அதிகரிக்கும்; பயம் போய்விடும்" என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயலர் தா.பாண்டியன் கருத்து தெரிவித்துள்ளாரே...?

! ஆட்சியை மக்களுக்காக, மக்கள் சார்பில் நடத்துகிறோம்; மக்களின் பிரதிநிதிதான் நாம்; மக்கள்தான் எஜமானர்கள்; நாம் அல்ல என்பதை மறக்காமல் இருந்தால் ஆணவமே ஏற்படாது - தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் ஏற்படாது.

● ஜே.டி.ஆனந்தன், மதுரை - 5.

? இன்றைய தமிழ் சினிமாவில் தமிழ்க் கலாசாரம் இருக்கிறதா?

! சினிமா இருக்கிறது. ○

❒ ரூ 100 பரிசு பெறுபவர்:
ஜோ. பன்னீர்செல்வம்,
பழைய எண். 65,
சுப்பராயன் செட்டி ஐந்தாவது
தெரு, நம்மாழ்வார்பேட்டை,
சென்னை 600 012.

★ ரூ 50 பரிசு பெறுபவர்:
ஆர். செல்லம்மாள்,
'பிரபு இல்லம்'
22, இரண்டாவது தெரு,
அசோக்நகர், கோச்சடை,
மதுரை 625 016.

ஒற்றன்



நம்ம கலிங்கப்பட்டி யாரு ஜெயா டி.வி.க்குப் பேட்டி கொடுத்தாலும் கொடுத்தாரு. அ.தி.மு.க. ரத்தத்தின் ரத்தங்கள் எல்லாம் அப்படியே புல்லரிச்சுப் போயிருக்காங்கப்பு. அன்னிக்கு அம்மா கட்சி ஆபீசுல அதுதான் செம ஹாட் டாபிக். இதுதவிர, வட்டம், மாவட்டம், ஒன்றியம்னு கட்சி பொறுப்புல இருக்குற ஒவ்வொருத்தரும் ஆளுக்கொரு அஜெண்டாவோட பார்ட்டி ஆபீஸுக்கு ஆஜராகி, பல மேட்டர்களைப் பத்தி உற்சாகமா பேசிக்கிட்டு இருந்தாங்க. அப்படியே காதை விட்டேன்

"என்னா மாப்ளே... அம்மா டி.வி.யில வைகோ பேட்டிய பார்த்தியா...? இல்ல... மப்புல தூங்கிட்டியா...?"

"அட என்னாண்ணே... அதைப் பார்க்கணும்னு தானே டாஸ்மாக் ஏரியா பக்கமே போவல... பேட்டியப் பார்த்துட்டு, பன்னிரண்டு மணிக்குத் தான் படுத்தேன்."

"எப்படி இருந்துச்சு..."

"ம்... மூச்சுக்கு முந்நூறு தடவை புரட்சித்தலைவின்னு சொல்லி புல்லரிக்க வச்சுட்டாரு. நம்ம ஆளுங்க செம குஷியா இருக்காங்க..."

"டேய் மாப்ள... அவரு நம்மள குஷிப்படுத்தறதுக்காகச் சொல்லல. கருணாநிதியை வெறுப்பேத்தனும்னுதான் பேசியிருக்காரு..."


இப்படியே பேசிக்கிட்டு இருந்தவங்க, சைடுல நின்ன என்னைய பார்த்துட்டு, சட்டுன்னு டாபிக்கை மாத்திட்டாங்க.

சரின்னு நானும் ஆபீஸோட பின்பக்கத்துல இருக்குற குட்டியூண்டு கேண்டீன்ல முறுக்கு வாங்கித் தின்னுட்டு, அங்க போட்டிருந்த நாற்காலில உட்கார்ந்து கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்தேன். கொஞ்ச நேரத்துலயே தாமரைக்கனி ரேஞ்சுக்கு மோதிரம் போட்டுக்கிட்டு, செல்லுல ஸ்பீக்கரை முழுங்கின மாதிரி 'மெதுவா' பேசிக்கிட்டு ஒருத்தர் வந்தாரு. பேசற டயலாக்கை வச்சுப் பார்த்தா, வடக்குப் பக்கம் இருக்குற மாவட்டச் செயலாளர் கணக்கா தெரிஞ்சது. அவரு பேசினதை அப்படியே சொல்றேன். கேட்டுக்கோங்க.

"இல்லப்பா... இவ்ளோ நாள் தான் கதர்காரனுங்க நம்ம தொகுதிய எப்டியாவது லவட்டிப்பாங்க. இந்தத் தடவை அந்தத் தொல்லை இல்லன்னு பார்த்தா, புதுசா வந்து கொடச்சல் குடுக்குறாங்க. இந்தத் தடவை விட்டுடக் கூடாது. இப்பவும் கோட்டை விட்டுட்டோம்னு வச்சுக்கோ, கடைசில தொகுதியில கட்சியே காணாமப் போயிடும். இதை மந்திரிகிட்ட தெளிவா சொல்லிப்புடு"ன்னு நிறுத்த, அந்தப் பக்கம் இருக்கிறவரு ஏதோ பேசினாரு. உடனே இவரு,

புதுசா வந்த

"என்ன செய்றோமோ தெரியாது. தொகுதி கையை விட்டுப் போயிடுச்சுன்னா, ஊர்ல ஒருபய மதிக்க மாட்டான். சொல்லிட்டேன்..."ன்னு



தடைச்சல்!

படங்கள் : ராஜன்



• அ.தி.மு.க. தலைமை நிலையத்தில் உடன்பிறப்புக்கள்

டுப்பா செல்லை கட் பண்ணிட்டு கிளம்பிட்டாரு.

வாசல்ல ஒரு டாட்டா :மோல சாய்ஞ்சுக்கிட்டு ரெண்டு பேரு ரொம்ப சுவா ஸ்யமா பேசிக்கிட்டு இருந் தாங்க. பேச்சுல சினிமா வாடை அடிக்கவே, கிட்ட போய் நின்னுக்கிட்டேன்.

"ஏம்பா.. இப்போ புதுசு புதுசா நடிகருங்க கட்சிக் குள்ள வந்திருக்காங்களே. அவங்களை வச்சு மீட்டிங் போடணும்னா எவ்ளோப்பா செலவாகுது?"

"பழைய ஆளுங்கன்னா 75ல இருந்து ஒரு லட்சம் வரைக்கும் தரணும்னே... புதுசா வந்திருக்குற ஆளுங் களுக்கு கொஞ்சம் ஏத்த இறக்கமா கொடுத்தா போதும் வந்திடுவாங்க."

"அது சரி. நடிகைங்க யாரும் கட்சிக்குள்ள வர லியாப்பா.."ன்னு கண்ணடிக்க, 'ஆஹா.. ரூட்டு மாறுதுப்பா ரத்தம்'னு இடத்தைக் காலி பண்ணினேன்.



மெர்க்குரி பூக்கள்

நாயகன், நாயகியோட குணாதிசயம் என்னாங்கிறதை தலைப்பே பளீர்னு சொல்லிடுது. பாதரசத்தைப் போல ஒட்டாத ரெண்டுபேர். அவங்களுக்குக் கட்டாயத் திருமணம் செஞ்சு வைச்சா ஒத்துப் போவாங்களா? நம்ம ஊரு சினிமாவின் ஆல் டைம் ஃபேவரைட் கதை.

நமக்கு மத்தியில வாழும் நடுத்தரக் குடும்பத்து நிஜ கேரக்டர்களிலிருந்து பிரதி எடுத்துப் படையல் போட்டிருக்கார் இயக்குநர் ஸ்டேன்லி.

ஒரு பக்கம் உலகமயமாக்கலோட நேரடி விளைவு காரணமா மேற்கத்திய குணாதிசயங்களோட பாதிப்புகளை உள்வாங்கினபடி வளரும் தலைமுறை, மறுபக்கம் ரத்தத்துல ஊறிப்போன நமது கலாசார மதிப்பீடுகளைக் கைவிட முடியாமல் தவிக்கறதை, கார்த்திக் - அன்புச்செல்வி பாத்திரங்கள் மூலமா நறுக்குத் தெறிச்ச மாதிரி காட்டி நெகிழ வைச்சு சபாஷ் வாங்கிடுறாரு டைரக்டர்.

பெற்றோரோட விருப்பத்துக்காக திருமணம் செஞ்சுக்கிட்டு டாம் அண்ட் ஜெர்ரியைப் போல சீறிக்கிற ஜோடி... மெல்ல மெல்ல காதலை உணர்றதும்... இதற்கிடையில தலைமுறை இடைவெளி காரணமா இவங்களைத் தப்பா புரிஞ்சுக்கிற அப்பாக்கள், இவங்களைப் பிரிச்சு வைக்க முயல்றதும்... கடைசியில இணைவாங்களான்னு பதற்றம் அடையச் செய்யறதுமாய் திரைக்கதை சரியான பாதையில போயிருக்கு.

கதாநாயகனை டாமினேட் பண்ற விதமா கருணாஸ் ஏற்றிருக்கும் துணைக் கதாபாத்திரத்தை நேர்மையா வடிச்சதுக்கு ஸ்டேன்லிக்கும் கதை மீது நம்பிக்கை வச்சு இதை ஒப்புக்கிட்டு நடிச்சிருக்குற ஸ்ரீகாந்துக்கும் ஸ்பெஷல் பாராட்டுக்கள்.

கொசு வண்டியைப் போல ஊருக்கே புகைவிட்டபடி போற பழைய லூனா மோட்டார் சைக்கிள்ல கல்லூரி, பார்ட் டைம் கொரியர் வேலைன்னு டிஃபிகல் நடுத்தர குடும்பத்துப் பையனா ஸ்ரீகாந்த் செம துறுதுறுதிலகம். மீரா ஜாஸ்மினும் நடிப்புல குறை வைக்கல. படத்தில் சோபிக்காத ஒரே ஆள் இசையமைப்பாளர் கார்த்திக்ராஜா.

வன்முறை, ஆபாச குவியல்களுக்கு மத்தியில கல்லூரி இளசுகள் + குடும்பத்தோடு பார்க்கன்னு ஒரே கல்லுல இருதரப்பையும் கவர டீசன்டா மாங்காய் அடிச்சிருக்காங்க.

- லஜ்ஜாவதி


For Exclusive Designs,
Inexpensive Prices !
NARAYANA
pearls & gems
KASI ARCADE
Next to GRT Hotel,
116,Thyagaraya Road,
T.Nagar, Chennai-17
Ph:004 - 2815 3457 / 5624
FATHIMA PLAZA
98,Pondy Bazar,
T.Nagar,
Chennai -17.
Ph: 044-2815 5094 / 3660
ADYAR
57, L.B.Road,
(opp.Ganapathi Theater),
Chennai -20.
Ph:044- 24462592
VADAPALANI
1st Floor, RAAHAT PLAZA,
(Near Vadapalani Bus Terminus),
Arcot Road,Chennai-26.
Ph:044-55145092
NUNGAMBAKKAM
G9-ELDORODO BUILDING
N.H.rOAD,
Chennai-34
Ph:044-5218 1463

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.

அடையார் இயற்கை வைத்திய மையம்

"அடையார் நேச்சர் க்யூர்! பிணி உடையவர்களின் துயர் போக்கும் ஆலமரமாக செயல்பட்டு வருகிறது. இம்மையத்தின் தலைமையிடத்தில் இருக்கும் திரு. புருஷோத்தமன் திக்கற்றவர்களை வழி நடத்தும் ஒரு தெய்வமாகவே காட்சியளிக்கிறார்"- இயற்கை தரும் அருமருந்து என்ற தலைப்பில் ஜனவரி 2006 'மங்கையர் மலரில்' வெளியானது.



• மத்திய உள்துறை அமைச்சர் திரு. சிவராஜ் பாட்டீலுடன் எங்கள் டைரக்டர் திரு. S.P. நாயுடு

S.P. Naidu - Ex. President of Madras Diamond Manufacturer's Association & Former Trade Protocol Agent of Romania

கீழ்க்கண்ட நோய்களுக்குச் சிறப்பு சிகிச்சை அளிக்கிறோம்:

- மூட்டுவலி (எல்லா வகை) - Arthritis (All Types)
- ருமடாய்டு ஆர்த்ரெடிஸ் - Rheumatoid Arthritis
- குதிகால் எலும்பு வளர்ச்சி - Calcaneal Spur
- வெரிகோஸ் வெயின்ஸ் - Varicose Veins
- கழுத்து, இடுப்புவலி - Spondilitis
- தூக்கமின்மை - Sleeplessness
- ஆஸ்துமா - Asthma
- உடல் பருமன் - Obesity
- சர்க்கரை நோய் - Diabetes
- பர்கின்ஸன்ஸ் - Parkinsons

அனைத்து வியாதிகளுக்கும் தாங்கள் எங்களிடம் ஆலோசனை பெறலாம்.

இங்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள்:



- Therapeutic Herbal Oil Massage
- Herbal Paste Application & Soaking
- Hydrotherapy
- Physiotherapy
- Yoga Therapy
- Oxygen & Relaxation Therapy
- Diet Therapy
- Health Counselling

பக்க விளைவுகளற்ற மூலிகை மருந்துகளும் கொடுக்கப்படுகின்றன.

இங்கு யோகா வகுப்புகள் சிறப்பாக எடுக்கப்படுகின்றன.

Team of Doctors: Expert Doctors in Siddha, Ayurveda, Naturopathy, Yoga. Retired Senior Physiotherapist from Jipmer Medical College - heads our physiotherapy department.

ADYAR NATURE CURE CENTER ™

Registered Hospital

No. 6, II nd Cross Street, Kasturba Nagar, Adyar, Chennai - 20. Ph: 044 - 2441 3399, 2440 2470.

email : adyarnaturecure@yahoo.com **Website** : www.adyarnaturecure.com

குறிப்பு: A/c., Deluxe rooms, Rooms, ஜெனரல் வார்டு, கலர் டி.வி., போன் வசதி உள்ளன. சைவ உணவு மட்டும் வழங்கப்படும். முன்பதிவு அவசியம்.